அறைவு 04 இயம் 29 Feb 20-26, 2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

IELTS
LIFE SKILL
UK SPONCER
VISA
CALL:
0770203201

HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050


# கிழக்கு முதலமைச்சரின் எழுத்துமூல வாக்குறுதி காற்றில் பறந்தது



முதலமைச்சர் நியமனத்தின் போது



எந்தவொரு வெளி மாவட்ட மீனவர்களுக்கும் திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது என கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ. நசீர் அஹமட் வழங்கிய எழுத்து மூல உத்தரவாதத்தையும் மீறி நூற்றுக்கும் மேற்பட்ட வெளி மாவட்ட மீனவர்கள் மீன்பிடித் தொழிலை குச்சவெளி கடற் பிரதேசத்தில் தொடர்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.




பக் 17

## யாருக்காக அஞ்சுகின்றார் சனாதிபதி ?

வெலிக்கடை சிறைச்சாலையில் கொல்லப்பட்ட கைதிகள் தொடர்பான விசாரணை அறிக்கைகளை வெளியிட சனாதிபதி தயங்குவதாகவும் அவ்வறிக்கையின் ஊடாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களைக் கைது செய்து விசாரிக்க நல்லாட்சி அரசாங்கம் பின்நிற்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச மட்டத்திலும் உள்ளூரிலும் கடும் கண்டனங்களுக்குள்ளான இக்கொலைகளுக்காக சட்டம் இதுபோதுவரை தனது கரத்தை பயன்படுத்தவில்லை என மனித உரிமை ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்து உள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் அமைக்கப்பட்ட விசாரணைக்குழு தனது விசாரணைகளை முடித்துக் கொண்டுள்ளது. அவ்விசாரணைகளின் இறுதி வடிவமாக வெளிவந்திருக்கும் அறிக்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஆனால் சில பல காரணங்களை முன்நிறுத்தி அந்த அறிக்கையின் உள்ளடக்கத்தை வெளியிட அரசாங்கம் தற்போதுவரை தயாராகவில்லை.

இவ்வாறிருக்கும் நிலையில் இவ்வறிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட மிகமுக்கியமான சாட்சியொருவர் கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பது அவ்வறிக்கையின் காத்திரத் தன்மையினை வெளிப்படுத்தியுள்ளது.

பக் 08

## "சனாதிபதி தீங்கு விளைவிக்க மாட்டார்"

### சம்பூர் மக்கள் நம்பிக்கை

"தற்போதைய ஜனாதிபதியை நாம் மிகவும் நம்புகின்றோம். அவரின் வெற்றிகாரணமாகவே நாம் மீள்குடியேற்றப்பட்டோம். ஆகவே அவர் எமக்கு தீங்கு விளைவிக்கமாட்டாரென நாம் விசுவாசிக்கின்றோம். இந்நிலையில் நீங்கள் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ள இந்த அனல் மின்நிலயத்தை எமது பகுதியில் அமைக்க வேண்டாம்" என மக்கள் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்தனர்.

மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய சம்பூர் பகுதிக்கு கடந்த வியாழன் மாலை சென்றபோது இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது மேற்படிகோரிக்கையை



பக் 17



## "தேசிய தமிழினத்தின் கனவான தமிழீழம் கிடைத்து விடும்"

### திருகோணமலையில் விமல் வீரவன்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## பசுவின் தோலுடன் புலிகள் புல்லைத் தின்னுமா??

சனவரி 8ம் திகதியன்று பல நூற்றுக் - கணக்கான வாக்குறுதிகளை வழங்கிய படி ஸ்ரீலங்காவில் நல்லாட்சிக்கான அணி ஆட்சிக் கட்டேறியது.

அவ்வாறு ஆட்சிக்கட்டேறிய அணியின் வெற்றிக்குத் தாமும் பங்காளிகளாகித் தமக்குரிய வாழ்வை மீட்டுக்கொள்ளும் பேராவலுடன் தமிழ் மக்கள் அந்நல்லாட்சிக்காக வாக்களித்தனர்.

ஒரு கட்டத்தின் தேசியத் தமிழ் இனத்தினதும், சிறுபான்மை முஸ்லிம் இனத்தினதும் வாக்குகளினால்தான் நல்லாட்சிக்கான அணி ஆட்சிக்கட்டேறியது என்றும் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும் ஆட்சிக்கட்டேறிய பின்னர் கடந்துள்ள ஒரு வருடமும் ஒரு மாதமும் தேசியத் தமிழினம் கொண்டிருக்கும் நம்பிக்கைகளை கேள்விக்-குறியாக்கும் நடவடிக்கைகளே தொடரும் நிலை காணப்படுகின்றது.

காட்டாட்சி நடைபெற்ற காலத்திலிருந்து தேசியத் தமிழினம் ஒரு வகையில் சற்று நிம்மதிக் காற்றைச் சுவாசிக்கத்தக்க வகையில் நல்லாட்சி தனது நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பது உண்மை.

ஆனால் அவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுக்காது இருந்திருந்தால் தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சனைக்கான தீர்வைச் சர்வதேசம் பெற்றுக்கொடுத்துவிடும் என்ற பயம் மறைக் - கரமாகச் செயற்பட்டது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்துடன் நல்லாட்சியின் பின்னர் இராணுவ கைக்கொள்ளளுக்கு உட்பட்டிருந்த தமிழர்களின் காணிகள் சிலவற்றை விடுவித்திருந்தமை கூட ராசபக்சாக்களின் காட்டாட்சியில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு அமையவே மெற்கொள்ளப்பட்டது என்பதை நல்லாட்சியின் பிரதமர் யாழ்ப்பாணத்தில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆக மொத்தத்தில் நல்லாட்சி தானாகவே முன்வந்து தேசியத் தமிழினத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முன்வரவில்லையென்பதே உண்மையாக இருக்கின்றது.

மிக முக்கியமான விடயமாக, ஐக்கிய நாடுகள் சபையில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மீது கொண்டு வரப்படவிருந்த கடும் சொற்பிரயோகங்களைக் கொண்டிருந்த மனித உரிமைத் தீர்மானத்தினை மென்சொற் பிரயோகத்திற்கு மாற்றி தமது நாட்டின் மீது கொண்டு வரப்பட்ட தீர்மானத்தைத் தாமே ஏற்றுக்கொண்டு அம் மென்சொற் தீர்மானத்தின் முன்மொழிவுகளை முன்னெடுப்பதாக உறுதிமொழி-யளித்த ஸ்ரீலங்கா அரசானது தற்போது வரை அவற்றின் பெரும்பாலான விடயங்களைச் செயற்படுத்தும் முயல்வு அற்றிருப்பதை அனைவரும் அறிகின்றோம்.

அரசியலமைப்பை மாற்றினால் மட்டுமே எவ்வகையான முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ள முடியும் என தற்போது கூற முனையும் நல்லாட்சி இந்தக் கருத்தை ஐக்கிய நாடுகள் சபையில் கூற மறந்ததேன் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். மேலும் இரண்டு முக்கிய விடயங்களை இங்கு நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

இந்த வாரத்தில் காணாமலாக்கப்பட்டோரைக் கண்டறியும் சனாதிபதி ஆணைக்குழுவின் ஆயுளை மேலும் ஆறு மாதங்களினால் சனாதிபதி நீடித்துள்ளார்.

குறித்த ஆணைக்குழுவானது வினைத்திறன் அற்றது என வடக்குகிழக்கின் சிவில் சமூக அமைப்புக்கள் பல தடவைகள் அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தியிருந்-தற்கும் மேலாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை ஆணையாளர் ஹுசைன் அவர்களும் அவ்வாணைக்குழு-வின் வினைத்திறனின்மை பற்றித் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் 15.08.2013ல் உருவாக்கப்பட்ட இந்த ஆணைக்குழுவிற்குத் தனது முதலாவது முறைப்-பாட்டைச் செய்த தேசியத் தமிழினத்தவரின் காணாமற்போன உறவுக்கு என்ன நடந்தது என்பதையே கண்டு பிடிக்க முடியாது நாளாந்தம் முறைப்பாடுகளை மட்டும் பதிந்துவரும் இவ்வாணைக்குழுவின் ஆயுட்காலத்தை நீடித்திருப்பது ஏன்? முறைப்பாடுகளை மட்டும் பதிவதானால் கிராம உத்தியோகத்தர்கள் மூலம் முறைப்பாடுகளைப் பதிந்து கோவைப்படுத்திய பின்னர் விசாரணைகளை மிக இலகுவாக மேற்கொண்டிருக்க முடியுமே??????

அடுத்து வெலிக்கடைச் சிறைச்சாலையில் 2012ல் நடைபெற்ற கலவரத்தின் மூலம் திட்டமிட்டுப் பலர் கொல்லப்பட்டனர் என்பதை உறுதிப்படுத்தியும் அவ்வாறு கொலை செய்யக் கட்டளையிட்டவர்கள் யாரென்பதைப் பற்றியும் விபரங்களைக் கொண்டுள்ள விசாரணை அறிக்கை நல்லாட்சியின் சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் அவ்வறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்குவது ஏன் என்ற கேள்வியுடன் அந்த சுதந்திர விசாரணை அறிக்கையை வெளியிடத் தயங்குவது ஏன் என்ற கேள்வியும் எம்முன்னே தொக்கி நிற்கின்றது.

பசுவின் தோல்களைப் போர்த்திக்கொண்டு புலிகளால் புல்லைத் தின்ன முடியுமா???

## நீனாக்கேணி முஸ்லிம்களுக்கு காணி உறுதி

### கடந்த வருடம் போராட்டம் - இந்த வருடம் தீர்வு

திருகோணமலை, தோப்பூர், நீணாக்கேணி பிரதேசத்திலுள்ள 39 குடும்பங்களுக்கு எதிர்-வரும் ஏப்ரல் மாதம் காணி உறுதிப்பத்திரங்கள் பெற்றுக்கொடுக்கப்படுமென திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ. புஸ்பகுமார தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்பின் அழைப்பை ஏற்று நீணாக்கேணி கிராமத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சென்று குறித்த காணிகளைப் பார்வையிட்ட பின்னர் பொதுமக்களிடம் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தோப்பூர் -நீணாக்கேணி கிராமத்திலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான 49 ஏக்கர் காணி, கடந்த 2014ஆம் ஆண்டு வனஜீவராசிகள் திணைக்களத்துக்குச் சொந்தமானதென வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்-பட்டிருந்தது.

ஹலீம்



இந்நிலையில் இக்காணியில் தாம் பரம்பரை பரம்பரையாக வசித்து வந்ததாகவும் காணியைத் தங்களுக்குப் பெற்றுத்தருமாறும் இக்கிராமத்திலுள்ள காணி உரிமையாளர்கள், கடந்த வருடம் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்

## மாகாணசபை உதவி

மூதூர் கிழக்கு சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியமரந்தர்களுக்கு விவசாய உகரணங்களும் பலன் தரு மர கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண மீள்குடியேற்ற அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து 100 குடும்பங்களுக்கு இவை வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த 11.02.2016 இவற்றினை கல்வி மீள்குடியேற்ற அமைச்சர் சி.தண்டாயுதபாணி விவசாய திணைக்கள அதிகாரிகள் சகிதம் வழங்கி வைத்தார். ஒவ்வொரு குடும்பங்களுக்கும் ஒரு தெளிகருவி, மா மரக்கன்று தென்னங்கனறு என்பன வழங்கி வைக்கப்பட்டன.

## அனல் மின்நிலையத்தால் வேலை வாய்ப்புக்கள்

அனல் மின் நிலையத்தினூடாக வடக்கு கிழக்கு இளைஞர் யுவதியினருக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார். இலங்கை மின்சார சபையின் ஏற்பாட்டில் "இருள் அகன்று, முழு நாடும் ஒளிமயம் எனும் தொனிப்பொருளிலான செயற்திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் கடந்த வியாழன் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இங்கு தொடர்ந்து கருத்துரைத்த அமைச்சர்,

எதிர்வரும், ஏப்ரல் மாதத்திற்குள் நாட்டில் வாழ்ந்துவருகின்ற அனைவருக்கும் மின்சாரம் சென்றடைய வேண்டும் எனும் வேலைத்திட்டத்தின் கீழ் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, பொதுமக்கள் தமக்கான விண்ணப்பப் படிவங்களை கிராம சேவையாளர்களிடம் பெற்று அதனைப் பூரனப்படுத்தி ஆரம்பக்கட்டணங்கள் எதுவும் அறவிடப்படாத தவணை முறை அடிப்படையில் ரூபா 680ரூபா கொடுப்பனவினை 67 மாதத்திற்கு செலுத்தி அனைவராலும் புதிய மின் இணைப்புகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

பாதுகாப்பான உயர் தொழில் நுட்பத்தினைக் கொண்டு சாம்பூரில் அமைக்கப்பட இருக்கின்ற அனல் மின் நிலையத்திநூனூடாக கிழக்கிலுள்ள பல இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்க உத்தேசித்துள்ளதாக அமைச்சர் இங்கு குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா, கிழக்கு மாகாண அமைச்சர்களான சி.தண்டாயுதபாணி, ஆரியவதி கலபதி நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். தௌபீக், இம்ரான் மகருப், அப்துல்லா மகருப், கலாநிதி.அருன சிறிசேன, மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார மற்றும் பல அரச அதிகாரிகள் பங்கேற்றனர்..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# இலங்கைச் செய்திகள்

## கண்டுபிடிக்கப்பட்ட மர்ம கிணற்றை தோண்ட நடவடிக்கை

மன்னார்

மன்னார், திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி காணப்பட்ட இடத்துக்கு அருகாமையில் கண்டுபிடிக்கப்பட்ட மர்ம கிணற்றை, மன்னார் நீதவான் ஆசிர்வாதம் கிரேசியன் அலெக்ஸ்ராஜா நேற்று வெள்ளிக்கிழமை நேரடியாக சென்று பார்வையிட்டார்.

அக்கிணற்றை தோண்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கமைய, குறித்த கிணறு நேற்று வெள்ளிக்கிழமை, மன்னார் நீதவான் முன்னிலையில் தோண்டப்பட இருந்த நிலையில், குறித்த கிணறு தோண்டுவதற்கான ஆயத்த நிலை தொடர்பாக மன்னார் நீதிமன்றத்தில் ஆராயப்பட்டது. இதன்போது, மன்னார் நீதிமன்றத்தில் ஆஜரான மன்னார் காவல் நிலைய பொறுப்பதிகாரி, அடையாளம் காணப்பட்ட குறித்த கிணற்றைச் சுற்றி மழை நீர் தேங்கி நிற்பதாகவும் இதனால் குறித்த கிணற்றை தோண்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மன்றில் தெரிவித்தார். இது தொர்பில் விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் ஆசிர்வாதம் கிரேசியன் அலெக்ஸ்ராஜா, குறித்த கிணற்றை வரட்சியான காலப்பகுதியான எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 4ஆம், 5ஆம், 6ஆம் திகதிகளில் தோண்டுவதற்கு உத்தரவிட்டார்.

குறித்த பகுதிக்கு நீர் வராத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட நீதவான், குறித்த பகுதியில் கடந்த காலங்களில் வசித்து வந்தவர்களின் விபரங்களை பெற்று மன்றில் சமர்ப்பிக்குமாறும் குறித்த பகுதிக்கு பொறுப்பான கிராம அலுவலகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

## மீண்டும் உண்ணாவிரத போராட்டம்
### தமிழ் அரசியல் கைதிகள் அறிவிப்பு

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் தமிழ் அரசியல் கைதிகள் சிலர் மீண்டும் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

தமக்கான விடுதலையை வலியுறுத்தி இரண்டு தடவைகள் உண்ணாவிரத போராட்டத்தில் அரசியல் கைதிகள் ஈடுபட்டனர். இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரசாங்கத்தின் உறுதிமொழிக்கு அமைய அவர்கள் உண்ணாவிரத போராட்டத்தை கைவிட்டனர்.

எனினும் அரசாங்கம் தமக்கு வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்ற தவறியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வழக்கு தாக்கல் செய்யாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் வழக்குகளை துரிதப்படுத்துமாறு கோரியுமே இவர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டவுள்ளனர்.

## "நான் தாவவில்லை" - "அனைத்தையும் என் மீது சுமத்தாதீர்கள்"
### முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே தாவினார் என்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, தன்னால் பலப்படுத்தப்பட்ட சுதந்திரக் கட்சியை விட்டு ஒருபோதும் விலகப்போவதில்லை என்றும் கூறினார்.

அரச தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பு செய்யப்பட்ட விளம்பரங்களுக்கான கொடுப்பனவை செலுத்த தவறிய குற்றச்சாட்டு தொடர்பான சாட்சியங்களுக்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமையும் முன்னிலையாகி சாட்சியமளித்தார். இதன் பின்னர் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து தெரிவித்தபோதே அவர இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கத்திலிருந்தும், கட்சியிலிருந்தும் விலகி அரசாங்கத்தை கவிழ்த்தது யார்? மைத்திரிபால சிறிசேன அன்றி நான் அதனை செய்யவில்லை என்றார்.



## புதிய ஆளுநர் குறித்து சி.வி

வடமாகாண ஆளுநர் தனது கடமைகளைப் பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற போது, வடமாகாண புதிய ஆளுநராக வந்திருக்கும் ரெஜினோல்ட் குரே தமிழ் பேசக் கூடியவராக இருப்பது மகிழ்ச்சியளிப்பதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், ஆசிரியராக இருந்தவர் கொடுத்துத்தான் பழக்கம் யாரையும் கெடுத்துப் பழக்கமிருக்காது. விஜயகுமாரதுங்கவின் கட்சியில் இருந்தவர். தமிழ் மக்களின் பிரச்சினைகளை கவனத்தில் கொள்வார். இவர் தமிழ் பேசும் தகுதி கொண்டவர் என்பதால், ஒவ்வொருவரும் கூறும் விடயங்களின் மனோநிலை என்ன என்பது அவரால் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். மேலும் இவர் அரசியல் அனுபவமும் கொண்டவர் என்பதால், மக்களின் எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்வார் என்ற நம்பிக்கையும் உள்ளது என்றார்.

## மீண்டும் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக தெரிவிப்பு

சட்டக்கல்லூரியில் பரீட்சை மோசடியில் ஈடுபட்டதாக தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மூத்த புதல்வரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராக சக மாணவரான துஷார ஜயரத்ன மீண்டும் வழக்கு தொடரவுள்ளார்.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர் நாமல் ராஜபக்ஷ, சட்டக்கல்லூரியில் பரீட்சை எழுதிய விதம் தொடர்பில் பெரும் சர்ச்சைகள் ஏற்பட்டிருந்தன. இணையத்தள வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட இரகசியமான அறையில் அவர் தனித்து பரீட்சை எழுதியிருந்ததாக அதே ஆண்டில் பரீட்சை எழுதிய சட்டக்கல்லூரி மாணவரான துஷார ஜயரத்ன, இதனை சவாலுக்கு உட்படுத்தி அடிப்படை உரிமை மனுவொன்றை ஸ்ரீலங்கா மனித உரிமை ஆணைக்குழுவில் தாக்கல் செய்தார்.

இந்த சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட கொலை அச்சுறுத்தல்கள் காரணமாக துஷார பாதுகாப்பு தேடி அரசியல்வாதி ஒருவரது உதவியுடன் சுவிட்ஸர்லாந்திற்குச் சென்று தஞ்சமடைந்துள்ளார்.

எவ்வாறாயினும் மனுமீதான பரிசீலனைகளின் இறுதியில் நாமல் ராஜபக்ச சட்டக்கல்லூரி தேர்வில் தோற்றியிருந்த வேளை துஷார ஜயரத்ன பரீட்சைக்கு சமூகமளித்திருக்கவில்லை என்று கூறப்பட்டது. இதேவேளை நாமல் ராஜபக்சவுக்கு எதிராக துஷார,



கடந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையிடமும் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்க தாகும்.

## ஆர்ப்பாட்டத்தில் மோதல்

ஸ்ரீ தலதா மாளிகைக்கு முன்பாக உள்ள கண்டி-மஹியங்கனை வீதியை திறக்குமாறு கோரி கண்டி நகரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற மோதலில் ஒருவர் காயமடைந்துள்ளார். தலதா மாளிகைக்கு முன்பாக மூடப்பட்டிருக்கும் குறித்த வீதியை திறக்குமாறு கோரி நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரணியாக சென்றபோது, இவ்வார்ப்பாட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த இன்னொரு குழுவும் ஆர்ப்பாட்டக்குழுவுக்குமிடையே மோதல் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கண்டி நகர காவல்துறையினர் தெரிவித்தனர்.



## விமலுக்கு அழைப்பாணை

கடந்த 6ஆம் திகதி பௌத்தலோக மாவத்த மற்றும் ஹெவலொக் வீதியை தடை செய்தமைக்காக விமல் வீரவன்ஸ உள்ளிட்ட ஏழு பேருக்கும் மார்ச் 18ஆம் திகதி நீதிமன்றத்துக்கு சமூகமளிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்தல் விடுத்துள்ளார். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செய்ட் அல் ஹுஸைனின் இலங்கை விஜயத்தை ஆட்சேபித்து தும்முல்ல சந்தியிலுள்ள ஐ.நா அலுவலகத்துக்கு முன்னால் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட ஏழு பேர் கொண்ட குழுவினர் ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கடுமையான உத்தரவு பிறப்பிப்பு

புங்குடு தீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கு நேற்று ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின் போது குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பிலான அறிக்கைகளை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதவான் கடுமையாக உத்தவிட்டார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மரபணு சோதனை அறிக்கை உட்பட எந்த அறிக்கையும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. நீதிமன்றில் அறிக்கை எதுவும் சமர்ப்பிக்கப் படாததால், விசாரணைகளை மேற்கொள்ளமுடியாது வழக்குத் தவணைகள் தள்ளிப் போய்க் கொண்டு இருப்பதாக நீதிபதி தெரிவித்தார். இதுவரை இந்த வழக்கு தொடர்பில் குற்ற புலனாய்வு துறையினர் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பிலான அறிக்கைகளை அடுத்த தவணையில் கட்டாயம் சமர்பிக்க வேண்டும் என நீதிபதி கடுமையாக உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்நிலையில் சந்தேக நபர்களை எதிர்வரும் 4 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் பணிப்புரைவிடுத்தார்.

## கிளிநொச்சிக்கு மாற்றுமாறு கோரிக்கை

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றும் திட்டத்தால் ஏற்கனவே மூன்று தசாப்தகாலமாக மீளக் குடியமர முடியாது இருக்கும் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் பாதிக்கப்படுவதுடன், யாழ்ப்பாணத்தில் பாரிய பிரச்சனைகள் தோற்றுவிக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனால் அதை கிளிநொச்சிக்கு மாற்றுவதன் ஊடாக அந்தப் பிரதேசத்தையும் பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்வதுடன், மக்களுக்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்படாது என்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ்ந்து வரும் தமிழ்ப் பேரம் பேசும் சக்தி

நிலாந்தன் www.tamilkingdom.org

விக்னேஸ்வரன் அரசியலில் இறங்கியபோது தயான் ஜெயதிலக அவரை மென்சக்தி என்று அழைத்திருந்தார். அவர் ஏன் அப்படி அழைத்தார்? இலங்கைத்தீவின் நீதிபரிபாலன கட்டமைப்புக்குள் நீண்டகாலமாக உயர் பொறுப்புக்களை வகித்த ஒருவர் அந்த நீதிபரிபாலனக் கட்டமைப்பினால் பாதுகாக்கப்படும் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதத்திற்கு விசுவாசமாகவே இருப்பார் என்ற ஓர் எதிர்பார்ப்பில் தான். விக்னேஸ்வரனும் ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் ஒப்பீட்டளவில் தீவிரத்தன்மை குறைந்தவராகவே காணப்பட்டார்.

ஆனால் ஆட்சிமாற்றத்தின் பின் அவர் தயான் ஜெயதிலக போன்றவர்கள் எதிர்பார்த்திராத ஒரு வளர்ச்சிக்குப் போய்விட்டார். தயான் ஜெயதிலக இப்பொழுதும் அவரை ஒரு மென்சக்தி என்று அழைப்பாரோ தெரியாது. விக்னேஸ்வரனின் விடயத்தில் மட்டுமல்ல ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சிகுறித்தும் தயான் ஜெயதிலக போன்றவர்கள் எதிர்பார்த்திராத திருப்பங்கள் கடந்த ஓர் ஆண்டுக்குள் நடந்துமுடிந்துவிட்டன.

## தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவராக இருக்கும் விக்னேஸ்வரனோ கூட்டமைப்புக்கு எதிராக திட்டவட்டமாக தலைமை தாங்க தயங்குகிறார்

மைத்திரி -ரணில் அரசாங்கமானது கடந்த சில தசாப்தங்களில் இலங்கைத் தீவை ஆட்சி செய்த எல்லா அரசாங்கங்களையும் விட அனைத்துலக கவர்ச்சிமிக்கதாக தோற்றம் பெற்று வருகிறது. அண்மைத் தசாப்தங்களில் இச் சிறிய தீவை ஆண்ட அரசாங்கங்களுக்குள் சந்திரிக்காவின் அரசாங்கமும், குறுகிய காலம் ஆட்சி செய்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் குறிப்பிடத்தக்க அளவிற்கு அனைத்துலக அளவில் கவனிப்பைப் பெற்றன.

இப்பொழுது ரணிலும் சந்திரிக்காவும் ஓர் அணியில் நிற்கிறார்கள். இவர்களைத் தவிர வெளியுலகத்தால் ஆசைகள் குறைந்த எளிமையான ஒரு தலைவராகப் பார்க்கப்படும் மைத்திரியும் இந்த அணிக்குள் காணப்படுகிறார். இப்படிப் பார்த்தால் அண்மைத் தசாப்தங்களில் இலங்கைத்தீவில் தோன்றிய எல்லா அரசாங்கங்களைவிடவும் அதிகளவில் உலக சமூகத்தால் எதிர்பார்ப்போடு பார்க்கப்படும் ஓர் அரசாங்கமாக இந்த அரசாங்கம் காணப்படுகிறது.

.அரசியலமைப்பு மாற்றங்களில் ஜனாதிபதி முறைமை நீக்கப்படுமாக இருந்தால் இலங்கைத்தீவின் நிறைவேற்று அதிகாரமுடைய கடைசி ஜனாதிபதியாக மைத்திரியே இருப்பார். நிறைவேற்று அதிகாரங்களை இழக்கத் தயாராக இருந்த ஒரே ஜனாதிபதியாக அவர் நினைவு கூறப்படுவார். ஆட்சிமாற்றம் ஒன்றின் கருவியேதான் என்பதை அவர் நன்கு விளங்கி வைத்திருக்கிறார். அதனால் அவர் இப்பொழுது அமர்ந்திருக்கும் சிம்மாசனம் நிரந்தரமானதல்ல என்பதும் அவருக்கு நன்கு தெரிந்திருக்கிறது. இது காரணமாக தனக்கு முன்பிருந்த எல்லா ஜனாதிபதி களிடமிருந்தும் அவர் சில விடயப் பரப்புக்களில் துலக்கமான விதங்களில் வேறுபட்டுநிற்கிறார்.

இதுவரையிலும் இருந்த எல்லா ஜனாதிபதிகளுமே தங்களுடைய நிறைவேற்று அதிகாரங்களை எப்படித் தக்கவைக்கலாம். அல்லது எப்படி அதிகப்படுத்தலாம் என்ற திசையிலேயே சிந்தித்தார்கள். ஆனால் மைத்திரியோ 19 ஆவது திருத்தத்தின் மூலம் தனது அதிகாரங்களில் ஒருபகுதியை இழக்கத் தயாராக இருந்தார்.

இதற்கு முன்பிருந்த சில ஜனாதிபதிகள் பதவிக்கு வரும் வரையிலும் ஜனாதிபதி முறைமையை எதிர்த்தார்கள். தாம் பதவிக்கு வந்தபின் அதை நீக்கப் போவதாகவும் நம்பிக்கையூட்டினார்கள். ஆனால் பதவியில் அமர்ந்ததும் அவர்கள் அந்த சிம்மாசனத்தை இழக்கத் தயாராக இருக்கவில்லை. நிறைவேற்று அதிகாரங்களின் ருசி அப்படிப்பட்டது.

ஆனால் மைத்திரி ஒரு அரசனைப் போல நடந்து கொள்வதில் ஆர்வமற்றவராகக் காணப்படுகின்றார்.

அவர் தற்காப்பு உணர்வின்றி மிகவும் எளிமையாக நடந்து கொள்வதை மகிந்தவின் ஆதரவாளர்கள் கேலி செய்கிறார்கள். மகிந்த யுத்தத்தை வெற்றி கொண்டபடியால்தான் மைத்திரி இப்படி சுதந்திரமாகச் செயற்பட முடிகிறது என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். ஆனால் வெற்றிவாதத்தின் பின்னரான சுமார் ஆறாண்டுகால ஆட்சியின் போது பெற்ற கசப்பான அனுபவங்களின் விளைவே மைத்திரி எனலாம். அதுவும் அவர் ஓர் அரசனைப் போல நடந்துகொள்ளத் தயாரற்றிருப்பதற்கு ஒருகாரணமாக இருக்கலாம்.

தனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்கள் தற்காலிகமானவை என்ற ஒரு விளக்கத்தின் அடிப்படையில் செயற்படும் ஓர் அரசுத் தலைவராக இருப்பதனால் மைத்திரி எளிமையானவராகவும், பேராசை குறைந்தவராகவும், மூர்க்கமிலாதவராகவும் காணப்படுகிறார். அவருடைய இந்தத் தோற்றம் இப்போதுள்ள அரசாங்கத்தின் அனைத்துலக கவர்ச்சியை அதிகப்படுத்தியிருக்கிறது.

அதேசமயம் ரணில் விக்கிரமசிங்கவோ ஒரு கண்டிப்பான நிர்வாகி போலவும், கறாராகக் கதைப்பவர் போலவும் காணப்படுகிறார். முன்னைய தசாப்தங்களில் அவர் ஒரு மென்மையான தலைவராகவே பார்க்கப்பட்டார். ஆனால் அவருடைய கட்சிக்குள்ளேயே அவரைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாகவும், வயது முதிர்ச்சி காரணமாகவும் அவர் ஓர் இறுக்கமான நிர்வாகியாக உருவாகியிருப்பதாக தென்னிலங்கை அரசாங்க வட்டாரங்களில் கருதப்படுகிறது.

தனது அமைச்சர்களோடு கண்டிப்பாக நடந்துகொள்ளும் அவர் அதே அளவு கண்டிப்போடு இனவாத ஊடகங்களையும் அண்மையில் நாடாளுமன்றத்தில் சாடியிருந்தார். அதுமட்டுமல்ல இலங்கைத் தீவின் நீதிபரிபாலன அமைப்பைக் குறித்தும் இறந்தகாலத்தில் இழைக்கப்பட்ட சில தவறுகளைக் குறித்தும் அவர் வெளிப்படையாகப் பேசியிருப்பதை கடந்த வாரம் இலங்கைக்கு வந்து போன ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டி-யிருந்தார்.

ஒருபுறம் பேராசைகள் குறைந்த சாதுவான ஒரு ஜனாதிபதி இன்னொருபுறம் கண்டிப்பான, கறாரான ஒரு பிரதமர். இந்த இருவருடையதும் சேர்க்கையானது அனைத்துலக அளவில் அதிகம் எதிர்பார்ப்புக்களைத் தோற்று வித்திருக்கிறது. முதலாவதாக இச் சேர்க்கையானது மேற்குக்கும், இந்தியாவுக்குமான கதவுகளை அகலத் திறந்திருக்கிறது. இரண்டாவதாக கடந்தகாலத் தவறுகளுக்குரிய ஏதோ ஒரு பரிகாரத்தைக் கண்டடையப் போவதான ஒரு தோற்றத்தையும் காட்டுகிறது.

இது காரணமாகவே இலங்கைக்கு வந்து போகும் மேற்கத்தையத் தூதுவர்கள் சில சமயங்களில் இந்த அரசாங்கத்தின் பிரச்சாரகர்கள் போல மாறி விடுகிறார்கள். உதாரணமாக அண்மையில் வந்து போன சமந்தாபவர் யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரனைச் சந்தித்தார். இதன்போது விக்னேஸ்வரன் நடப்பு நிலைகள் தொடர்பாகத் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார். ஆனால் சமந்தாபவரோ ஆட்சிமாற்றத்தின் பின் நிகழ்ந்த நல்ல மாற்றங்கள் என்று அவர் கருதுபவற்றை பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

இவ்வாறாக மைத்திரி-ரணில் அரசாங்கமானது தனது அனைத்துலக அந்தஸ்தை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டு வருகிறது. இது இப்படியே போனால் ஒரு கட்டத்தில் மேற்கு நாடுகள் இந்த அரசாங்கத்தை ஒரு மென்சக்தி அரசாங்கம் என்று வர்ணித்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை. இவ்வாறாக இந்த அரசாங்கத்தின் அனைத்துலகக் கவர்ச்சி அதிகரித்து வருவதனால் பேரம் பேசும் சக்தியும் அதிகரித்து வருகிறது. அதனால் தான் மைதிரியும் ரணிலும் கடந்த ஜெனிவாத் தீர்மானத்தின் போது ஐ.நாவில் வாக்குறுதி அளித்ததற்கு மாறாக இப்பொழுது உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை குறித்துப் பேசி வருகிறார்கள். தேர்தலில் தோற்ற சரத் பொன்சேகாவை நாடாளுமன்றத்துக்குள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

போர்க்குற்றம் தொடர்பிலான விசாரணைப் பொறிமுறைகளைப் பொறுத்தவரை கடந்த ஓராண்டு காலத்திற்குள் படிப்படியாக ஒருவித தேய்மானத்தைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. நவிப்பிள்ளை அம்மையார் பொறுப்பில் இருந்தபோது பன்னாட்டு விசாரணைக்கான கோரிக்கையே வலுவாகக் காணப்பட்டது. ஆனால் ஆட்சிமாற்றத்தின் பின் மேற்குநாடுகள் அந்தக் கோரிக்கைக்கு அழுத்தம் கொடுக்க விரும்பவில்லை.

ஆட்சிமாற்றத்தைப் பாதுகாப்பதற்காக அவர்களும் ஒருவித கலப்புப் பொறிமுறையைத்தான் தெரிவுசெய்தார்கள். ஆனால் தீர்மானம் நிறைவேற்றுப்படும் போது இலங்கை அரசாங்கம் அதற்குள்ளும் திருத்தங்களைக் கொண்டுவந்தது. அனைத்துலக நிபுணர்களை உள்ளடக்கிய கலப்புப் பொறிமுறைக்குப் பதிலாக பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய கலப்புப் பொறிமுறை என்று தீர்மானம் மாற்றப்பட்டது. இப்பொழுது சிலமாதங்களின் பின் உள்நாட்டுப் பொறிமுறைதான் என்று கூறப்படுகிறது. அதாவது ஆட்சிமாற்றத்தின் கீழான கடந்த ஓராண்டு காலகட்டத்திற்குள் விசாரணைப் பொறிமுறை படிப்படியாகத் தேய்ந்துவருகிறது.

இது தொடர்பாக கடந்தவாரம் ஐ.நா மனித உரிமை ஆணையாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு அவர் விஜயம் செய்த போது அங்கு வைத்து அல்ஜசீரா செய்தியாளர் மேற்படி கேள்வியை அவரிடம் கேட்டுள்ளார். ஆனால் அவரோ நேரடியாகப் பதிலளிப்பதைத் தவிர்த்து சுற்றி வளைத்துப் பதில் சொல்லியுள்ளார். அவரது விஜயத்தின் முடிவிலும், பின்னரும் அவர் தெரிவித்திருக்கும் கருத்துக்களை வைத்துப் பார்த்தால் அதுவிடயத்தில் அவர் அரசாங்கத்திற்கு நோகக் கூடிய விதத்தில் பதில் சொல்ல விரும்பவில்லை. இதுதான் இப்போதுள்ள நிலைமை.

தமிழ்மக்களிடம் இப்பொழுது வன்சக்தி கிடையாது. மென்சக்தியும் முழு வளர்ச்சி பெறவில்லை. இத்தகையதோர் பின்னணியில் போர்க் குற்றவிசாரணைகளில் இறுதியாகக் கிடைக்கப்போகும் நீதியே தமிழ்மக்களின் அடுத்தகட்ட அரசியலுக்கான பாதுகாப்புக் கவசமாகும். அதனால்தான் தமிழ்மக்களில் ஒருபகுதியினர் தமக்குப் பரிகார நீதியே வேண்டும் என்று கோரிவருகிறார்கள். இறுதிக்கட்டப் போரில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள்தான் அவர்களுடைய அடுத்தகட்ட அரசியலுக்கான முதலீடாகக் காணப்பட்டது. இந்த இழப்புக்களுக்கு எதிரான நீதியே இனப்பிரச்சினைக்கான தீர்வுமாகும் என்று தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கூறிவருகிறார்கள். அதாவது இனப் படுகொலைக்கு எதிரான பரிகார நீதியே இனப் பிரச்சினைக்கான தீர்வுமாகும்.

இவ்வாறு பரிகார நீதியைப் பெறுவதாக இருந்தால் அதற்குரிய விசாரணைப் பொறிமுறை ஆகக்கூடிய பட்சம் அனைத்துலக மயப்பட வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு விசாரணைப் பொறிமுறை அனைத்துலக மயப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு தமிழ்மக்களுடைய பேரம் பேசும் சக்தியும் அதிகரிக்கும். ஆனால் கடந்த ஓராண்டு காலமாக அந்தவிசாரணைப் பொறிமுறையை அனைத்துலக மயநீக்கம் செய்வதில் மைத்திரி-ரணில் அரசாங்கம் படிப்படியாக வெற்றிபெற்று வருகிறது. அதாவது தொகுத்துக் கூறின் தமிழ் மக்களுடைய பேரம்பேசும் சக்தி குறைந்து வருகிறது.


இவ்வாறு தமிழ் மக்களுடைய பேரம்பேசும் சக்தியை குறைத்து வரும் அரசாங்கத்தின் அனைத்துலகக் கவர்ச்சியோ உயர்ந்து கொண்டே போகிறது. தமிழ் வன்சக்தி அகற்றப்பட்டிருக்கும் ஒரு வெற்றிடத்தில் கடந்த ஆறேமுக்கால் ஆண்டுகாலப் பகுதிக்குள் தமிழ் மென் சக்தியானது அதன் முழு வளர்ச்சியை இதுவரையிலும் பெறவில்லை.

இப்போதுள்ள நிலைமைகளின்படி தமிழ் மென்சக்தியானது முதலாவதாக கோட்பாட்டுத் தெளிவுடையதாக கொள்கைப் பிடிப்புள்ளதாக இருக்க வேண்டும். இரண்டாவதாக அந்தக் கொள்கையின் பிரகாரம் அர்ப்பணிப்புக்களைச் செய்வதற்கும், தியாகங்களைச் செய்வதற்கும் தயாராக இருக்கவேண்டும். மூன்றாவதாக மைத்திரி-ரணில் அரசாங்கத்தை அதிகம் எதிர் பார்ப்போடு பார்க்கும் ஓர் உலகச்சூழலில் சக்திமிக்க நாடுகளின் நிகழ்ச்சி நிரல்களை சுழித்துக் கொண்டோடத் தெரியவேண்டும்.

ஆனால் இங்கு விபரீதம் என்னவெனில் தன்னை ஒரு மென்சக்தி போல கட்டியெழுப்ப முற்படும் மைத்திரி-ரணில் அரசாங்கமானது போர்க் குற்றவிசாரணைப் பொறிமுறையைப் படிப்படியாக அனைத்துலக மயநீக்கம் செய்துவரும் ஒருபின்னணியில் தமிழ்மக்களின் ஆணையைப் பெற்ற மிதவாதிகளோ ஒரு கட்சி ஏகபோகத்தை நோக்கி காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எப் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமிழரசுக் கட்சியில் இணைந்திருக்கிறார்.

அதேசமயம் தயான் ஜெயதிலகவால் மென்சக்தி என்று அழைக்கப்பட்ட விக்னேஸ்வரனோ கூட்டமைப்புக்கு எதிராகத் திட்டவட்டமாகத் தலைமை தாங்கத் தயங்குகிறார். தமிழ் மக்கள் பேரவை எதிர்காலத்தில் ஒரு கட்சியாக மாறப் போவதில்லை என்ற நிபந்தனையோடுதான் அவர் அதில் இணைத்தலைவராக இணைந்திருக்கிறார். ஒரு மாற்றுத் தலைமையைக் கட்டியெழுப்ப அவர் இன்று வரையிலும் தயாரில்லை.

> அதாவது **தமிழ் மென்சக்தியானது துலக்கமான ஒரு முழு வளர்ச்சியை இனிமேற் தான் பெற வேண்டியிருக்கிறது. அப்படியொரு வளர்ச்சியை அடைவதற்கிடையில் தமிழ் மக்களின் தலையில் மேலுமொரு தீர்வற்றதீர்வு கட்டியடிக்கப்பட்டுவிடுமா?**



Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU
# உலகச் செய்திகள்

ஈராக்

## ஆபத்தான கதிர்வீச்சு பொருட்கள் திருட்டு - ஐ.எஸ் என சந்தேகம்


ஈராக்கில் உள்ள அமெரிக்க நிறுவனத்தின் நிலையில் இருந்து மிகவும் ஆபத்தான மடிக்கணணி அளவுள்ள கதிர்வீச்சு பொருட்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் திருடி சென்றிருக்கலாம் என்று சந்தேகம் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக ஈராக் அரசாங்கம் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகிறது. இதற்கிடையில் அந்த பொருட்களை வைத்து மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் அணு ஆயுத தயாரிப்பிற்கு அவர்கள் அதனை பயன்படுத்தலாம் என்றும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்த பொருட்கள் திருடு போகும் போது எந்த அசம்பாவிதங்கள் ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ள அதிகாரிகள், ஒரு வேளை அது ஐ.எஸ். தீவிரவாதிகள் கைக்கு கிடைத்திருந்தால் அணு ஆயுத தயாரிப்புக்கு பயன்படுத்தும் வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.



ரஷ்யா

## பாதுகாப்பிற்காகவே சுற்றினோம்



ஆர்.ஏ.எஃப் ஜெட் விமானம் இடைமறித்த சம்பவம் மீண்டும் அப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வதற்காக இந்த ஜெட் விமானங்கள் இங்கிலாந்தின் கிழக்கு பகுதியில் உள்ள லின்கோல்ஷிர் நாட்டின் கோனிங்ஸ்பை ராயல் விமானப்படை தளத்தில் இருந்து புறப்பட்டு சென்றதாக கூறப்படுகிறது. முன்னதாக கடந்த நவம்பர் மாதம் அட்லாண்டிக் கடல் பகுதியில் பறந்து கொண்டிருந்த ரஷ்ய போர் விமானங்கள் தைபூன் ஜெட் விமானங்களால் இடைமறிக்கப்பட்டது.

இங்கிலாந்து எல்லைக்குள் பறக்க முயன்றதாக கடந்த 12 மாதங்களில் மட்டும் ரஷ்ய போர் விமானங்கள் இதுவரை 6 முறை இடைமறிக்கப்பட்டுள்ளது. எனினும் பாதுகாப்பு காரணங்களுக்காகவே போர் விமானங்கள் சுற்றி வந்ததாகவும், இங்கிலாந்து எல்லைப் பகுதிக்குள் நுழையவில்லை என்று செய்தி தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியா

## பிரித்தானியா நீடிக்குமா இல்லையா!!

பிரதமர் டேவிட் கெமரன் முன்வைத்துள்ள ஐரோப்பிய ஒன்றிய மறுசீரமைப்பு தொடர்பிலான பேச்சுவார்த்தையில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை என பிரித்தானிய அரசாங்கம் கூறியுள்ளது. உடன்படிக்கை எட்டப்படுவது தொடர்பில் நம்பிக்கையின்மையை பிரித்தானியா வெளியிட்டுள்ள நிலையில், பல்வேறு விடயங்களில் இணக்கப்பாடுகள் எட்டப்படாத நிலையில் ஐரோப்பிய ஒன்றிய பேரவையின் முதலாவது அமர்வு நிறைவுபெற்றுள்ளது. எவ்வாறாயினும் டேவிட் கெமரன் உடனான பேச்சுவார்த்தைகள் காத்திரமாக அமைந்ததாக ஐரோப்பிய ஒன்றியத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இதனிடையே குடியேற்றவாசிகளின் நெருக்கடிகளை கையாள்வது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள 28 நாடுகளின் தலைவர்கள் கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளனர்.



சீனா

## இராணுவ தளத்தை நிர்மாணித்த சீனா

தரையிலிருந்து வானுக்கு ஏவும் ஏவுகணைத் தொகுதியொன்றை, தென் சீனக் கடலிலுள்ள சர்ச்சைக்குரிய தீவொன்றில், சீனா நிறுத்தியுள்ளதாக, அறிவிக்கப்படுகிறது. இது, அப்பிராந்தியத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. வூடி தீவு என்ற அத்தீவின் உரிமை தொடர்பாக, சீனாவுக்கும் தாய்வானுக்கும் வியட்னாமுக்குமிடையில் முரண்பாடு காணப்பட்டு வந்துள்ளது.

எனினும் தற்போது, சீனாவின் கட்டுப்பாட்டிலேயே இத்தீவு காணப்படுகிறது. இந்நிலையிலேயே, கடந்த வாரத்தில், மின்கலங்கள் இரண்டும் ஏவுகணை செலுத்தும் அமைப்புகள் ஆறும் ராடார் அமைப்பொன்றும், அத்தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக, காணொளிகள் வெளியாகியுள்ளன. இதனையடுத்து, பதற்றத்தைத் தணிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுமாறு, அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, சீனாவைக் கேட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான்

## அதிக மரணதண்டனை அளித்த நாடு

பாகிஸ்தானில் கடந்த 2015ம் ஆண்டு 324 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுள் தீவிரவாத குழுக்களை சார்ந்தோர் அல்லாதவர்களே அதிகம் என மனித உரிமைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் பாகிஸ்தானில் மரண தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் பாடசாலை ஒன்றில் தீவிரவாதிகளினால் நடாத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்தே மீண்டும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மாலைதீவு

## அரசாங்கத்தை எதிர்த்தமையால் எதிர்க்கட்சி தலைவர் கைது

மாலைதீவுகளின் அதாலத் கட்சியின் தலைவரான ஷெய்க் இம்ரான் அப்துல்லாவுக்கு மாலைதீவுகள் நீதிமன்றமொன்று, பன்னிரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

ஜனநாயக ரீதியாக மாலைதீவுகளில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மொஹமெட் நஷீட்டினது சிறைக்கெதிராக, கடந்த வருடம் மே மாதம் இடம்பெற்ற பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றில், அரசாங்கத்துக்கு எதிரான உரையில் குறிப்பிட்ட கருத்துக்கள் தொடர்பிலேயே ஷெய்க் இம்ரான் அப்துல்லா மீது பயங்கரவாதக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டிருந்தது. காவல்துறையினரை தாக்குங்கள் என ஆர்ப்பாட்டக்காரர்களை வலியுறுத்திய தற்காகவே இம்ரான் மீது குற்றஞ் சுமத்தப்பட்டதாக மாலைதீவு அரசாங்கம் தெரிவிக்கின்ற நிலையில், இம்ரானின் வழக்கறிஞர்கள் மேற்படிக் குற்றச்சாட்டை மறுத்துள்ளனர்.

இந்நிலையில், பேரணியில் கலந்துகொண்டோரை, வன்முறையை தவிர்த்துக் கொள்ளுமாறே இம்ரான் கோரியிருந்ததாகவும் வன்முறையை தடுப்பதற்கான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொண்டதாக தெரிவித்துள்ள ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர்களில் ஒருவரான மார்க் டோனர், தண்டனை வழங்கப்பட்ட நீதிப் பொறிமுறையானது, ஆழமான குறைபாடுகளைக் கொண்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார்.



சிரியா

## மண்ணை முத்தமிட்டுச் சென்ற போராளிகள்

குறைந்தது 5000 போராளிகள் சிரியாவின் அஸாஸ் நகருக்குச் செல்வதற்கான துருக்கி எல்லைப் பகுதியை, கடந்துள்ளதாக, கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன. போராளிகள் இழப்பைச் சந்தித்துவரும் அஸாஸ் பிராந்தியத்துக்கு இவர்கள் செல்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அலெப்போ மாகாணத்திலுள்ள அஸார் நகரில், குர்திஷ் படைகள் முன்னேற்றத்தை வெளிப்படுத்த, போராளிகள் தரப்பில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்நிலையிலேயே, கடந்த புதன்கிழமையன்று, புதிய போராளிகள், எல்லையைக் கடந்துள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மனித உரிமைகளுக்கான சிரியக் கண்காணிப்பகத்தின் தலைவர் ரமி அப்டெல், "மாகாணத்தின் வடக்குப் பகுதியில், குர்திஷ் படைகள் பல அடைவுகளைப் பெற்றுள்ள நிலையில், போராளிகளுக்கு உதவ, அவர்கள் எதிர்பார்த்துள்ளனர்" என்றார்.

தெற்கு பிரான்ஸ்

## பண்ணை ஆய்வாளர் கொலை

தெற்கு பிரான்சில் உள்ள பால் பண்ணை ஒன்றில் பால் தரமாக தயாரிக்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்ய வந்த பெண் அதிகாரி ஒருவரை பால் பண்ணை உரிமையாளரின் சகோதரர் குளத்தில் தள்ளி கொலை செய்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆய்வின் போது பால் தயாரிப்பின் தரம் குறித்து வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், இந்த வாக்குவாதம் கடுமையானதை தொடர்ந்து, பால் பண்ணை உரிமையாளரின் சகோதரர் ஒருவர் அந்த பெண் அதிகாரியை அருகில் உள்ள பனிக்குளத்தில் தள்ளியுள்ளார். கடுமையான குளிர் சூழ்ந்த அந்த குளத்தில் அதிகாரி விழுந்ததும், அவரது உடல் விறைத்து இதய துடிப்பு தாறுமாறாக துடிக்கத் தொடங்கியுள்ளது.

எதனால் இந்த கொலை சம்பவம் நிகழ்ந்தது என்பது குறித்தான உறுதியான தகவல்கள் வெளியாகாத நிலையில், வாலிபரை கைது செய்த காவல்துறையினர் அவரிடம் விசாரணை செய்து வருகின்றனர்.




நேபாளம்

## சாலை இன்மையால் அவதி

சுற்றுலாவுக்கு பெயர் பெற்ற நேபாளம் நாட்டில் கல்விக்காக உயிரை பணையம் வைத்து மாணவர்கள் பயணம் செய்வது தெரியவந்துள்ளது. சாலை வசதிகள் இல்லாத திரிஷ்சுலி நதியின் அருகே அமைந்துள்ளது தயாங் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வெளியிடங்களுக்கு செல்ல வேண்டுமென்றால் திரிஷ்சுலி நதியின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள இரும்பு கம்பியை பிடித்தபடி தான் செல்லவேண்டும்.

எனவே, காலால் நடந்து செல்லும் வகையில் மரப்பாலம் அமைத்து தரவேண்டும் என்று கிராம மக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர்.

சமீபத்தில், இது போன்ற ஆபத்தாக பயணங்களை தவிர்ப்பதற்காக நதிகளின் குறுக்கே 366 பாலங்கள் அமைப்பதற்கு என்று அந்நாட்டு பிரதமர் தெரிவித்திருந்த போதிலும் இதுவரை எதுவித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என தெரிய வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் முரசு

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

வித்தியா சாகரன்
முகப்பக்கத்திலிருந்து...

அடுத்து வரும் வாரங்களில் ..............

# சீக்கா வைரஸ் (Zika Virus)

**வைத்திய கலாநிதி திருமதி ஜமுனா சிவசங்கரன்**
**மருத்துவமனை திட்டமிடல் வைத்திய அதிகாரியும்**
**இனவிருத்திச் சுகாதார வைத்திய அதிகாரியும்**
**பொது மருத்துவனை, திருகோணமலை**

உலகில் மனித வரலாறு நெடுகிலும் அவ்வப்போது பல்வேறு வகையான தொற்று நோய்கள் பெருமெடுப்பில் (Out-Break) பரவி மக்களையும் மருத்துவ உலகையும் அச்சுறுத்தி வருகின்றன. இந் நோய்களின் பரம்பலுக்கும், மனிதரில் அவற்றின் தாக்கத்தின் தன்மைக்கும் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. காலநிலையில் ஏற்படும் தட்ப வெப்ப வேறுபாடுகள், நோய்க்காவிகளின் பெருக்கம், அவற்றில் ஏற்படும் அசாதாரண மாற்றங்கள், அதிகரித்துவரும் சூழல் மாசடைதல் போன்ற புறக்காரணிகளும் நோயாக்கியில் ஏற்படும் விகாரம் போன்ற பரிணாம மாற்றங்கள், நோயாகு காலம் மற்றும் நோய்த்தொற்றுக்காலம், மருத்துவத்துறையின் வளர்ச்சி போன்ற அகக்காரணிகளும் ஒவ்வொரு நோய்களினதும் விஸ்வருபத்தினை வடிவமைக்கும் முக்கிய சக்திகளாக விளங்குகின்றன. மலேரியா, போலியோ, சின்னமுத்து போன்ற நோய்கள் உலகிலிருந்து முடக்கப்பட்டு வருகின்றன. டெங்கு, பறவைக்காய்ச்சல் போன்றவை காலத்திற்குக் காலம் அதிகரித்து வருகின்றன. கொலரா போன்ற நோய்கள் அவ்வப்போது தோன்றி பல உயிர்களையும் பொருளாதாரத்தையும் காவுகொண்டு மறைகின்றன. எயிட்ஸ் போன்ற நேய்கள் பல தசாப்தங்களாக மருத்துவத்துறைக்கு சவால் விட்டுக்கொண்டிருக்கின்றன. இன்னும் சில நோய்கள் மருத்துவத்துறையின் கீழ் கட்டுப்படுத்தப் படுகின்றன.

இவ்வாறான சமகாலப்பின்னணியில் தற்போது சீக்கா வைரஸ் காய்ச்சல் (Zika Virus) விஸ்வருபம் எடுத்துள்ளது. தற்போது ஊடகங்களிலும் மருத்துவ உலகிலும் பரபரப்பான பேசும் பொருளாக மாறியுள்ளது. சுமார் 25இற்கும் அதிக நாடுகளில் பரவியுள்ளது. இதுவரையும் இலங்கையில் தொற்று கண்டறியப்படாவிட்டாலும் நோய்த் தொற்றுக்கான ஏதுநிலைகள் அதிகமாகவே காணப்படுகின்றன. உலக சுகாதார நிறுவனமும், இலங்கையின் சுகாதார அமைச்சகமும் வேகமாகப் பரவிவரும் சீக்கா வைரஸ் காய்ச்சல் (Zika Virus) பற்றி விழிப்புணர்வுகளையும் எச்சரிக்கைகளையும் விடுத்து வருகின்றன. எனவே இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் சீக்கா வைரஸ் காய்ச்சல் (Zika Virus) பற்றிய சில உண்மைகளைப் பகிர்ந்துகொள்வது பொருத்தமானதாகவும் மக்களுக்குப் பயனுள்ளதாகவும் இருக்கும். அத்தோடு இது காலத்தின் தேவையான ஒன்றாகவும் அமைகின்றது.



### நோய்ப்பரம்பல்

உண்மையில் சீக்கா வைரஸ் காய்ச்சல் என்பது தற்போது புதிதாகத் தோன்றிய ஒரு வியாதியல்ல. இது முதன்முதலாக 1947ம் ஆண்டில் உகண்டா நாட்டில் குரங்குகளில் பரவுவது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் 1952ம் ஆண்டில் உகண்டா மற்றும் தன்சானியா நாடுகளில் மனிதரில் பரவுவது அறியப்பட்டது.

தொடரும்

# நிகழ்வுகள்

சேனையூர் நிருபர்

## மண்டலாபிஷேக விழா

திருகோணமலை அன்புவழிபுரம் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிசேகத்தை தொடர்ந்து இடம் பெற்று வரும் மண்டலாபிசேக திருவிழாவின் போது 15.02.2016 கடந்த திங்கட்கிழமை மாலை இடம் எம் பெருமானின் வீதி உலா மிகச் சிறப்பாக இடம்பெற்றது.



## மெதடிஸ்த ஆலயம் திறப்பு நிகழ்வு

கதிரவன்

திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கு பாட்டாளிபுரம் கிராமத்தில் மெதடிஸ்த ஆலயம் ஒன்று புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. கொரிய நாட்டு வண சகோதரர் ஜேன் ஒன் பியுங்டோ இதனைத் திறந்து வைத்தார். கடந்த சனிக்கிழமை காலை இந்நிகழ்வு நடைபெற்றது. ஆலயம் திறந்து வைக்கப்பட்டதன் நினைவாக மரக்கன்றுககளும் நடப்பட்டன.





## முன்பள்ளி கல்வி அபிவிருத்தி

சேனையூர் நிருபர்

கிழக்கு மாகாணத்தில் முன்பள்ளி மாணவக் கல்வியை அபிவிருத்தி செய்யும் முகமாக பல்வேறு செயல் திட்டங்களை நடத்தி வரும் சொலிடரிடி லைக் பிரான்ஸ் எனும் அரச சார்பற்ற நிறுவனம் தனது பங்காளர் நிறுவனங்களான கிண்ணியாவிசன். என்பிடிஎப்.பீட் .என்டபில்சி ஆதரவுடன் கிழக்கு மாகாண முன்பள்ளி வாரியம் மத்திய கல்வியமைச்சு மற்றும் அதிகாரிகளுடன் இணைந்து முன்பள்ளி கல்வி மேம்பட்டிக்கான ஒரு நீண்டகால தந்திரோபாய நிகழச்சித்திட்டத்தை தயாரித்து 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டு வரை இலக்காக கொண்டு செயல்பட்டு வருகிறது. அதன் இறுதி நல நிகழ்வு கடந்த சனிக்கிழமை திருகோணமலை புனித மரியாள் கல்லூரி மண்டபத்தில் தேசிய முன்பள்ளி ஆசிரிய சங்கத்தின் தலைவி செல்வி.மங்கள ராஜினி தலைமையில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வீதி அபிவிருத்தி காணி அமைச்சர் ஆரியவதி கலப்பதி விசேட விருந்தினராக சிறுவர் பெண்கள் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி சந்திமா சேகர .சொளிடரி நிறுவன ஆசிய குழுச்சபை தலைவர் மைக்டிபொன் தேசிய இணைப்பாளர் எம்.சைபுள்ளா ஆகியோர் கலந்து கொண்டனர்.





## "உணர்வுகள்" வெளியீட்டு நிகழ்வு

திருகோணமலை மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட ரமேஸ் இயக்கத்தில் உருவான உணர்வுகள் குறுந்திரைப்பட வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நகரசபை மண்டபத்தில் கவிஞர் க.கோணேஸ்வரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது ரேணுகமல நடனாலய மாணவிகள் வரவேற்பு நடனம் வழங்கி வைத்தனர். நிகழ்வின் முதன்மை அதிதியான திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் சிறப்புரையாற்றினார். அத்துடன் உணர்வுகள் குறுந்திரைப்படம் பற்றிய கண்ணோட்டத்தை சிரேஸ்ட ஊடகவியலாளர் அ.அச்சுதன் நிகழ்த்தி வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## "கற்பகமே கலங்காதே"

சர்வதேசங்களின்
உச்சப்பெரும் புள்ளிகளின்
இடைவிடாத இராஜதந்திர வருகைகள்
எம்மையெல்லாம்
தூக்கி நிமிர்த்தும் என்ற பேதமைகள்
முற்றுப்புள்ளிகளற்ற தொடுவானமாய்.

செங்கம்பள வரவேற்புகள்
ஐந்து நட்சத்திர
இந்திரலோக உபசரிப்புக்கள்
விருப்புகளுக்கேற்ற விதத்தில்
வித்தியாசமான விருந்துகள் என்ற
இலவச இன்பலாகிரிகளை
சுகித்துக் களித்துக் கிறங்கியவர்களுக்கு
அவ்வப்போதைய
ஆளுந் தரப்புக்களைப் பகைத்து
எமக்காக சுண்டு விரலைத்தானும்
நீட்டவா மனம் ஏவும்?

இருந்தும் ஒரு வேணவாவில்
பூரண கும்பம் வைத்து
மேளதாளங்கள் புடைசூழ
ஆரத்தியெடுத்து
ஆளுயரப் பூமாலை அணிந்து வரவேற்று
முறைப்பாடுகளாய்
மகஜர்களை இவர்களிடம்
கையளித்துக் கையளித்து
களைத்து விழுந்தபடி எமது
காலங்கள் கரைகின்றன.

– ஷெல்லிதாசன் –

## இருக்குமாயின்

நூல் : மறுபாதி
–டபிள்யூ பி.யேற்ஸ்–
தமிழில் : ம.பென்னம்பலம்



என்னிடம்
சித்திரப் பின்னல்கள் இட்டு நெய்யப்பட்டும்
தங்கமும் வெள்ளியும் ஒளிகால
நீலமும் மந்தமும் இருண்டதுமான
இரவையும் பகலையும் பாதி ஒளியையும் இட்டு
உருவாக்கப்பட்ட சொர்க்கத்தின்
துகில்கள் இருக்குமாயின்
அவற்றை நின்காலடியின் கீழ் பரப்புவேன்
ஆனால் நான்,
ஏழையாய் இருப்பதால்
என்னிடம் இருப்பதெல்லாம் கனவுகளே
எனது கனவுகளை நின்காலடியின்
கீழ் பரப்பியுள்ளேன்
மெதுவாக மிதியுங்கள்
ஏனெனில்
என் கனவுகள் மீது மிதிக்கிறீர்கள்.

## நாவுடன்!

சின்னச்சின்னப் பாடல்கள்
சீர் விளங்கும் பாடல்கள்
முன்னைப் பாடல் வேந்தரின்
முத்தமிழ்பா போன்றவை!

என்ன தேவையோ அதை
எடுத்துரைக்கும் பாடல்கள்
சொன்னவற்றைத் திரும்பவும்
சொல்லவைக்கும் பாடல்கள்

நீண்ட பாடல் பாடிட
நேரமில்லை என்பதால்
தூண்டித் தூய தமிழினைத்
துவங்க வைக்கும் பாடல்கள்!

இவ்விரண்டு அடிகளே
ஈரிரண்டு வரிகளே!
செவ்வையாகப் பாடினால்
சேர்ந்து கொள்ளும் நாவுடன்!



– தாமரைத்தீவான் –
[ஈச்சந்தீவு, கிண்ணியா]

## அமைதியைக் கெடுக்கும் ஆரம்பம்

[illegible]

வயது ஏறிப்போகப்போக
வடிவு மாறிப் போகும்:
வரவு வீண் செலவில் போனால்
வறுமை வந்து சேரும்:

அசுத்த சூழ லினால்
ஆரோக்கிய வாழ்வு கெடும்:
ஆடம்பரம் கூடக் கூட
அமைதி கெட்டு விடும்:

எடுப்பார் கைப் பிள்ளையானால்
ஏமாறிப்போவதுண்மை:
ஏதிர் நீச்சலிடத் தெழுந்தால்
எமக்கென்றும் தேவையில்லை:


உரிமையைப் பெற்றுயர
உள்ளத்திலுறுதி வேண்டும்:
சலுகைக்கு ஆசைப்பட்டால்
சமூகம் மதிக்காது நம்மை:

தமிழர் தம் பண்பாடுகளை
தவறாமல் பின்பற்றி வாழ்ந்தால்:
தமிழ்த் தெய்வம் திருமுருகனருள்
தடையின்றி கிட்டுமுண்மை:

இந்துமத தத்துவங்கள்
எல்லாமே மகத்துவங்கள்:
சுதந்திரமாய் கற்றுணர்ந்தால்
சுகமாக மனிதனாக வாழந்திடலாம்:



## வாழ்வு



மாயன்

நித்தியம் பற்றிய
என் நம்பிக்கைகள் - உறுதியாகி
உறுதியாகி
மலையாய்
வளர்கின்றன!

காலம் வரையும்
ஒவ்வொரு நிமிடமும்
அழகுதான் -

அதிகாலை
வெளிர் பகல்
அந்திமாலை

அன்பு நண்பர்கள்
அயல் வரும்
பெண்கள் -
மனதின் அந்தகாரத்தில்
வந்து போகும்
நிர்வாணிகள்

கவனிக்கப் - படத்
தக்கனவாய்

ஒரு நகர்வு - அதுவே
வாழ்வாகி
கவனிக்கப்படுதல்
பாராட்டல்கள்
பணிவுகள் - பண்புகள்
பழிவாங்கல் திருப்திகள்
என
நகரும் வாழ்வின்

நித்தியத்துவம் - பற்றிய
நம்பிக்கைகளை
அழகான வாழ்வு
மலையாக்குகின்றது

அழகான இவ்
வாழ்வில் - ஏன்
ஆங்காங்கே கரும் புள்ளிகள்?

என் வயதொத்த
இளையோரின்
மரணம் ...

மலைகளைக் குடையச்
சிறு எறும்புகள் போதுமோ?

என் இரவுகளில்
எறும்புகள் பற்றிய
கனவுகள் - அச்சுறுத்துகின்றன ..

இரவின் வாழ்வு
எறும்புகளால் அழிகின்றது

விடியலில் - கூட
மேலும் சில
எறும்புகள் தின்று
தீர்த்தன - என்
நித்தியத்துவத்தை

அழகிழந்தன
காலம் வரையும்
நிமிடங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்காக அஞ்சுகின்றார் சனாதிபதி?

குறித்த சாட்சி வெலிக்கடைச் சிறைச்சாலையில் கலவரம் நிகழ்ந்த பொழுது அங்கு கைதியாக இருந்ததுடன் அங்க நடைபெற்றவற்றை முழுவதும் அறிந்த ஒரேயொரு சாட்சி என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுரேஸ் நந்திமல் என்ற குறித்த சாட்சி தற்போது விடுதலையாகி இருப்பதுடன் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் குழு என்ற பொது நிறுவனத்தின் தலைவராகவும் உள்ளார்.

நந்திமல் உட்பட சிறைச்சாலையின் அதிகாரிகள் மற்றும் அக்காலத்தில் கைதிகளாக அங்கிருந்தவர்கள் எனப் பலரால் விகாரணைக்குழுவிற்கு வாக்குமூலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மொறட்டுவைப் பிரதேசத்திலுள்ள கடையொன்றில் பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டிருந்த சுரேஸ் நந்திமல் தான் நான்கு புதியவர்களால் சுற்றிவளைக்கப்பட்டதை உணர்ந்த கொண்டார். " சிறைச்சாலையில் நடந்தவை தொடர்பாக மேலும் சாட்சிகளையோ அல்லது சிறைச்சாலைக்குச் செல்வதையோ நீ நிற்பாட்ட வேண்டும். இக்கட்டளையை கேட்காதவிடத்து நீ கொல்லப்படுவாய்" என அவர்கள் தன்னை அச்சுறுத்தியதாகத் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரும், காவல்துறையினரும், சிக்காவலர்களும் சம்பந்தப்பட்டுள்ள இச் சிறைச்சாலைக் கொலைகளுக்கு நீதி கிடைக்கும் வரை தனது செயற்பாடுகள் தொடரும் என்றும் அதற்காக விடப்படும் அச்சுறுத்தல்களையிடடுத் தான் கவலைப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அக்காலப்பகுதியில் பாதுகாப்புச் செயலராக இருந்த கோட்டாபய ராசபக்சேயின் உத்தரவுகளுக்கு அமையவே திட்டமிடப்பட்டு கொலைகள் நடைபெற்றதாகத் தெரிவித்துள்ள அவர் அரசியல் காரணங்களுக்காக வெலிக்கடைக் கொலைகளை மூடிமறைக்க தற்போதைய அரசு முற்படக் கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் வருகை நிறைவிற்கு வந்து ஓரிரு நாட்களில் மனித உரிமைக்காகப் பாடுபடும் சுரேஸ் நந்திமல் அச்சுறுத்தப்பட்டிருப்பது இவ்வாறான உண்மைகளை வெளிக்கொணரப்பாடுபடுபவர்களுக்கு இந்த நாட்டில் எந்தளவிற்குப் பாதுகாப்பு இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது.

1983ம் ஆண்டில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் 53 பேர் திட்டமிட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நடந்த இரண்டாவது மிகத் துரதிஸ்டவசமான கொலைகளாக நவம்பர் 09, 2012ல் நிகழ்ந்த கொலைகள் வரலாறாக்கப்பட்டுள்ளன.

நவம்பர் 9, 2012 அன்று மாலை 1.30 மணிக்கு விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்கள் முன்னூறு பேர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருநத சுமார் நான்காயிரம் கைதிகளை சோதனையிட்டு சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருட்களைக் கைப்பற்றும் சிறைக்காவலர்களின் திட்டத்திற்கு உதவி செய்யக் களம் இறங்கினர்.

இச்சோதனை நடவடிக்கையானது பயங்கரக் குற்றங்களை இழைத்த கைதிகளை அடைத்து வைத்திருக்கும் பகுதியான ''எல்'' பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டது. அப்பகுதியில் இருந்த கைதிகளின் எதிர்ப்பையும் மீறி சோதனையிடப்பட்ட போது கையடக்கத் தொலைபேசிகளும் போதைமருந்துப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து சிறைக்கூடத்தின் "செப்பல் விடுதி" யை நோக்கி கமாண்டோக்கள் நகர்ந்தனர். இவ்விடுதியில் மரணதண்டனை, ஆயுள் தண்டனை மற்றும் நீண்டகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர்.

அங்கு தான் கலவரம் ஆரம்பமானது. அச்சிறைக்கைதிகளை கைவிலங்கிட கமாண்டோக்கள் முயன்றபோது எதிர்ப்பும் கைகலப்பும் ஆரம்பமாகின. இதனையடுத்துத் தாம் நிர்வாணமாக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டதாகக் கைதிகள் தெரிவித்திருப்பதுடன் அதனைத் தடுக்கும் நோக்குடன் கற்களாலும் கைகளில் கிடைத்தவற்றாலும் கமாண்டோக்களைத் தாக்கத் தொடங்கினர். அதனையடுத்து கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி இக்கலவரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயன்ற கமாண்டோக்களுக்கு அதிர்ச்சி வைத்தியமாக சிறைச்சாலயின் "பிங்கோ" என்ற பகுதிக்குள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த கைதிகள் பயிக்கு வழங்கப்பட்டிருந்த ஆயுதங்களுடன் தமது சிறைக் கூடக்கதவுகளைத் தகர்த்துக்கொண்டு பொதுக்கட்டிடத் தொகுதிக்குள் நுழைந்தபோது கைதிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாது கமாண்டோக்களும், சிறைக் - காவலரும் சிறைக்கூடத்தைவிட்டு வெளிநகர்ந்தனர்.

எனினும் சில காவலர்கள் பணயக் - கைதிகளாக சிறைக்கைதிகளிடம் அகப் -பட்டுக்கொண்டனர். சிறைக்கூடத்தின் ஆயுதக்கிடக்கைக் கைப்பற்றிய கைதிகள் அவற்றிலிருந்து எடுத்துக்கொண்ட ஆயுதங்களுடன் சிறைக்கூடத்தின் கூரையில் ஏறிய போதுதான் உண்மை நிலவரிம் வெளித்தெரியத் தொடங்கியது.

மாலை 5.45மணியளிவில் வெலிக்கடைச் சிறைக்கூடத்திற்குச் செல்லும் அதைத்து பாதைகளும் மூடப்பட்டு இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். 6.45மணியளவில் வெலிக்கடைச் சிறைக்கூடத்தின் பிரதான வாசலின் ஊடாக முச்சக்கரவண்டியொன்றில் தப்பிச் செல்ல முற்பட்ட ஐந்து கைதிகளில் நால்வர் கமாண்டோக்களின் சுடுகலப் பிரயோகத்திற்குப் பலியாகினர்.

இதனையடுத்து உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் கடுமையான சுடுகலப்பிரயோகங்களை இரு- தரப்பினரும் மேற்கொண்டுருந்தனர்.

மாலை 6.25 மணிக்கு அப்பிரதேசத்திற்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அவ்வாறு நடைபெற்றது ஏன் என்பதையிட்டு தற்போதும் சந்தேகம் நிலவுகின்றது.

அதனையடுத்துப் பலதடவைகள் பிரதான வாயிலின் ஊடாக உட்புக முயன்ற இராணுவம மற்றும் கமாண்டோக்களின் முயற்சி தோல்வியடையவே அவர்கள் கவச வாகனமொன்றின் பாதுகாப்புடன் சிறைச்சாலைக்குள் இரவு 8 மணியளவில் புகமுயன்ற எத்தனத்தை கடும் மழை பின்தள்ளிப் போட்டது. பின்னர் அதிகால் 2 மணியளவில் உட்புகுந்த கமாண்டோக்களின் முழுக் கட்டுப்பாட்டில் சிறைச்சாலை கொண்டுவரப்பட்டது.

இருபத்தியேழு கைதிகள் கொல்லப்பட்ட இந் நடவடிக்கையில் இருபது கைதிகள் காயமடைந்ததுடன் பதின்மூன்று கமாண்டோக்கள், ஒரு சிறைக்காவலர் உட்பட மேலும் இருவர் காயமடைந்தனர். இந்நடவடிக்கையில் கொல்லப்பட்ட கைதிகளில் சிலர் முன்னரே திட்டமிட்டவகையில் கொல்லப்பட்டதாகவே சாட்சிகளும், மனித உரிமையாளர்களும் தற்போது ஆட்சியிலிருக்கும் அன்றைய எதிர்க் - கட்சியும் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

கமாண்டோக்களை சோதனை- யிடுவதற்கு அழைத்து வந்ததை விரும்பாத சிறைக்காவலர்கிளன் உதவியுடன் இந்த கலவரம் நடைபெற்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஆராய நியமிக்கப்பட்ட மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட விசாரணைக்குழுவின் அறிக்கை தற்போது பிரதமரிடம் இருக்கின்றது.

அவ்வறிக்கையில் சில கைதிகள் கலவரத்தில் கொல்லப்படவில்லை என்றும் கலவரத்தை உருவாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அந்நடவடிக்கை யாரால் திட்டமிடப்பட்டது என்பதும் உள்ளடங்கியிருப்பதாகவும் மனித உரிமை அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.



காவல்துறையினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை முயற் - சிகளும் தடைப் - பட்டுள்ள நிலையில் யாருக்கு அஞ்சி இந்த அறிக்கையில் குற்றவாளிகளாகச் சந்தேகப்பட்டுள்ள நபர் யார் என்பதை வெளிப்படுத்த சனாதிபதியும் பிரத - மரும் பின்நிற் - கின்றனர் என்பது புரியாத புதிராகவே இருக்கின்றது.

அண்மையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொல்லப்பட்டவர்களின் உறவு- களால் மேற்கொள்ள- ப்பட்ட ஆர்ப்பாட்- டத்தின் போது " என்னுடைய சகோதரனின் மகனைக் கொன்றுவிட்டார்கள். அன்று அவனுக்கு வெறும் 25 வயதுதான். அவனது உடலில் பதினாறு தரம் சுட்டிருந்தார்கள். அவனுடைய தகப்பனாரும் கொல்லப்பட்டிருந்தார். இவர்களைக் கொன்றுவிடுமாறு கட்டளை பிறப்பித்த கோட்டாபய இன்றும் வெளியில் திரிகின்றார். மஹிந்த விகாரை விகாரையாகத் திரிகின்றார். திரிந்தாலும் அவர் செய்த பாவம் கழுவப்பட்டுவிடாது. விசாரணை அறிக்கையின் படி குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துங்கள் என சனாதிபதியையும், பிரதம மந்திரியையும் நாம் கேட்டுக்கொள்கின்றோம்...... சனாதிபதி இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதாக எமக்கு வாக்குத் தந்துள்ளார்" எனத் தெரிவித்துள்ள பெண்மணியொருவர் மற்றொன்றையும் தெரிவித்துள்ளார். அக் கூற்று "எந்தத் தலைவருக்கு முதுகெழும்பு உள்ளதோ அவரால் மட்டுமே அது முடியும்"........

மொழிமாற்றமும் – தொகுப்பும்

**-மாயன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல்

# சிந்தனை செய் மனமே!!



(வி.என்.சந்திரகாந்தி)

மனித மனம் அறிந்து கொள்வனவற்றில் எல்லாம் அதி நுண்மையானதும் மிகுந்த சக்தி வாய்ந்ததுமான சிந்தனையாகும். சிந்தனைக்கு ஓய்வு என்பது கிடையாது. ஆழ்ந்த தூக்கத்தில் கூட மனமானது சிந்தனை வயப்பட்டிருப்பதை கனவுகள் உணர்த்துகின்றன. பிரபஞ்சத்திற்கு எல்லை நிர்ணயிப்பது எப்படி சாத்தியமானது அல்லவோ அதே போன்று சிந்தனைக்கும் முற்றுப்புள்ளி வைக்கமுடியாது. அது கடந்த கால வயப்பட்டு எமது வாழ்க்கையில் சம்பவித்த நன்மை, தீமைகள், சந்தோசம், கவலை, வெற்றி, தோல்விகள் பற்றியெல்லாம் எண்ணி மகிழும் அல்லது துயருறும்: அதே போன்று நிகழ்கால வயப்பட்டு எமது செயல்கள் எமக்கு சம்பவிப்பவை பற்றியெல்லாம் ஏன் எப்படி எப்போ? எங்கே? என்றெல்லாம் கேள்விகளை எழுப்பி விசாரணை செய்யும்.

இனி எதிர்காலம் மிகவும் பிரதானமானது. எமது எதிர்கால வெற்றிக்கெல்லாம் காரணம் எமது சிந்தனை என்றால் மிகையாகாது. எமது கல்வி, தொழில், வாழ்கை பற்றிய திட்டமிடலில் சிந்தனை தீவிரமாக ஈடுபடுகின்றது. ஈடுபட்டேயாக வேண்டும்!.

மனோ வேகம் என்று சொல்கிறோம் அல்லவா! அது மனதின் சிந்தனை வேகத்தையே குறிப்பதாகும். பல ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள நட்சத்திரங்களை கூட மனோ வேகம் சில நொடிகளில் எட்டிவிடுகின்றது. அதே போன்று எப்படிப்பட்ட பிரச்சனைகள், புதிர்கள், கணித சிக்கல்களாயிருந்தாலும் உரிய சிந்தனை மூலம் சில நொடிகளில் விடுவிக்க முடியும். எமது உறவுகள் எவ்வளவு தொலைவில் இருந்தாலும் கூட சிந்தனை மூலமாக நாம் அவர்களை நினைவு கூருகின்றோம். மன அமைதி பெறுகின்றோம்.

எமக்கு சமூகத்துடனான பிணைப்பு ஒன்று இருக்கின்றது என்றால் அதற்கு அத்திவாரம் எமது சிந்தனை தான். சிந்தனை இல்லாத பட்சத்தில் எமக்கும் றோபோகளுக்கும் வித்தியாசம் இருக்காது. அவரவர் தத்தம் போக்கில் அலைய வேண்டியதுதான். சிந்தனையின் மூலம்தான் நாம் உறவுகளை அடையாளம் காண்கிறோம். பெற்றோர் பிள்ளைகள், கணவன், மனைவி, அக்கா, தங்கை, அண்ணா, தம்பி என்று பல்வேறுபட்ட உறவுகளும் எமது மனப்பதிவில் இருக்கின்றது. அவர்களுடனான பாச பிணைப்புக்கள், கொடுக்கல் வாங்கல்கள், சண்டை சச்சரவுகள் எல்லாமே சிந்தனை வாயிலாக எமக்கு நினைவூட்டப்படுகின்றன. நாம் சிலரை நேசிப்பதற்கும் சிலரிடமிருந்து விலகி நடப்பதற்கும் அதுவே அடிப்படையாக இருக்கின்றது. சொல்லப்போனால் அனுபவங்களை முன்னிட்ட ஒப்பு நோக்கலே சிந்தனையின் முடிவாகும்.

உடம்பின் ஆரோக்கியத்திற்காக உடற்பயிற்சிகளை மேற்கொள்கின்றோம். அதே போன்று மூளையின் வளர்ச்சிக்கு சிந்தனை செய்வது மிக மிக அவசியமாகும். இன்னும் சொல்லப் போனால் சிந்தனை செய்வதன் மூலம் செயற்றிறன் அதிகரிப்பதுடன் உடலாரோக்கியமும் மேம்படுகின்றது என்று கூறவேண்டும். நல்ல எழுத்தாளர்கள், சிறந்த விஞ்ஞானிகள், உயர் அரசியல் வாதிகள் போன்றோர் அதிகம் சிந்திப்பதனால் அவர்களது உடல் ஆரோக்கியம் நன்கு பாதுகாக்கப்படுகின்றது.

சிந்திப்பவர்கள் அனைவருமே தமது வாழ்கையை நன்கு திட்டமிட்டு கொள்கிறார்கள். அதனால் அவர்களது வாழ்கை பூத்து குலுங்குகின்றது. மகிழ்ச்சியுடன் வாழ்வதொன்றே போதும் எமது உடலாரோக்கியத்தை பாதுகாப்பதற்கு.

சிந்தனை என்றால் என்ன என்பதை ஒவ்வொருவரும் அறியவே செய்வர். சிந்தனை பல்வேறு பிரிவுகளை உடைத்து. சிந்திப்பது என்பது விடயங்களை நினைப்பதாகும். அதன் பின்னர் என்ன செய்கின்றோம்? நினைத்த விடயங்களை வரிசைப்படுத்தி வைக்கின்றோம். பின்னர் ஒன்றுடன் மற்றொன்றை ஒருங்கிணைத்து பார்க்கின்றோம். அது நினைவில் நிலைத்து ஒரு அனுபவமாகிறது. அந்த அனுபவங்களில் எது மகிழ்ச்சி தருகின்றது. எது கவலை தருகின்றது என்பதை வைத்து எதிர்காலத்தை திட்டமிடுகின்றோம். எமது எதிர்கால சுபீட்சம் சாத்தியமாவதற்கு சிந்தனை எப்படி வழிகோலுகின்றது என்று பாருங்கள்.!

சிந்தனை எமது வினாக்கள் பலவற்றிற்கும் விடை பகர்கின்றது. எது நிரந்தரம்? எது தற்காலிகம்? எது உண்மை? எது பொய்? போன்ற பல கேள்விகளுக்கு தீர்வை காண முடிகின்றது.

எமது கடந்த கால வாழ்கையில் இடம்பெற்ற மகிழ்ச்சியான சம்பவங்களை நாம் மீண்டும் மீண்டும் சிந்தித்து களிப்பெய்தக் கூடியதாக இருக்கின்றது. எமக்கு கவலை தரும் நினைவுகளை மனதை விட்டு அழிப்பதையே நாம் நோக்காக கொண்டிருக்கின்றோம். அதற்கு கூட சிந்தனைதான் பல ஆறுதல் மொழிகளை முன்வைக்கின்றது.

இனி சமூகத்தில் பல்வேறு தரப்பட்ட மக்கள் இருக்கின்றார்கள். அவர்களுடைய சிந்தனைகள் வெவ்வேறு பட்டே இருக்கும். அவற்றை பிரதானமாக இரண்டு பிரிவுகளில் அடக்கலாம். ஒன்று ஆக்க பூர்வ சிந்தனைகள் இரண்டு அழிவை நோக்கிய சிந்தனைகள்.

விவசாயம், கைத்தொழில், உற்பத்தியை நோக்கிய விஞ்ஞான வளர்ச்சி ஆகியவை பாராட்டப்பட வேண்டியன. மறுவளமாக மனித குலத்தின் அழிவுக்கு காரணமானவை அழிவை முன்னிட்ட சிந்தனையாகும். சுடுகலன்கள், அணு ஆயுதங்கள், நீரக் குண்டுகள், ஏவுகணைகள் போன்றவை வெறுக்கத்தக்கனவாகும்.

தவிர, சரியான மன நிலை எனப்படுவது மயக்கமற்ற அறிவு ஆகும். எது சரி எது பிழை என்ற ஐயம் இருக்க கூடாது. தெளிவுடன் இருக்க வேண்டும். நாம் இதனை செய்தாலேயே மற்றவர்களுக்கு நன்மை பயக்கும் என்பதில் உறுதி வேண்டும். எப்போதும் நடுவுநிலைமையுடன் பிரச்சனைகளை அணுக வேண்டும். பக்க சார்பு பலரை புண்படுத்தும். பொறுமையை கடைப் பிடிக்க வேண்டும். இரக்கம் எவரையும் கவர்ந்து விடும். அன்பு, பாசம், பிணைப்பை உண்டு பண்ணும் அமைதியும் நம்பிக்கையும் மகிழ்வு தரும். மனத் தூய்மைதரும்!

மஹாத்மா காந்தி, ஸ்ரீ இராமகிருஷ்ணர், ரமணமகரிஷி போன்றோரை பற்றி சிறிது சிந்தியுங்கள். அவர்களிடமிருந்த பிரதான சிறப்பம்சமே சுயநலமின்மையாகும். அவர்கள் எப்போதுமே தமது சிந்தனையை. ஒட்டு மொத்த மக்கள் சார்பிலேயே மேற்கொண்டார்கள். ஆணவத்தை அறவே துறந்தார்கள். [illegible] இருந்தார்கள். [illegible]

மகிழ்ச்சி, ஆகியவற்றை மக்கள் மனத்தில் பதித்தார்கள். அவை மனத்தெளிவின் நிமித்தமான கடமை, நேர்மை, கண்ணியம், ஆகியவற்றிற்கு வித்திட்டு மனித குலத்தை மேம்படுத்தின!.

அழிவு சிந்தனையை, சட்டம் நியதிகளுக்கு விரோதமான சிந்தனைகள் என்று குறிப்பிடலாம். சுயநலமும் இம்சை மனப்பாங்குமே ஒருவனை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்கின்றன. தவறை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு இன்மை, இரக்க குணம் இன்மை, மன்னிக்கும் சுபாவம் இன்மை ஆகியன ஒருவனை நெறி தப்ப வைக்கின்றது. போதைப் பொருள் பாவனை தவறான சிந்தனைக்கு இட்டுச்செல்கின்றது. இன்று நீதி மன்றங்களின் முன் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டவர்களின் சிந்தனை எப்படி இருந்திருக்க கூடும் என்று சற்று சிந்தித்து பாருங்கள். குற்றம் உள்ள மனது தவறான பாதைக்கு இட்டுச்செல்கின்றது. எதிர்பார்க்கும் சுகம் தடுக்கப்பட்டவுடன் கோபமும் பழிவாங்கும் உணர்வும் உண்டாகின்றது. பாலியல் வல்லுறவு போன்ற வலுகட்டாயமான சுகத்தில் ஆசையை தணிக்க விழைகின்றது. பிற பொருட்களை களவாட முயற்சிக்கின்றது. கொலை செய்யவும் அஞ்சாத சிந்தனை உண்டாகின்றது.!

இவற்றிற்கெல்லாம் காரணம் என்னவென்றால் தெளிவான கருத்துக்கள் இல்லாமையே ஆகும். கருத்துக்களே சிந்தனைக்கு ஆதாரம். சிந்தனை முடிவுக்கு காரணம்.

ஒவ்வொரு மனிதரும் சற்று சிந்திக்க வேண்டும். நாம் யார்? எம்மை படைத்தவர் யார? நோக்கம் என்ன? இந்த வாழ்கையின் முடிவு எங்கே செல்கின்றது? மரணத்தின் பின் மேலே இருப்பது என்ன? கடவுள் கடவுள் என்கிறார்களே அப்படி ஒருவர் இருக்கிறாரா? அறியாதவற்றிற்கு எமது சிந்தனை விடை பகருமா?

எமது சிந்தனைக்கு அப்பாற் பட்ட பல விடயங்கள் இருக்கின்றன. அவற்றை அறிய வேண்டுமாயின் எமது மனம் பக்குவப்படவேண்டும். அமைதி காண வேண்டும். நிதானம் உண்டாக வேண்டும். அப்போது தான் சிந்தனை தெளிவு பெறும்.

அப்பர், சம்மந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் பற்றி சிறிது சிந்தியுங்கள். ஞானம் உண்டானதால் தான் அவர்களுக்கு முக்தி கிடைத்தது. ஆழ்ந்த சிந்தனையில் நிலைக்கவும். உலகை மறக்கவும். இயலுமானதாக வேண்டும். ஆழ்ந்த சிந்தனையே தியானமாகும். சிந்தனை சிந்தனை என்கின்றோமே அதனையும் வென்றவர்கள்தான் சமய குரவர்கள்.

எமது சிந்தனைக்கு அப்பாற் பட்ட விடயங்களை இறைவன் அவர்கள் வாயிலாக எமக்கு எடுத்துரைத்துள்ளான். இறைவன் துணை இல்லாமல் நாம் எமது சிந்தனைக்கு அப்பாற்பட்ட விடயங்கள் பற்றி அறிய முடியாது. அவை வேதங்களாக, இதிகாஷங்களாக, ரிஷிகளுக்கு அருளப்பட்டு மனித குலங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது!



புல் வெட்டு இயந்திரத்தால் அரிவு வெட்டு – கிளிநொச்சி

## விநோதங்கள்

### வாசித்து செயற்படுகின்றதாம் ஓர் நாய்




பிரித்தானியாவில் காகிதத்தில் எழுதப்பட்ட வார்த்தைகளை படித்து புரிந்துக்கொண்டு அதன்படி செயல்படும் அதிசய நாய் ஒன்று அந்நாட்டில் உள்ள பள்ளியில் வளர்க்கப்பட்டு வருவதாக வியக்க வைக்கும் தகவல்கள் வெளியாகியுள்ளன. sit, down, over, spin around எனும் வார்த்தைகளை பார்த்து புரிந்து கொண்டு செயல்படுகின்றதாம் பெர்ணி எனப்படும் அந்நாய்.

### சூனியக்காரன் “ஹோப்” ஆனான்.



ஆப்பிரிக்க நாடுகளில் கல்வியறிவு அற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் பல்வேறு மூடப்பழக்கங்களும் நடைமுறையில் இருந்து வருகிறது.

பெற்ற பிள்ளையை பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் சூனியக்காரன் எனக்கூறி கைவிட்ட நிலையில், தொண்டு நிறுவன பெண் சேவகர் ஒருவர் சரியான நேரத்தில் உயிரை காப்பாற்றி ஹோப் என அவனுக்கு பெயரும் சூட்டியுள்ளார்.

### 3 வயது மகன் கொலை செய்த தாய்க்கு விடுதலை

பிரித்தானியாவில் தாயார் ஒருவர் என்ற வகை காரினை கொள்வனவு செய்துள்ளார். காரினை ஓட்டுவதற்கு பழக்கித் தருமாறு தன் கணவனிடம் கூறியவாறு காரினை ஓட்டியுள்ளார். அவரால் காரை கட்டுப்படுத்த முடியாது முன்னால் மகன் ஓடிவருவதை கண்ணுற்ற போதும் பிரேக் போடுவதற்கு பதில் அக்ஸலேட்டரை அழுத்துயுள்ளார். காரின் முன் சில்லு மாட்டிக் கொண்டான் மகன்.

இக்கொலையானது திட்டமிட்டு செய்யப்படாமையாலும் எதிர்பாராத விதமாக தன் குழந்தையை இழந்து தவிக்கும் தாய்க்கு தண்டனை வழங்க முடியாது எனவும் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.



### குழந்தை வெளியேற்றம்

ஜேர்மனி நாட்டில் புகலிடம் கோரி பெற்றோர்களுடன் வந்த 20 மாதக் குழந்தையை ஒரு வாரக் காலத்திற்குள் நாட்டை விட்டு வெளியேறுமாரு அந்நாட்டு குடியமர்வு துறை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

ஏனெனில் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தால் மட்டுமே புகலிடம் கோர முடியும் எனவும் அக்குழந்தை ஜேர்மனியிலே பிறந்தமையால் அக்குழந்தைக்கு எதுவித அச்சுறுத்தலும் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை எனவும் இன்னும் ஒரு வார காலத்திற்குள் குழந்தை நாட்டை விட்டு வெளியேற வேண்டும் இல்லையேல் குழந்தை நாடுகடத்தப்படும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## விசாரணை

அடுத்த வார இயத்தில்

நடிகர்: தினேஷ்
நடிகை: ஆனந்தி
இசை: ஜி.வி.பிரகாஷ்
ஒளிப்பதிவு: ராமலிங்கம்
இயக்கம்: வெற்றிமாறன்



# திரை விமர்சனம் பெங்களூர் நாட்கள்

நடிகர் : ஆர்யா, ராணா, பாபி சிம்ஹா
நடிகை : சமந்தா, ஸ்ரீதிவ்யா, ராய் லட்சுமி, பார்வதி
இசை : கோபி சுந்தர்
ஒளிப்பதிவு : கே.வி.குகன்
இயக்குனர் : பொம்மரில்லு பாஸ்கர்

மற்றவர்களின் எதிர்பார்ப்புகளை புரிந்துகொள்ளாத ஆர்யா, இந்திய கலாச்சாரத்தை பின்பற்றும் பாபி சிம்ஹா, எம்.பி.ஏ. படிக்க வேண்டும் என்ற கனவோடு வாழும் ஸ்ரீதிவ்யா இவர்கள் மூவரும் சிறுவயது முதலே நண்பர்கள். இந்த மூவருக்கும் பெங்களூர் என்பது நீண்டநாள் கனவு. இந்நிலையில், ராணாவை கல்யாணம் செய்துகொள்வதால் ஸ்ரீதிவ்யா பெங்களூருக்கு பயணமாகிறார். பாபி சிம்ஹாவுக்கு பெங்களூரில் வேலை கிடைக்கிறது. ஆர்யாவும் ஒருகட்டத்தில் பெங்களூர் வர நேரிடுகிறது. பெங்களூர் நாட்கள் இனிமையானதாக அமையும் என நினைத்துக் கொண்டிருந்த ஸ்ரீதிவ்யாவிற்கு, ராணாவின் நடவடிக்கைகள் ஏமாற்றத்தைத் தருகிறது. அதேபோல் பாபி சிம்ஹாவுக்கும் ஒரு காதல் தோல்வி ஏற்படுகிறது. இன்னொருபுறம் ஆர்யாவுக்கும், அவர் காதலிக்கும் பார்வதிக்கும் இடையே மலரும் காதலுக்குத் தடையாக, பார்வதியின் அம்மா ரேகா குறுக்கே வருகிறார். மீண்டும் இவர்களின் வாழ்க்கை இனிமையாக மாறி, 3 பேராக இருந்த நண்பர்கள் கூட்டம் 6 பேராக எப்படி மாறுகிறது என்பதே இந்த பெங்களூர் நாட்கள்.



துறுதுறு ஸ்ரீதிவ்யா, ஜாலி பாய் ஆர்யா, அம்மாஞ்சி பாபி சிம்ஹா, ரஃப் அன்ட் டஃப் ராணா, கொஞ்சநேரமே வந்தாலும் மனதை அள்ளும் சமந்தா, பார்வையிலேயே பேசும் பார்வதி, ஏர்கோஸ்டஸ் ராய் லட்சுமி என ஒரு பெரிய நட்சத்திர பட்டாளமே களமிறங்கியிருக்கிறது பெங்களூர் நாட்களில். இதில் பாபி சிம்ஹாவைத் தவிர்த்து மற்ற அனைவரும் ஓரளவுக்கு பெங்களூர் டேஸ் கேரக்டர்களுக்குப் பொருந்திவிட்டார்கள். பாபி சிம்ஹாவுக்கு அவருடைய கதாபாத்திரம் சற்றும் பொருந்தவில்லை. ஆனாலும், நடிப்பில் ஓகே ரகம்தான்.

ஆர்யாவின் காதலியாக வரும் பார்வதி கொள்ளை அழகில் கவர்கிறார். இவருடைய கதாபாத்திரத்திற்கு வேறொருவரை நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். அமைதியாகவே வரும் ராணா, நடிப்பில் பேசவைக்கிறார். சமந்தா சில காட்சிகளே வந்தாலும் மனதில் பதிகிறார். அவருடைய அப்பாவாக வரும் பிரகாஷ்ராஜும் அனுபவ நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். சரண்யா பொன்வண்ணன் இடைவேளைக்கு பிறகு காமெடியில் கலகலக்க வைக்கிறார்.

பெங்களூர் டேஸ் மலையாள படத்தின் கதையில் எந்த ஒரு சிறு மாற்றத்தையும் செய்யாமல், அதை அப்படியே தமிழில் ரீமேக் செய்ததற்கு பொம்மரிலு பாஸ்கருக்கு பாராட்டுக்கள். இப்படத்தின் மிகப்பெரிய பலமே படம் முழுவதும் நிறைந்து கிடக்கும் உணர்வுப்பூர்வமான காட்சியமைப்புகள்தான். அதை எந்தவிதத்திலும் இப்படத்தில் கெடாமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கோபி சுந்தரின் பாடல்கள் படத்தின் திரைக்கதையை ரசிக்க விடாமல் செய்கிறது. பின்னணி இசையிலும் கூடுதலாக கவனம் செலுத்தியிருக்கலாம். குகன் ஒளிப்பதிவு கலர்புல்லாகவும் ரசிக்கும்படியும் இருக்கிறது. சந்தோஷ் நாராயணன் இசையில் அமைந்துள்ள பாடல்கள் படத்தின் திரைக்கதையை பாதிக்காத வண்ணம் அமைந்திருப்பது சிறப்பு. பின்னணி இசையில் பட்டையை கிளப்பியிருக்கிறார். சிவகுமார் விஜயன் ஒளிப்பதிவும் அருமையாக இருக்கிறது.

**மொத்தத்தில் 'பெங்களூர் நாட்கள்' ஓரளவு குளுகுளுதான்.**

## அடித்தது அதிர்ஷ்டம்

சூர்யா தற்போது 24 மற்றும் ஞ3 ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இப்படங்கள் முடிந்த கையோடு மிருதன் பட இயக்குனர் சக்தி சௌந்தர் ராஜன் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்கவுள்ளாராம்.சமீபத்தில் இவர் கூறிய கதை ஒன்று சூர்யாவை மிகவும் கவர்ந்ததாக கூறப்படுகின்றது.மேலும், முன்னணி தயாரிப்பு நிறுவனம் ஒன்று இப்படத்தை தயாரிக்க ஆவலுடன் இருப்பதாக தெரிகின்றது.

## தனுஷுடன் இணைகிறார் கௌதம்?

தமிழ் சினிமாவில் தனக்கென ஒரு தனித்துவம் உள்ள இயக்குனர்களில் கௌதம் மேனனும் ஒருவர். இவர் அடுத்து தனுஷ்டன் இணைந்து என்னை நோக்கி பாயும் தோட்டா என்ற படத்தை இயக்கவுள்ளார்.ஆனால், இப்படம் உருவாக முக்கிய காரணம் ஒரு நெகிழ்ச்சி சம்பவம் தானாம், கௌதமின் தந்தை இறந்த நேரத்தில் அவர் வெளிநாட்டில் இருந்துள்ளார்.அப்போது தனுஷ் தான் இங்கிருந்து அனைத்து வேலைகளையும் இழுத்துப்போட்டு செய்துள்ளார். இதனாலேயே இவர்கள் நட்பு இன்னும் அதிகமாக, அது படம் வரை தற்போது வந்துள்ளது, சபாஷ் தனுஷ்.

## அஜித் படம் பற்றி முருகதாஸ் அதிரடி பதில்!

முரகதாஸ் தற்போது இந்தி படத்தில் பிஸியாக இருக்கிறார். இப்படத்தையடுத்து மகேஷ் பாபுவை வைத்து தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் ரெட்ட தல என்ற படத்தை இயக்கவிருக்கிறார்.

முருகதாஸால்தான் அஜித்திற்கு தல என்ற பெயர் வந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. தீனா படத்தின் போதுதான் அஜித்திற்கு தல என்று பெயர் வைக்கப்பட்டது. தற்போது அதுவே அஜித்தின் அடையாளமாக மாறியுள்ளது. இந்நிலையில் அஜித்-முருகதாஸ் கூட்டணி மீண்டும் எப்போது இணையும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இதுகுறித்து முருகதாஸ் கூறும்போது, கண்டிப்பாக ஒவ்வொரு படமும் முடிந்த பிறகும் நான் அஜித்திற்கான கதையை கையில் எடுப்பேன். கதை முழுவதுமாக ரெடியாகி விட்டது, அதிவிரைவில் அவருடன் இணைந்து ஒரு படத்தை இயக்குவேன் என கூறியுள்ளார்.

## ஐ டியூனில் முதல் இடம்: யுவனை பாராட்டிய கௌதம் மேனன்!

கிருஷ்ணா - சுவாதி ரெட்டி இணைந்து நடிக்க, குழந்தை வேலப்பன் இயக்கும் படம் யாக்கை. இந்தப் படத்துக்காக யுவன் இசையில் உருவான, நீ என்று துவங்கும் ஒரு பாடல் சிங்கிள் டிராக் ஆக, பிப்ரவரி 13 ஆம் தேதி வெளியானது. வெளியான வேகத்தில் ஐ டியூன் அட்டவணையில் உச்சம் தொட்டிருக்கும் இந்தப் பாடல், யூ டியூப் மற்றும் சமூக வலைதளங்களில் அட்டகாசமாக டிரெண்ட் அடித்துக் கொண்டு இருக்கிறது.

ஆம்! பாடல் வெளியாகி சில நாட்களே ஆன நிலையில் வியப்பான வேகத்தில் இந்தப் பாடல் பிரபலமாகி இருப்பதோடு, சமூக வலைதளங்களில் நீங்கள் திரையில் பார்க்க விரும்பும் பாடல் எது? என்ற வாக்கெடுப்பில் முதல் இடத்துக்கும் வந்திருக்கிறது.

இயக்குனர் கவுதம் மேனனும் தன் டுவிட்டர் பக்கத்தில் இந்தப் பாடலை மேற்கோள் காட்டி yuvan is back என்று ட்வீட் செய்துள்ளார்.

## ரெமோ...... சிவகார்த்திகேயனின் அடுத்த படத் தலைப்பு

சிவகார்த்திகேயன் தற்போது பாக்யராஜ் கண்ணன் இயக்கும் பெயரிடாத படத்தில் நடித்து வருகிறார். இந்நிலையில் சிவகார்த்திகேயனின் பிறந்த நாள் அன்று படத்தின் பெயர் மாலை 6 மணியளவில் அறிவிக்கப்படும் என்று தயாரிப்பு நிறுவனம் தனது டிவிட்டர் பக்கத்தில் அறிவித்திருந்தது.

அதன்படி, இப்படத்திற்கு ரெமோ என்று பெயர் வைத்திருப்பதாக தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது. கீர்த்தி சுரேஷ் இப்படத்தில் சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடித்து வருகிறார். பி.சி. ஸ்ரீராம் ஒளிப்பதிவு செய்ய அனிருத் இப்படத்திற்கு இசையமைத்து வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டும் மைம்னல்


INFOMATION TECHNOLOGY

MOBILE

## 103 மொழிகளை மொழிமாற்றம் செய்கிறது Google Translater

மொழிமாற்றம் செய்யப்பயன்படும் Google Translater- ல் புதிதாக 13 மொழிகள் இணைக்கப்பட்டுள்ளன என்று கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளது. தற்போது 13 மொழிகள் சேர்க்கப்பட்டுள்ளதால், மொத்தம் 103 மொழிகளை மொழிமாற்றம் செய்வதற்கு Google Translater பயன்படுகிறது.

இதுகுறித்து கூகுள் நிறுவனத்தின் Senior Program Manager கூறியதாவது, கூகுள் இயந்திரத்தின் மூலம் மக்கள் புதிய மொழிகளை கற்றுக் கொள்ளலாம். அதிகமான வரிகளை மொழிமாற்றம் செய்வதற்கு சில பிரச்சனைகள் இருந்துவந்தது. ஆனால் தற்போது அதனை சரிசெய்வதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 3 மில்லியன் மக்களிடம் இருந்து 200 மில்லியன் வார்த்தைகளை மொழிமாற்றம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.




## மின்னல் வேக தரவு கடத்தும் தொழில்நுட்பம்

அசுர வளர்ச்சி கண்டுவரும் தொழில்நுட்ப உலகில் தரவுப் பரிமாற்றம் என்பது இன்றியமையாததாக விளங்குகின்றது.

அதிலும் இன்று அனைத்து துறைகளிலும் பயன்படுத்தப்பட்டுவரும் தரவுப் பரிமாற்ற வேகமானது புதிய தொழில்நுட்பங்களின் ஊடாக காலத்திற்கு காலம் அதிகரிக்கப்பட்டு வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக தற்போது ஒளியியல் தொழில்நுட்பத்தின் (Optical Communication System) ஊடாக செக்கனுக்கு 1.125 ரெறா பைட்ஸ் வேகத்தில் தரவு கடத்தும் முறையினை கண்டுபிடித்து ஐக்கிய இராச்சிய விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர். இவ் வேகமானது ஐக்கிய இராச்சியத்தில் தற்போது காணப்படும் பல்வேறு தரவு பரிமாற்ற வேகத்தினதும் சராசரியின் 50,000 மடங்கு அதிகம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், Games of Thrones தொடரின் HD பதிப்புக்களை 1 செக்கனில் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



OTHER


## நிலநடுக்கத்தை முன்கூட்டியே கணிக்கும் "MyShake" Application

அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் ஆன்ட்ராய்டு ஸ்மார்ட்போனில் நிலநடுக்கத்தை கண்டறியும் அப்பிளிகேஷனை உருவாக்கியுள்ளனர்.

"MyShake" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த அப்பிளிகேஷன், நிலநடுக்கத்தினை crowdsourcing phones மூலம் முன்கூட்டியே கணித்துவிடுகிறது.


அதாவது, ஒரு இடத்தில் நிலநடுக்கம் நிகழப்போகிறது என்றால், அந்த இடம் மற்றும் நேரம் அதுமட்டுமின்றி அதன் அதிர்வீச்சு போன்றவற்றை துல்லியமாக ஸ்கேன் செய்து உடனடியாக அது சம்பந்தப்பட்ட தகவல்கள் அனைத்தையும் கைப்பேசிக்கு அனுப்பி வைக்கிறது.

60 சதவீதம் வரையிலான ஆண்ராய்டு ஸ்மார்ட்கைப்பேசிகள் சுமார் 6 மைல்(10 கிலோ மீற்றர்) வரையிலான தூரத்தில் நிகழும் நிலநடுக்கத்தை தரவு(Data) அடிப்படையில், மிகத்துல்லியமாக கணிக்கும் என உறுதியாக கூற முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். தற்போது, மக்கள் அந்த அப்பிளிகேஷனை தரவிறக்கம் செய்து அதனை பயன்படுத்துவதற்கு முன்பாக, அது பற்றிய தகவல்களை முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும். கலிபோர்னியாவில் 16 மில்லியன் ஸ்மார்ட்கைப்பேசி மற்றும் உலக அளவில் 1 பில்லியன் ஸ்மார்ட்போன்களில் இந்த அப்பிளிகேஷன் பொருத்தப்படுவதற்கு மதிப்பிட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.




## மீள்தன்மை கொண்ட தொடுதிரை

கனடாவிலுள்ள குயீன்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஒன்றிணைந்து மீள் தன்மை கொண்ட நவீன தொடுதிரையின் மாதிரி ஒன்றினை உருவாக்கியுள்ளனர்.



எதிர்கால ஸ்மார்ட் கைப்பேசிகளில் பயன்படுத்தவுள்ள ReFlex எனும் இத் தொடுதிரையானது LG நிறுவனத்தினால் ஏற்கணவே அறிமுகம் செய்யப்பட்ட 720 Pixel கொண்ட OLED மீள்தன்மை உடைய திரையினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஸ்மார்ட் கைப்பேசியின் தடிப்பினை மேலும் குறைக்க முடிவதுடன், அவற்றில் கீறல்கள், உடைவு ஏற்படுவதனையும் தடுக்க முடியும் என குறிப்பிட்டுள்ளனர். எனினும் இவ்வகை தொடுதிரைகளைக் கொண்ட கைப்பேசிகள் அறிமுகம் ஆனதன் பின்னரே அவற்றிற்குரிய வரவேற்பு எவ்வாறு இருக்கும் என்பதை அறிய முடியும்.

## புதிய பதிப்பில் அதிரடி வசதி

மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுவரும் முன்னணி மின்னஞ்சல் சேவையான Outlook இற்கான மொபைல் அப்பிளிக்கேஷனின் புதிய பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.




iOS, Android, மற்றும் Windows 10 ஆகிய இயங்குதளங்களைக் கொண்ட மொபைல் சாதனங்களுக்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இப் புதிய பதிப்பில் அனிமேஷன்களைக் கொண்ட பகை கோப்புக்களையும் இணைத்துக் கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் இலகுவாக கையாளக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதேவேளை Office 365 அப்பிளிக்கேஷனைப் பயன்படுத்துபவர்களுக்கு பெரிதும் பயன்தரக்கூடிய புதிய சில வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளம விசேட அம்சமாகும்.

## பனிப் பிரதேசங்களிலும் பயணிக்கக்கூடிய கார் தயார்

சாதாரண வாகனங்கள் பனிப் பிரதேசங்களிலோ அல்லது மணல் பிரதேசங்களிலோ இலகுவாக பயணம் செய்ய முடியாது என்பது அனைவரும் அறிந்ததே.

இதற்காக பிரதேசங்களுக்கு ஏற்றாற்போல் வாகனங்கள் வடிவமைக்கப்படுவது வழக்கமாகும். இவற்றின் வரிசையில் முன்னணி வாகன வடிவமைப்பு நிறுவனமான Nissan நவீன ரக கார் ஒன்றினை வடிவமைத்துள்ளது. இக் காரானது குளிர்ப் பிரதேசங்களில் பனி படர்ந்துள்ள நிலையிலும் எவ்வித இடர்பாடும் இன்றி பயணிக்கக்கூடியதாக இருக்கின்றது. எனினும் இக்கார் தொடர்பான மேலதிக தகவல்கள் மற்றும் விலை என்பன இதுவரை வெளியிடப்படவில்லை.




## ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் அழியாத குறுந்தகடு




சுமார் 360 டெரா பைட் வரை சேமிக்கும் வசதி கொண்ட அழியா குறுந்தகடை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.


பிரிட்டனின் சவுதாம்ப்டன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் அழியாத வகையில் குறுந்தகடு ஒன்றை உருவாக்கியுள்ளனர். நானோ தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்பட்ட கண்ணாடி இழைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தக் குறுந்தகடு, சிறிய நாணயத்தின் அளவே உள்ளது. எனினும், இதில் 360 டெராபைட் (1 டெரா பைட் என்பது 100 ஜிகா பைட்) அளவிலான மின்னணுத் தகவல்களைப் பதிவு செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது

லேசர் கதிர் மூலம் அதிவேகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இந்த குறுந்தகட்டில் தகவல்கள் பதிவு செய்யவும், மீண்டும் பெறவும் முடியும். இதன் நவீன தொழில்நுட்பம் காரணமாக ஒவ்வொரு தகவல் புள்ளியும் 5 மைக்ரோமீட்டர்(ஒரு மீட்டரின் பத்து லட்சத்தில் ஒரு பகுதி) இடைவெளியில் அமைந்துள்ளாதால், மிகச் சிறிய இடத்திலேயே அதிக தகவல்களைப் பதிவு செய்ய முடிகிறது.

சூப்பர்மேன் மெமரி கிறிஸ்டல்ஸ்" என்று பெயரிடப்பட்டுள்ள இந்த குறுந்தகடு 1,000 டிகிரி செல்ஷியஸ் வரையிலான வெப்பத்தை தாக்குப் பிடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 190 டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலையில் கூட இந்தக் குறுந்தகடு 1,380 கோடி ஆண்டுகள் நிலைத்திருக்கும் என்றும் சாதாரண வெப்ப நிலையில் இந்தக் குறுந்தகடுகள் எல்லையற்ற வாழ்நாளைக் கொண்டிருக்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.இதில் பதிவு செய்யப்பட்ட தகவல்கள் பல கோடி ஆண்டுகள் வரை அழியாமல் இருக்கும் என்பதால், வரலாற்று ஆவணங்களைப் பாதுகாக்கும் துறையினருக்கு இந்த குறுந்தகடுகள் வரப்பிரசாதமாக அமையும் எனக் கூறப்படுகிறது. மனித உரிமைகள் ஆணைத்தின் பிரகடனம், மாக்னா கார்ட்டா(Magna Carta) மற்றும் பைபிள் ஆகியவை தற்போது இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## உணவு டெலிவர் சேவையை வழங்க தயாராகும் கூகுள்



இணைய உலகில் அசைக்க முடியாத அரசனாகத் திகழும் கூகுள் நிறுவனம் மேலும் பல்வேறு சேவைகளை தனது பயனர்களுக்கு வழங்கிவருவது அறிந்ததே. இந் நிலையில் உடனடி உணவுகளை டெலிவரி செய்யும் சேவையையும் ஆரம்பிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் முதற்கட்டமாக மளிகை பொருட்களை குறிப்பிட்ட சில இடங்களுக்கு மட்டுமே டெலிவரி செய்ய தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் டெலிவரி சேவையினை வழங்கிவரும் மற்றுமொரு பிரபல நிறுவனமான அமேசான் ஆனது அண்மையில் தனது டெலிவரி கட்டணத்தை அதிகரித்துள்ள நிலையில் கூகுளின் இப்புதிய முயற்சி அந் நிறுவனத்திற்கு போட்டியாக இருக்கும் எனவும், கட்டணங்கள் குறைவாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரமானவனின் மனது

சஞ்சயன் செல்வமாணிக்கம்

## மந்திரித்துவிட்ட குரங்கு



19.04.2014 அன்று மாலை பலநூறு மனிதர்களின் மத்தியிலும், இதமான இசையின் மத்தியிலும், பல நண்பர்களின் அருகாமை-யிலும் மனம் தனிமையுணர்வினை தொட்டுணர்ந்து கொண்டிருந்தது.

தனிமையின் கனம் மனதை அழுத்த, அழுத்த என்னால் அங்கு உட்கார்ந்திரு-க்கமுடியவில்லை. இசை நிகழ்வில் மனம் ஒன்றவில்லை. என்னைக் கட்டாயப் படுத்தி உட்கார்த்திவைத்திருந்தேன். அப்படியும் அதிக நேரம் உட்கார்ந்தி ருக்க முடியவில்லை. தனிமையின் பாரம் தாங்கமுடியாததால் வீடுசெல்லப் புறப்பட்டேன்.

மண்டபத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு மனிதர் ஒரு குழந்தையைத் தூக்கி வைத்திருந்தார். அக் குழந்தை என்னப்பார்த்து கண்களால் புன்னகைத்தது. குழந்தையைப் பார்த்து புன்னகைத்து, கண்ணைச் சிமிட்டியபடியே அவர்களைக் கடந்து கொண்டேன். அவர்களைக் கடந்து சில அடிகள் நடந்திருப்பேன் ஹாய் என்று மழலை மொழி என்னை நோக்கி வீசப்பட்டதை உணர்ந்து திருப்பிப்பார்த்தேன். அக் குழந்தை தனது வலது கையில் ஆட்காட்டிவிரலை என்னை நோக்கி நீட்டியபடியே தெய்வீகமாய் புன்னகைத்தது.

என்னை மறந்து அந்தக்குழந்தையை நோக்கி மந்திரித்துவிட்டவன்போன்று நடந்தேன். அப்போதும் அக்குழந்தை என்னைநோக்கி கைவிரலை நீட்டிக்கொண்டே இருந்தது. பஞ்சுபோன்ற அக் குழந்தையின் கைவிரலைப் பற்றிக்கொண்டேன். விரலின் குளிர்ச்சியை உணர்ந்தேன்.

1999ம் ஆண்டு The Green Mile என்னும் திரைப்படம் வெளிவந்தது. அதில் Tom Hanks சிறைச்சாலை அதிகாரியாக நடித்திருப்பார். அவருக்கு உடலில் நோயிருக்கும். இன்னொருவருக்கும் அதீத நோய்கண்டிருக்கும் (அச்சிறைச்சாலையின் மேலதிகாரியின் மனைவிக்கும்). Tom Hanks இன் சிறைச்சாலை க்கு ஒரு கறுப்பு மனிதன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு அனுப்பப்படுவான். அவன் குற்றமற்ற ஒரு அப்பாவி, அதீத பெரிய உடலமைப்பை கொண்டிருப்பான். அவனை நாலைந்து பலசாலிகளாலும் சமாளிக்கமுடியத அளவுக்கு பெருத்த, பலமான உடல் அமைப்பு அவனுடையது. ஆனாலும் அவன் அமைதி யானவன். அவனிடம் ஒரு அதீதசக்தி இருக்கும். மனிதர்களின் கைகளை பற்றும்போது அவர்களைப்பற்றி அறிந்துகொள்ளும் அதீத சக்தியைக் கொண்டிருப்பான்.

காலம் Tom Hanks ஐயும் அம் மனிதனையும் (Michael Clarke Duncan) நெருங்கிய நண்பர்களாக்கி விடும். அம்மனிதன் Tom Hanksக்கு நோய்கண்டிருப்பதை தனது சக்தியினால் உணர்ந்துகொண்டு, Tom Hanks இன் கையைப் பற்றியிருக்கும் ஒரு சமயத்தில் அந்நோயை குணப்படுத்திவிடுகிறான். இதை தனது மேலதிகாரியிடம் கூறும் Tom Hanks, அவரது மனைவியையும் அவனால் குணப்படுத்த முடியும் என்று கூறி, அவனை சிறைச்சாலையை விட்டு அவர்களின் வீட்டுக்கு அழைத்துச்சென்று மனைவியை அவனுக்கு அறிமுகம் செய்யுமாறு கூற, பலத்த பாதுகாப்புடன் அவனை அழைத்துச் செல்லும் Tom Hankம், மேலதிகாரியும் அவனுக்கு அப்பெண்ணை அறிமுகப்படுத்த அவனும் அப்பெண்ணிண் நோயினை குணப்படுத்துகிறான்.

எத்தனையோ படங்கள் பார்த்திருந்தாலும் இந்தப்படத்தில் கறுப்பனாக, John Coffey பாத்திரத்தில் நடித்த Michael Clarke Duncan இன் நடிப்பும் அவரது காட்சிகள் படமாக்கப்பட்டிருந்த விதமும் இன்றும் மனதில் படிந்திருக்கின்றன.. என் மனதை, உணர்வுகளை அதிகமாக பாதித்தபடம் இது. படம் முடிந்ததும் பலர் கைதட்டினார்கள். என்னால் உடனடியாக திரையரங்கைவிட்டு எழும்பி வரமுடியவில்லை, சற்றுநேரம் ஆனது என்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள. படத்தின் முடிவு மனதை அந்தளவுக்கு ஆட்டிப் போட்டிருந்தது. அத்தனை அற்புதமான படம் அது.

மீண்டும் இப்போது அந்தக் குழந்தையின் கதைக்கு வருவோம்.

மந்திரித்துவிட்டவன் போன்று அக்குழந்தையின் கைகளை பற்றிக்கொண்டேன்.



குழந்தையின் கண்கள் என்னை ஊடுருவி உயிரைத் தொட்டது போலுணர்ந்தேன். குழந்தையின் தூய்மையான முகமும், தெய்வீகமான புன்னகையும், ஆட்காட்டிவிரலின் குளிர்ச்சியும் என்னைக் காற்றில் தூக்கிப் .போவது போல் உணர்ந்தேன்.

அதுவரை உணர்ந்து கொண்டிருந்த மனதின் பாரங்கள் காற்றில் படபடத்துப் பறக்கும் காகிதங்கள் போன்று என்னைவிட்டு பறந்துபோயின. சில நொடிகளேயான அந்த பரிசுத்தமான ஸ்பரிசம் என்னை உயிர்ப்பித்திருந்தது. மனதில் இருந்து தனிமை அகன்று, குதூகலம் மனமெங்கும் நிரம்பியிருந்தது.

சில மனிதர்களிடத்தில் அற்புதமானதொரு அதீத சக்தி இருக்கிறது. The Green Mile திரைப்படத்தில் John Coffey பாத்திரமும், இந்தக் குழந்தையும் அப்படியானவர்களே.

அக்குழந்தையை தூக்கி வைத்திருந்தவர் "இவன் இப்படித்தான், எல்லோருடனும் மிக இலகுவாகப் பழகுவான்" என்றார்.

நான் புன்னகைத்தேன்.

## மூடநம்பிக்கை கொள்ளல் தவறானதே!!

( தன்யா )




திருகோணமலை கண்ணியா பகுதியில் இடம் பெற்ற ஓர் சம்பவம்........

கிறிஸ்டீனா என்பவள் தனது குடும்பத்தினருடன் அவ்வீட்டிற்கு குடியேறி சில நாட்கள் தான் ஆகியிருந்தது.

ஒரு தனியார் நிறுவனத்தில் உதவி கணக்காளராகவும் தட்டச்சு உதவியாளருமாக கடமை புரிந்து வரும் அவள் மிகவும் அழகானவள். நெடு நெடுவென வளர்ந்த பார்த்தால் பார்த்துக் கொண்டே இருக்கக் கூடிய செந்தழிப்பான முக தோற்றம் கொண்டவள்.

அவளின் தாய், தந்தையர் இருவருமே வேலைக்குச் செல்பவர்கள். எனவே முற்றம் ஒவ்வொரு சனிக்கிழமையும் தான் கூட்டுப்படுவது வழக்கம். ஏனெனில் அவர்களது முற்றமோ மிகவும் பெரியது. அத்துடன் நிறைய மரங்களும் காணப்படுவதனாலும் இவ்வாறானதொரு ஏற்பாடு கிறிஸ்டீனாவினால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. (சோம்பேறி போலும்) இருப்பினும் ரோசாத் தோட்டமே அங்கு காணப்படுகிறது. அவற்றை பராமரிப்பதும் இவளே.

அன்று ஒரு சனிக்கிழமை. ரோசாத் தோட்டத்தை துப்புரவு செய்து கொண்டிருந்த அவள் செப்பு நிறத்திலான ஒரு தகட்டை கண்டெடுத்தால். கையால் எடுத்து அதனை தன் தாயிடம் சென்று காட்டினாள்.

அந்தோ பரிதாபம் அவ்வீட்டினுள் புயல் கிளம்ப ஆரம்பித்தது.

சில நாட்களில் அவளுக்கு மேல் காலில் காணம் ஒன்று ஏற்பட்டது. கண்ணில் அமைப்பில் காணப்பட்ட அக்காயம் ஒரு மாதமாகியும் எவ்வித மருந்திற்கும் சுகமாகுவதாக இல்லை. அவளுக்கு வலி இருப்பதில்லை. எனினும் காயம் குழி போன்று பெரிதாகிக் கொண்டே சென்றது.

மூட நம்பிக்கையில் மூழ்கிக் கிடந்த அவர்களின் உறவினர் ஒருவரின் ஆலோசனையை கேட்டு மத குருமார் ஒருவரிடம் சென்று முறையிட்டுள்ளனர். அவரும் வீட்டிற்கு வந்து ஆசீர்வதித்து விட்டு சென்றுள்ளார்.

அன்று ஞாயிற்றுக் கிழமை, இவள் சருகுகளை எரிப்பது வளவின் மூலையில் எனினும் எரித்த சாம்பல் நடு முற்றத்தில் பரவிக் கிடந்துள்ளது. மீண்டும் மதகுருவை அணுகி ஆலாசனை கேட்ட போது.....

உன் அழகு தான் உனக்கு பிரச்சினை ஆக்கியுள்ளது. யாரோ உனக்கு சூனியம் செய்துள்ளனர். ஆனால் பயப்பட வேண்டாம் இந்த நிமிடத்தில் இருந்து மூன்று நாட்களுக்கு யாருடனும் கதைக்க வேண்டாம். வீட்டை விட்டு வெளியில் வரவும் வேண்டாம். சூரிய ஒளி உன்மீது படுவதை தவிர்க்கவும். இருட்டு அறை ஒன்றினுள்ளேயே அடைந்து கிடக்க வேண்டும். மூன்று நேரமும் மாமிசம் சாப்பிட வேண்டும். உனக்கு என்ன சாப்பிட ஆசையாக உள்ளதோ அவற்றை அளவுக்கு அதிகமாக சாப்பிட வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

வழிபாட்டு இடத்தில் இருந்து வீட்டிற்கு சென்றவள் தான் மதகுருவானவர் கூறிய அனைத்தையும் செயல்படுத்தினாள். யாரையும் பார்க்கக் கூட மாட்டாள். என்ன வேண்டும் என்று எழுதி துண்டொன்றை கதவின் கீழால் தள்ளிவிடுவாள். அம்மா சாப்பாடை கொண்டு வந்து கதவருகில் வைத்து விட்டு கதவை தட்டிவிட்டு உடன் அங்கிருந்து அகன்று விடுவார்.

மூன்று நாட்கள் மூவருக்கும் வேலையும் இல்லை. தமது மகளை எண்ணி பெற்றோர் உணவையும் துறந்திருந்தனர்.

நாலாவது நாள் வழிபாட்டுத் தலத்திற்கு சென்று மதகுருவை சந்தித்தனர். வெயிலே படாமல், குளியலும் இல்லாமல் மூன்று நாட்கள் இருந்த அவள் முகம் வெளிறிப் போயிருந்தது. ஆசிர்வதித்து விட்டு உன்னுள் இருந்தது உன்னை விட்டு ஓடிப் போயிற்று. இனி உன்னை எதுவித பிரச்சினையும் நெருங்காது. இருப்பினும் சில அசாதாரண நிகழ்வுகள் வீட்டில் இடம்பெறலாம். அவற்றை பொருட்படுத்த வேண்டாம். நீங்கள் சட்டை செய்யாது விட்டு விடுங்கள் என்று கூறி அனுப்பிவைத்தார். மறுநாள் வேலைத் தளத்திற்கு தொலைபேசி அழைப்பு "இனி நீங்கள் வேலைக்கு வர வேண்டாம்" என்றது.

## காதலனுடன் சேர்ந்து கணவனை கொல்லும் முயற்சி....

***மீகமவில் நிகழவிருந்த கொலை முயற்சி (ஸ்ரீவிர 28.01.2016)***

லசன்தியின் கள்ளக் காதல் பற்றி அறிந்த லூஜின் அவளை இத்தாலியிலிருந்து உடன் வருமாறு பணித்தான். மீண்டும் இலங்கை திரும்பிய அவள் தன்னை லூஜின் கொடுமைப்படுத்துவதாக ரவியிடம் முறையிட்டுக் கொண்டே இருந்தாள்.

2015 டிசம்பர் மாதம் 17ம் திகதி ரவி இலங்கைக்கு வந்தான். வந்த அவன், ஆமியில் சேர்ந்து கடினம் என விட்டுவிட்டு ஓடி வந்து தற்போது டுபாயில் இருக்கும் ஷாந்தவிடம் லூஜினைக் கொலை செய்ய உதவுமாறும் அதற்காக தான் நிறைய பணம் தருவதாகவும் கூறினான். பணத்திற்கு ஆசைப்பட்ட ஷாந்த கடந்த 11 மாதங்களாக கமாண்டோவாக இருக்கும் சந்தன சமன்குமார ஏனபவரை அணகினான்.

மீகமவில் வசித்து வரும் லூஜின், லசன்தி ஆகியோரின் வீட்டையும், லூஜினின் நடவடிக்-கைகளையும் வேவு பார்க்குமாறு ஷாந்தவின் நண்பியான டனுஷ்க என்பவரை ஷாந்த ஏற்பாடு செய்திருந்தான்.

அதன் பிரகாரம் லூஜின் எப்போது வீட்டிற்கு வருவான். மீண்டும் எப்போது வெளியில் செல்லுவான். எத்தனை நாட்கள் அவன் வீட்டில் தங்கியிருப்பது. அவரது தற்போதைய திட்டம் என்ன என்பன குறித்து டனுஷ்க துப்பறிந்து ஷாந்தவிடம் பகிருவாள்.

அச்சமயத்தில் அவர்களுக்கு தெரிய வருகின்றது, லூஜின் தோட்டக் காணியை விற்பனை செய்ய விளைகின்றார் என்பது. எனவே இது தான் சரியான சந்தர்ப்பம் லூஜினை நெருங்குவதற்கு என டனுஷ்கவும், சமனும் எண்ணிக் கொள்கின்றனர்.

பின்னர் லூஜினின் தொலைபேசிக்கு டிசம்பர் மாதம் 28ம் திகதி அழைப்பினை ஏற்படுத்துகின்றனர் டனுஷ்கவும், சமனும். தோட்டம் குறித்த விடயங்களை இரு தரப்பும் கதைத்து விடயங்களை பரிமாறிக் கொண்டனர்.

பின்னர் ஒரு நாள் இவர்கள் இருவரும் தோட்டதிற்கு சென்று, அங்கு நின்றிருந்த வேலைக்காரனை சந்தித்து நாங்கள் தோட்டத்தை வாங்குவதற்கு விரும்பகின்றோம். உன் முதலாளி எப்ப வருவார். எத்தனை மணிக்கு அவரை சந்திக்கலாம்? எவ்வளவு நாட்கள் இங்க நிற்கிறவர்? எதில் வந்து போறவர்? இப்படியான பல கேள்விகளை கேட்டுக் கொண்டனர். சில கேள்விகளின் பின்னர் சுதாகரித்துக் கொண்ட வேலைக்காரன் பதிலுரைக்க மறுத்தான். பொய்யுரைத்தான்.

இவனிடம் இருந்து தமக்குத் தேவையான எதையும் பெற்றுக் கொள்ள முடியாது என அறிந் அவர்களிருவரும் அங்கிருந்து அகன்றனர்.


பின் தோட்டத்திற்கு வருகை தந்த தன் முதலாளி லூஜினிடம், இருவர் வந்ததாகவும், அவர்களின் கண் பார்வை சரியில்லை எனவும். அவர்கள் இப்படியான பல கேள்விகளை தன்னிடம் வினவினர் எனவும் தெரிவித்தான். அத்துடன் தனக்கு அச்சம்பவம் சரியாக படவில்லை எனவும், கவனமாக இருக்கச் சொல்லியும், இங்கு நிற்காமல் உடன் கிளம்பி வீட்டிற்குச் சென்று விடுங்கள் அனைத்தையும் நான் பார்த்துக் கொள்கின்றேன் எனவும் கூறி வைத்தான் வேலைக் காரன். அவனது பேச்சை மீறி தோட்டத்தில் தங்குவது சரியில்லை என உணர்ந்த லூஜின் வீட்டிற்கு சென்று வர ஆரம்பித்தார். தோட்டத்தில் தங்குவதை நிறுத்தியும் கொண்டார். யார் தன்னைப் பற்றி விசாரித்தது என்பது குறித்து ஒரே நச்சரிப்பாகவே இருந்தது அவருக்கு. மறுநாள் தொலைபேசி ஒலித்தது........

தொடரும்...

*மொழியாக்கம் : தன்யா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசையா இல்லாத யாழ்ப்பாணம்"



**வாழும்போதே மாமனிதர் பட்டம் பெற்ற திருநாவுக்கரசு ஐயா....**
**சத்தியாகிரக காலகட்டத்தில், இலங்கை ராணுவம் சத்தியாக்கிரகம் இருந்தவர்களை கலைப்பதற்குச் சென்ற போது குறுக்கே பாய்ந்து தரையில் படுத்துக் கொண்டவரை துப்பாக்கியால் சுட முயன்றது ராணுவம். தன்னைச் சுட்டுவிட்டு தமிழரசு தலைவர்களை நோக்கிச் செல்லுமாறு முழக்கமிட்டார். அந்த காட்சியைப் பதிவு செய்த புகைப்படம் ஈழ அறவளிப் போராட்டக் கால கட்டத்தின் புகழ்மிக்க புகைப்படங்களில் ஒன்று.**

– பேராசிரியர் மௌனகுரு –

ஒரு வாரத்தின் முன் தொலை பேசியில் அந்தக் கிழட்டுச் சிங்கம் தள தளத்த குரலில் என்னுடன் பேசியது.
குரலின் கம்பீரம் குறையவில்லை
"சேர் என் நிலைமை சரியில்லை.உங்களைக் காணவும் கன கதைகள் சொல்லவும் ஆசையாக இருக்கிறது"

"அரசையா நான் தற்சமயம் நீண்ட பயணம் செய்யமுடியாத நிலை உடனேவரமுடியாத நிலையிலுள்ளேன். முடியுமான நிலை வந்தவுடன் வருவேன்".

"இல்லை சேர் நான் அதுவரை இருக்க மாட்டேன்.நாம் சந்திப்போமோ தெரியாது"

"இல்லை அரசையா நீங்கள் இன்னும் பல ஆண்டுகாலம் இருப்பீர்கள் நானும் இருப்பேன். அவசியம் சந்திப்போம்"

"சில முக்கிய விடயங்கள் உங்களிடம் சொல்ல வேண்டும் சேர்"
அவர் சொல்ல ஆரம்பித்துவிட்டார்

நாடகஉலகு பற்றியே அவர் பேசினார்
கம்பீரம் குறையாவிட்டாலும் தள தளத்த குரல் அவர் மறு பக்கத்தில் அழுகிறார் என்பது தெரிந்தது.
என் மனமும் கண்ணீர் விட்டது
"அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்"
அனைத்தையும் நான் பதிவு செய்திருக்க வேண்டும்
அந்தக் குணம் என்னிடத்தில் இல்லை
இன்றா நேற்றா, ஏறத்தாள 40 வருட நெருக்கமான உறவு.

*1975*களில் அவரும் குழந்தை சண்முகலிங்கமும் என்னை நாடக அரங்கக் கல்லூரியில் அங்கத்தவனாக்க திருநெல்வேலியில் நான் குடியிருந்த வீடு தேடி ஒரு காலைப் பொழுது வந்தமை பசுமையாக ஞாபகம் இருக்கிறது

வெள்ளை வேட்டி,,
நீண்ட கதர் ஜிப்பா
காதில் ஜிவ் என நிற்கும் மயிர்கள்
சந்தனப் பொட்டு.
கம்பீரமான மீசை
அகன்ற நெற்றி,
கம்பீரமான நடை,
சிம்மக் குரல்,
ஆஜானுபாகுவான தோற்றம்
அவர் இப்படித்தான் என் மனதில் பதிந்தார்
குழந்தை சண்முகலிங்கத்தை அவர் "மாஸ்டர்" என அழைப்பார்
என்னை அவர் "சேர்" என அழைப்பார்
என்னைவிடப் 15 வயது மூத்தவர்
நாம் அவரை "அரசைய்யா" என அழைப்போம்
அவர் கதை சொல்வது ஒரு தனி அழகு
விறு விறு என்று போனான் என்ற சொற்தொடரும்
அவர் இந்திய இராணுவத்தில் இருந்து 2ஆம் உலக யுத்தத்தில் பங்கு கொண்ட கதைகளும் அவசியம் அவர் உரையாடலில் வரும்
பிரான்ஸிஸ் ஜெனமும் குழந்தை சண்முகலிங்கமும் அதனைக் கிண்டல் அடிப்பார்கள்
நான் ஒன்றும் சொல்ல மாட்டேன்.
அவர் மீது எனக்கு மஹா மரியாதை
மூவரின் உரையாடல்களும் வலு சுவராஸ்யமாக இருக்கும்
நான் ரசிப்பேன்
யாழ்ப்பாணத்தில் நான் வாழ்ந்த காலம் *1975-1992* பதினேழு வருடங்கள் அரசையா நெருக்கமான குடும்ப நண்பரானார்
.


அடிக்கடி எனது வீடு வருபவர்களுள் ஒருவர்.
அவர் என்னோடு உரையாடிவயற்றை மீட்டுப்பார்க்கிறேன்
*1*

யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர், சென்ட். ஜோன்ஸ் கல்லூரியில் பயின்றவர் இளம் வயதில் இந்திய இராணுவத்தில் இணைந்து 2ஆம் உலக மகாயுத்தத்தில் பங்களிப்புச் செய்தவர். தமிழ் நாட்டில் வாழ்ந்த பண்டைய காலங்களில் திராவிடக் கழகக் கருத்துக்களால் கவரப்பட்டு சீர்திருத்தவாதியாயும் தமிழ் பற்றாளராயும் மாறியவர். பெரியார், அண்ணா ஆகியோரின் தீவிர ஆதரவாளர். சமூக எற்றத் தாழ்வுகளைக் கண்டு மனம் கொத்தித்தவர். பின்னர் யாழ்ப்பாணம் வந்து தமது பகுத்தறிவுவாத சிந்தனைகளை மக்கள் மத்தியில் விதைக்க நாடகத்தை ஒரு கருவியாகக் கொண்டவர்.


*1950* களின் பிற்பகுதியில் தமிழரசுக்கட்சியின் அர்ப்பணிப்பு மிக்க தொண்டர்களுள் ஒருவராகி அன்று சட்ட மறுப்புச் சத்தியாக்கிரகம் முதலிய போராட்டங்களில் பங்கு கொண்ட அன்றைய போராளி.

அக்காலங்களில் தமிழுணர்வு மிக்க வீரத் தாய், வீரமைந்தன் போன்ற நாடகங்களயும், திப்பு சுல்தான் போன்ற அந்நியருக்கு எதிரான உணர்வூட்டும் நாடகங்களையும் போட்டவர். கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகங்களில் நடித்தவர், பின்னால் மேடை நாடக நடிகராக, நாடக நெறியாளராக, நாடக எழுத்தாளராக, புகைப்படப் பிடிப்பாளராக, இசையாளராக, திரைப்பட நடிகராக, வில்லுப்பாட்டுக் கலைஞராக ஒப்பனையா- ளராகப் பரிணமித்தவர்

நாடக உலகில் *1950*கள் தொடக்கம், தனியாகவும், கலையரசு சொர்ணலிங்கம், சுந்தரலிங்கம் தாசீசியஸ், மௌனகுரு, குழந்தை சண்முகலிங்கம் ஆகியவர்களின் நெறியாள்கையில் நடித்தும் அவர்களின் நாடகங்களுக்கு ஒப்பனையாளராகவுமாக சேர்ந்து இயங்கியவர், அவர் செயற்பாடுகளுக்காக மாமனிதர் பட்டம், கலாபூஸண பட்டம் போன்ற பட்டங்கள் பெற்றவர்.
பல்திறன் கொண்ட ஆற்றல் மிக்கதோர் கலைஞர். மறைந்த நாடகக் கலைஞர் நா..சுந்தரலிங்கத்தின் தாய் மாமன். சுந்தரலிங்கத்தின் நாடக ஆளுமை மாமன் வழி முதுசம்.
மாமனின் நாடகங்களைப் பார்த்தும், அவர் நாடகங்களுக்கு உடை அமைப்பில் உதவி செய்தும் தான் வளர்ந்த கதைகளை என்னிடம் சுந்தா கூறியுள்ளார்
சுந்தாவின் நாடகமான அபசுரத்தை



சுந்தா அரங்கக் கல்லூரிக்காப் பழக்கிக் கொண்டிருந்தார்.
சுந்தாவும் தாஸிசியஸும் நைஜீரியா பயணமாகினர் அபசுரம் நெறியாள்கை செய்யும் பொறுப்பை குழந்த சண்முகலிங்கம் என்னிடம் ஒப்படைத்தார்
அரசையாவுடனான நெருக்கம் கூடியது
அபசுரத்தில் அவர் சிவாயர் பாத்திரத்தை அற்புதமாகக் கொணர்ந்தார்.
சிவாயர் ஒரு போலிச் சாமியார் பாத்திரம்.
ஆரம்பத்தில் இதற்கு நடித்தவர் சுந்தரலிங்கம் வயிறு குலுங்கச் சிரிக்கவைத்த, ஆழமாகச் சிந்திக்க வைத்த அபத்த பாணியிலான நாடகம் அபசுரம்.
பின் எனது எல்லா நாடகங்களுக்கும் அரசையா ஒப்பனை கலைஞரானார்
முக்கியமாக யாழ்ப்பாணத்தில் நான் நெறியாள்கை செய்த எனது நாடகங்களானடி அபசுரம், சங்காரம்
அதி மானுடன், குருஸேத்ர உபதேசம், தப்பி வந்த தாடி ஆடு, வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள், நம்மைபிடித்த பிசாசுகள், சக்தி பிறக்குது, பரபாஸ், ஒரு உண்மை மனிதனின் கதை, மழை, புதியதொரு வீடு, எல்லாவற்றிற்கும் உடை, ஒப்பனை அரசையாதான் - இசை கண்ணன்தான்.
இருவரும் இசை- ஒப்பனை இரட்டயர்கள்
எனது நாடக ஒப்பனை பற்றி நானும் அரசையாவும் நிறையக் கலந்துரை- யாடியிருப்போம்
விடிய விடிய இருந்து நுணுக்கமாக உடைகளைத் தயாரிப்பார்
.புதிய புதிய ஒப்பனைகளைக் கண்டு பிடிப்பார்
கண்டுபிடிப்புகளை ஆர்வத்தோடு வெளிப்படுத்துவார். ஒரு விஞ்ஞானிக்குரிய கண்டுபிடிப்பு மனோபாவம் அவரிடமிருந்தது.
ஒப்பனை கலைஞராகப் பரிணமித்தாலும் மேடை நடிகனான நான் ஒப்பனையாளனாக மாறிவிட்டேனே என்ற ஆதங்கம் அவரிடமிருந்தது.
அவரிடம் நடிப்பும் ஒப்பனையும் பயின்றோர் அநேகம். ஒரு தலைமுறையை உருவாக்கியுள்ளார்.
கடைசி காலங்களில் ஞாபகங்களை இழந்து விட்டிருந்தார். முதுமையடையும் பலருக்கு இந்நிலை ஏற்படும். கடைசியாக நான் அவரைக் கண்டது சென்ற வருடம் காண்டவ தகனம் நாடகத்தை கைலாசபதி அரங்கில் மேடையிட்டபோது கலை அரங்க வாசலில் அரசையாவும் குழந்தை சண்முகலிங்கமும், பேர்மினஸும், கண்ணனும் எம்மையும் எம் மாணவர்களையும் மகிழ்ச்சியோடு வரவேற்றது நேற்றுப் போல இருக்கிறது.
எனது யாழ்ப்பாண வாழ்க்கையை அர்த்தமும் மகிழ்ச்சியுமுடையதாக ஆக்கியவர்களுள் ஒருவர் அரசையா.
யாழ்ப்பாணம் செல்கையில் அகமும் முகமுமொருங்கே மலர வரவேற்கும் யாழ்ப்பாண உறவுகளுள் ஒன்றை நான் இழந்தேன்.
இந்த இழப்பை நேற்று சிதம்பரனாதனும் குழந்தை சண்முகலிங்கமும் எனக்கு போன் பண்ணிக் கூறினார்கள்.
மனது ஒரு தடவை அதிர்ந்து நிமிர்ந்தது.
எமது அன்புக்குரிய அரசையாவே சென்றுவருக.
கனத்த இதயத்தோடு பிரியாவிடை கூறுகிறேன்.
நண்பர்கள் ஒவ்வொருவராகச் சென்று கொண்டிருக்கிறார்கள்.
"வாருங்கள்" என அழைத்த அரசைய்யா போய் விட்டார்.
வருவேன் என உரைத்த நான் இருக்கிறேன்.
நான் யாழ்ப்பாணம் செல்கையில் அந்த யாழ்ப்பாணம் அரசையா இல்லாத யாழ்ப்பாணமாக இருக்கும்.
காலம் தன் கடமையச் செய்தபடி ஓடிக்கொண்டிருக்கிறது.



**மேலதிகத் தகவல்களும் படங்களும் சோமி தரனின் முகப்புத்தகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புனித மாதங்கள்

## (அல் குர் ஆனின் விளக்கம்)



"(போர் செய்யத் தடுக்கப்பட்ட) புனித மாதத்திற்குப் புனித மாதமே நிகராகும். புனிதப்படுத்தப்பட்ட (அவற்றின் புனிதம் மீறப்பட்டால் அவற்று)க்கும் பழிவாங்குதல் உண்டு! ஆகவே, எவரேனும் உங்கள் மீது வரம்பு மீறினால் அவர் உங்கள் மீது வரம்பு மீறியது போன்று நீங்களும் அவர் மீது வரம்பு மீறுங்கள்! மேலும், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தி யாளர்களுடன் இருக்கின்றான் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்." (2:194)

புனித மாதங்களில் போர் செய்யக் கூடாது என இஸ்லாம் கூறுகின்றது. அந்தப் புனித மாதங்களில் எதிரிகள் போரை ஆரம்பித்தால் நாம் எதிர் தாக்குதல் செய்யலாம். அந்த சந்தர்ப்பத்தில் கூட வரம்பு மீறக் கூடாது என அற்புதமான போர் விதிகளை இந்த வசனம் கூறுகின்றது.

"அல்லாஹ்விடம் நிச்சயமாக மாதங்களின் எண்ணிக்கையானது, வானங்கள் மற்றும் பூமியைப் படைத்த நாள் முதல் அல்லாஹ்வின் பதிவேட்டில் பன்னிரெண்டு மாதங்களாகும். அவற்றில் நான்கு புனிதமானவையாகும். இதுதான் நேரான மார்க்கம். இவற்றில் (போர் செய்து) உங்களுக்கு நீங்களே அநியாயம் செய்து கொள்ளாதீர்கள். இணைவைப்போர் உங்கள் அனைவருடனும் போர் புரிவது போன்று நீங்களும் அவர்கள் அனைவருடனும் போர் புரியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பயபக்தியாளர்களுடன் இருக்கின்றான் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்." (9:36)

புனித மாதங்கள் நான்கு என இந்த வசனம் கூறுகின்றது. இந்தக் குறித்த மாதங்கள் போர் செய்யத் தடை செய்யப்பட்ட மாதங்களாகும்.

தொடரும் .. ..

– இஸ்மையில் ஸலஃபி –

# ஜெபம்



**டார்வின் "பரிணாம வளர்ச்சி" கோட்பாடு ஏற்றுக்கொள்ளும்படியாக இருக்கிறதே! அதை ஏற்றுக்கொள்ளலாமா?**

3. அனேகர் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதனாலும். விவிலிய கருத்தை புறக்கணிக்கலாம்.

ஆனாலும் டார்வினின் பரிணாம வளர்ச்சி கொள்கையின் ஆரம்பம் ஒரு செல் எப்படி தோன்றியிருக்க முடியும் என்பதற்கான விளக்கம் சரியாக இல்லை. மேலும் மனிதன் என்பவன் விலங்குகளின் மேல் நிலை என்பதை ஒத்துக்கொள்ள இயலாது. மனிதருக்கு மட்டுமே உள்ள ஆன்மாவும், ஆறாவது அறிவான சிந்தித்து செயல்படும் ஆற்றலும் நல்லது கெட்டது அறியும் திறனும் எந்த விலங்கிலும் காண இயலாது, இது பரிணாம வளர்ச்சி என்றும் கூற முடியாது. திருவிவிலியத்தில் கடவுள் மனிதரைப் படைத்தார் அதுவும் தமது சாயலாகப் படைத்தார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மனிதர் படைப்பின் சிகரமாக இருக்கின்றான்.

விவிலியத்தில் கூறப்படுவது போல் கடவுள் மனிதனைப் படைத்தாரா என்று யாருக்கும் தெரியாது. ஆனால் அதில் சொல்லப்பட்டிருக்கும் செய்தி உண்மையானது. கடவுள் தான் உலகையும் அதன் உயிரினங்களையும் மனிதரையும் படைத்தார். மனிதரை தம் சாயலாகப் (அன்புசெய்யும் ஆற்றல் படைத்த ஆன்மாவையும்) படைத்தார். மனிதன் கடவுளின் அன்பினின்று பிரிந்து பாவம் செய்தான். பெற்ற அருள் வாழ்வை இழந்தான். எனவே பாவத்திலிருந்து மனிதரை மீட்க, மீட்பின் திட்டத்தையும் கடவுள் கொடுத்தார் என்பதே நமது விசுவாசம்.

ஆக இறைவனின் படைப்பு, மனிதனின் வீழ்ச்சி, மனித மீட்பு இம்மறை உண்மைகளை மறுக்காத வரையில் பரிணாம வளர்ச்சி கோட்பாட்டை நாம் ஏற்றுக்கொள்வதில் தவறில்லை.




www.bible.me

# குறுக்கெழுத்து புதிர் 07

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 23 த | | 22 | 13 | | ■ | 14 |
| | 15 ர | | ■ | த் | | ■ | ■ | |
| 2 | | | | | ■ | 16 | | ம் |
| | 3 | சா | 17 | | 4 | | | |
| | | ■ | | ங் | | 5 | 18 | |
| பு | 6 | 19 | ■ | 7 | | டு | | |
| ■ | | | 8 | ள் | | | ■ | ■ |
| 9 | ம் | 20 | | | 10 | | 21 | |
| | 11 | | | கு | | 12 | | ■ |

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

முடிவுத் திகதி : 26.02.2016

### இடமிருந்து வலமாக

1. ராணி வசிக்கும் இடம்
2. ராசிகளுள் ஒன்று - குழம்பியுள்ளது.
3. கிராமங்களில் கோவில்களில் பூசை செய்பவர்
4. கழுகு போலவே இருக்கும் பறவை - திரும்பியுள்ளது
5. காலால் எட்டி அடித்தலைக் குறிப்பது
6. கானகத்திற்கு ஒத்த சொல்
7. பந்திகளை அதிகமாகக் கொண்ட இது ..............
8. சிறுத்தையில் சந்தானத்தின் கதாபாத்திரம்
9. கோவிலில் பூசைப் பொருட்களை இதில் வைத்து கொடுப்பர்.
10. முருகன் கையிலிருப்பது போற்றி போற்றி எனும் தேவாரத்தில் வரும் சொல்
11. நாய் - குரைக்கும் : குதிரை - ..............................
12. இரு தரப்பிற்கும் இடையில் சண்டை இட்டுக் கொள்வது
16. முதல் தோன்றி மனிதர்களில் ஒருவர்.
21. திமிங்கலத்தின் ஆங்கில பதம்

### மேலிருந்து கீழாக

1. நெல்லிலிருந்து கிடைப்பது
2. கண்ணகி உடைத்த ஆபரணம்.
3. ஞாயிறுகளில் குழந்தைகள் இங்கும் செல்வர்
4. காசினை வேறு மொழியில் இவ்வாறும் அழைப்பர் - குழம்பியுள்ளது.
6. இராமாயனத்தில் சீதாதேவி இங்கு அனுப்பி வைக்கப்பட்டார். - குழம்பியுள்ளது.
13. துப்பாக்கியில் காணப்படுவது
14. அநேகர் விரும்புவது இவ் வாழ்க்கையை
15. எறிந்ததும் இலக்கை அடைந்து மீண்டும் திரும்பும் ஓர் ஆயுதம் - குழம்பியுள்ளது
16. பகலில் கண் தெரியாத பறவை
17. தந்திரம் மிக்கது - குழம்பியுள்ளது
18. பேச்சாளர்கள் இதை நிகழ்த்துவர்
19. சிலரது வாயை மூடுவதற்கும் இது போடவேண்டும்.
20. கண்ணை மூடிப் பால் குடிப்பவர்.
21. ஆலமரத்திற்கு இதனை விட விழுதுகளே பலம்
22. நூலகத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருப்பவை
23. முனிவர்கள் மேற்கொள்வது.

### 06 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | ண் | டீ | 20 ப | ம் | 2 க | ப | ட | ம் |
| 3 த் | தை | பே | வி | 4 உ | டு | ம் | பு | ■ |
| த | ■ | 5 மு | த | லை | 24 பு | ■ | ■ | 18 கு |
| 6 வ | 21 ள் | ளி | 7 தொ | டை | ப் | ப | ம் | 19 கை |
| ரா | ளி | 8 பி | ர | 17 தி | வா | 23 தி | 16 வ | லை |
| 22 ய | 9 ப | டி | ■ | வி | ர் | ங் | த | நா |
| 10 ன் | கூ | யா | ■ | நெ | 11 டி | க | ம் | த |
| ன | ■ | ணை | 12 ச | கு | ணி | ள் | ன | ர் |
| ல் | 13 னி | தா | ரு | 14 ம | ண் | 15 ல் | யி | உ |

**பரிசு பெறுபவர்கள்**

எம்.பி.அகிலன், 30 கல்லூரி வீதி
ஸ்ரீ.மதிவதனி, 32 மத்தியவீதி, உவர்மலை

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

# இவ்வார இராசி பலன்



**மேஷம்** : வளர்ச்சிப் பாதைக்கான புதிய சூழல் உருவாகும். பணிகளை ஆர்வமுடன் செயல்படுத்துவீர்கள். பணவரவு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.



**ரிஷபம்** : ஒதுக்கி வைத்த பணிகளை நிறைவேற்றுவீர்கள். தாயின் அன்பு ஆசி கிடைக்கும். புதிய முயற்சியால், தொழிலில் விற்பனை அதிகரிக்கும். சேமிப்பு பெருகும்.



**மிதுனம்** : உழைப்பிற்கான பலன் கிட்டும். நிம்மதி நிறைந்த வாழ்வு உருவாகும். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் மங்கள நிழ்வு ஏற்படும்.



**கடகம்** :நற்பண்பு நிறைந்தவர்களின் உதவி கிடைக்கும். வளர்ச்சியை நோக்கி நடை போடுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க மாற்று உபாயம் பின்பற்ற வேண்டும்.



**சிம்மம்**: முக்கிய பணிகளை, இந்த வாரம் ஒத்தி வைத்தல் நல்லது. வியாபாரத்தில் அளவான லாபம் இருக்கும். பணியாளர்கள் பணியில் கவனமாக செயல்படவும்.



**கன்னி** : பலநாள் திட்டமிட்ட பணிகளை முழு முயற்சியுடன் நிறைவேற்றுவீர்கள். துணையால் பணவரவுக்கு இடமுண்டு. தொழில், வியாபாரம் வளர்ச்சி அடையலாம்.



**துலாம்** : செயல்கள் சிறப்பாக அமைந்து புகழ் தரும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். வியாபாரத்தில் செழிப்படைவீர்கள். பணியாளர்களுக்கு சலுகைகள் கிடைக்கும்.



**விருச்சிகம்** :தகுதி, திறமையை முழுமையாக வெளிப்படுத்தி பணி செய்வீர்கள். சொத்து பராமரிப்பில் அதிக கவனம் வேண்டும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி கூடும்.



**தனுசு** : எண்ணங்களில், புதுமையான கருத்து உருவாகும். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்பும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி சிறப்பாக நிறைவேறும்.



**மகரம்** :சிரமமான சூழ்நிலையை மதி நுட்பத்துடன் சரி செய்ய வேண்டும். வியாபாரத்தில் புதியவர்களின் வருகை போட்டியை உருவாக்கும். சட்டதிட்டங்களை பின்பற்ற வேண்டும்.



**கும்பம்** :பணிகள் தங்கு தடையின்றி நிறைவேறும். வாழ்வில் முன்னேற உதவியவர்களுக்கு பதில் உதவி செய்வீர்கள். ஆடம்பர செலவைத் தவிர்க்கவும். சுபசெய்தி வரும்.



**மீனம்** : புபழகுபவர்களின் மனமறிந்து பேசி நற்பெயர் பெறுவீர்கள். பயணங்களால் லாபம் உண்டு. எதிர்ப்புகள் விலகி வாழ்வில் முன்னேற்றம் பெற, புதிய வாய்ப்பு வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 17

கீழேயுள்ள அட்டவணையை அவதானித்து 14ஆம், 15ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| பேனா - 1, கொப்பி - 1 | ரூபாய் 16.00 | பேனா - 1, கொப்பி - 2 | ரூபாய் 21.00 |

01. கொப்பியொன்றின் விலை யாது?
    (1) ரூபாய் 11.00 (2) ரூபாய் 5.00 (3) ரூபாய் 6.00

02. பேனா ஒன்றின் விலை யாது?
    (1) ரூபாய் 11.00 (2) ரூபாய் 10.00 (3) ரூபாய் 6.00

03. தாள்களை இணைக்க பயன்படுத்தப்படும் கருவி எது?
    1. துளை கருவி 2. பிணை கருவி 3. துறப்பணம்

04. துருப்பிடித்த தகரம் காலில் வெட்டுவதனால் ஏற்படக்கூடிய அபாயகரமான நோய் எது?
    1. குக்கல் 2. ஏற்பு வலி 3. மாரடைப்பு

05. உயரமான கட்டடம், உயரமான இடங்களில் வசிப்போர் மின்னல் தாக்குவதை தடுக்க பொருத்த வேண்டிய உபகரணம் எது?
    1. மின்னற்கடத்தி 2. மின்னல் வாங்கி 3. இடிவாங்கி

06. மின்னல் ஏற்படும் நேரங்களில் செய்யக் கூடாதது எது?
    1. உணவு சமைத்தல் 2. சமைத்த உணவை உண்ணுதல்
    3. செல்லிடத் தொலைபேசியில் பேசுதல்

07. 1,2,3,4,5,6 எனும் இலக்கங்களைக் கொண்ட அட்டைகள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இதில் 53 ஆவதாகக் காணப்படும் இலக்கம் எது?
    1. 5 2. 3 3. 6

08. ஒரு மோட்டார் கார் ஒரு லீற்றர் பெற்றோலில் 9km தூரம் செல்லும். ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூ 180 எனின், ரூ 6300 க்கு பெற்றோல் நிரப்பப்பட்ட மோட்டார் கார் செல்லக்கூடிய தூரம் யாது?
    1. 30 2. 35 3. 37

09. வெற்றிடத்தை நிரப்புக.

2 7 12
7 12 17
12 17 ........ 1. 20 2. 22 3. 25

10. சுமதி 17 பெட்டிகளை வீட்டிலிருந்து முற்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டியிருந்தது. அவளால் ஒரு தடவையில் 3 பெட்டிகளை மாத்திரமே தூக்க முடியும் எனின், எல்லா பெட்டிகளையும் எடுத்து வருவதற்கு அவள் குறைந்த பட்சம் எத்தனை தடவை வீட்டினுள் செல்ல வேண்டும்.?
    1. 3 2. 6 3. 12

11. 2012 ம் ஆண்டில் ஜனவரி 01 தொடக்கம் செப்டம்பர் 16 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?
    1. 260 2. 259 3.258

12. கடிகார முகத்தில் சூர்ங்கோணத்தைக் காட்டும் நேரம்
    1. 9.00 2. 2.00 3. 5.00

13. ஒரு மைதானத்தில் 8 துவிச்சக்கர வண்டிகளும், 5 கார்களும், 9 முச்சக்கர வண்டிகளும் நிற்கின்றன. எனின், அங்குள்ள வாகனங்களின் கால்களின் மொத்த எண்ணிக்கை யாது?
    1. 63 2. 58 3. 66

14. செல்வம் என்பவர் விளையாட்டுத் திடலுக்குச் சென்று 3 மணித்தியாலம் 15 நிமிடங்களைச் செலவிட்ட பின் அங்கிருந்து மு.ப. 9.15 ற்குப் புறப்பட்டான். எனின், விளையாட்டுத் திடலுக்கு வந்த நேரம் யாது?
    1. மு.ப 6.15 2. மு.ப 6.00 3. மு.ப 5.00

15. ஹனீபா மூன்றே மூன்று ................................ பழங்களைக் கொடுக்க மூன்று மைல் தூரம் நடந்து சென்றார்.
    (பேரீச்சம் / மாம் / பலாப்)

16. பாடசாலையின் பெயர் என்ன? எனும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக

........................................................................

**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**



# சிறுவர் முரசு






## கடவுள் எங்கே?

ராஜேஷ் முடிவெட்டிக் கொள்ள வழக்கமாகச் செல்லும் கடைக்குச் சென்றான். முடிதிருத்துபவர் அவனுக்கு நெருக்கமான நண்பர். இருவரும் பல விடயங்கள் பற்றி மகிழ்ச்சியாக உரையாடுவர்.

அன்றும் அப்படியே பலவிடயங்கள் பற்றி பேசினர். இடையில் கடவுளைப் பற்றிப் பேச்சு வந்தது. முடிதிருத்துபவர், எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. கடவுள் இருக்கிறார் என்று நான் நம்ப மாட்டேன்! என்றார்.

ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? என்று கேட்டான் ராஜேஷ்.

காரணம் மிகச் சுலபமானது. தெருவில் போய்ப்பாருங்கள். கடவுள் இருந்தால் நோயால் வாடுபவர்கள் இருப்பார்களா? கடவுள் இருந்தால் கைவிடப்பட்ட குழந்தைகள் தெருவில் அலையுமா? கடவுள் இருந்தால் துன்பமும், வலியும் இராது. இதையெல்லாம் அனுமதிக்கும் கடவுள் நிச்சயம் இருப்பார் என்று நான் நம்பவில்லை, என்றார் முடிதிருத்துபவர்.

ராஜேஷ் அதற்கு மறுப்பு சொல்லவில்லை. வீணாக விவாதத்தை வளர்க்க வேண்டாம் என்று மவுனமானார்.

முடிதிருத்தும் வேலைமுடிந்து, ராஜேஷ் வெளியே போனார்.

அவர் போன சற்று நேரத்தில், வீதியில் நீண்ட தாடியும் அடர்ந்த முடியுமாய், ஒரு ஆள் நிற்பதை கடைக்காரர் பார்த்தார்.

அந்த ஆளைப் பார்த்தால், முடிதிருத்தும் கடையை மாதக் கணக்கில் எட்டிப் பார்க்காதவர் போலத் தோன்றியது. அவ்வளவு அடர்ந்தும், சடைபிடித்த முடியும் தாடியும் இருந்தன.

அப்போது முன்னால் வந்து போன ராஜேஷ் மீண்டும் கடைக்கு வந்தார்.

என்ன? என்று கேட்டார் முடிதிருத்துபவர்.

ஒரு விடயம்! முடிதிருத்துபவர் யாருமே இல்லை என்று சொல்லலாம், என்று வந்தேன்.

என்ன உளறுகிறீர்? இதோ! நான் இருக்கிறேன். நானும் ஒரு முடிதிருத்துபவன் தானே? அப்படி இருக்க முடிதிருத்துபவரே இல்லை என்று எப்படி நீங்கள் சொல்லலாம்? என்று எரிச்சலாக கேட்டார் முடிதிருத்துபவர்.

இல்லை! முடிதிருத்துபவர் இருப்பது உண்மை என்றால் அதோ தெருவில் நிற்கிற அந்த ஆசாமி இப்படி அலங்கோலமான தலைமுடி, சிக்குப்பிடித்த தாடியுடன் இருப்பானேன்? என்று கேட்டார் ராஜேஷ்.

ஓ! அதுவா? விடயம் என்னவென்றால், அந்த ஆசாமி என்னிடம் வருவதில்லை! என்றார் முடிதிருத்துபவர்.

சரியாகச் சொன்னீர்கள். அதுதான் விடயம். கடவுளும் இருக்கவே செய்கிறார். ஆனால், என்ன நடக்கிறது என்றால், மக்கள் அவரை அணுகுவதில்லை. அவரைத் தேடிப் போவதில்லை. அதனால்தான் எங்கும் நிறைய துன்பமும், வேதனையும் உலகில் நிறைந்துள்ளன! என்றார் ராஜேஷ்.

உண்மையை உணர்ந்து தலையை ஆட்டினார் முடி திருத்துபவர்.




**உண்மையை உணர்ந்து கொள்தல் வேண்டும்**

### சிந்திக்க ......

**படித்தவனிடம் பக்குவம் பேசாதே**
**பசித்தவனிடம் தத்துவம் பேசாதே!!!!**

**மலைமுரசு**



### பாராட்டு பெறுவோர்

**கு.கபிலேஷ், 572ஏ, ஏகாம்பரம் வீதி, திருகோணமலை**
**எஸ்.விமலேஷ், 1203 பாலையூற்று, திருகோணமலை**

தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 12 வயதிற்கு குறைந்த மாணவர்கள் மாத்திரம்

*அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு, இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

### விடுகதைகளும்

01. வானத்தில் பறக்கும் பறவை இது, ஊரையே சுமக்கும் பறவை இது
02. மின்சாரம் இல்லாமல் விடிய விடிய எரியும் பல்புகள்
03. ஊரைச் சுற்றுவார்கள், கூடித் தின்பார்கள், கறுப்புக்கோட்டு ஆசாமிகள்
04. தண்ணீரில் விரிக்கும் ஓட்டைப் பாய்
05. தலை சாய்க்க மடி தருவான் பஞ்சு நண்பன்

### விடைகளும்

01. வௌவால்
02. மின் மினிப் பூச்சி
03. காகம்
04. மீன் வலை
05. தலையணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. 10 மாணவர்களின் இடை உயரம் 125.8 செ.மீ எனின், 10 மாணவர்களினதும் மொத்த உயரம் யாது?

02. வியாபாரியொருவர் 800 முட்டைகளை வாங்கினார். அதில் பழுதடைந்த முட்டைகளினதும் உடைந்த முட்டைகளுக்குமான நிகழ்தகவுகள் முறையே 0.02, 0.05 உம் ஆகும்.
1. எத்தனை முட்டைகள் பழுதடைந்தவையாக உள்ளன?
2. எத்தனை முட்டைகள் நல்லவையாக உள்ளன?

03. இரு வட்டங்களின் பரப்பளவுகளுக்கிடையிலான விகிதம் 3:2 ஆகும். அவற்றின் விட்டங்களுக்கிடையிலான விகிதங்களைத் தருக.

04. குறித்த நாளொன்றில் தினசரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அந்நிய செலாவணி விளம்பரத்தின் ஒரு பகுதி பின்வருமாறு

சிங்கப்பூர் டொலர் - இலங்கை ரூபாய் 69.00
அமெரிக்க டொலர் - இலங்கை ரூபாய் 122.00
ஸ்டேர்லிங் பவுன் - இலங்கை ரூபாய் 210.00

1. அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி இலங்கை ரூபாவில் எவ்வளவு?
2. அன்றைய தினம் தீர்வையற்ற கடையொன்றிலிருந்து அமெரிக்க டொலர் 250க்கு விலைக்கு வாங்கப்பட்ட தொலைக்காட்சி ஒன்றின் பெறுமதி இலங்கை ரூபாவில் எவ்வளவு?
3. 25% இலாபத்தோடு விற்க வேண்டுமெனில் தொலைக்காட்சிப் பெட்டியில் குறிக்க வேண்டிய விலை யாது?
4. 5% கழிவோடு அதனை கைக்காசுக்கு வாங்க முடியுமெனில், தொலைக்காட்சிப் பெட்டிக்கு செலுத்த வேண்டிய தொகை யாது?

## பாடம் : வரலாறு



01.
1. இப் படத்தில் இருப்பவர் யார்?
2. இவருடைய கணவன் பெயர் யாது?
3. இவரது காதுகளில் இருந்து வழிந்த குருதி நனைந்த உடை எங்குள்ளது?
4. இவரைப் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்த கூட்டத்தினர் யார்?



02.
1. இப் படத்தில் இருப்பவர் யார்?
2. இவர் எங்கு மன்னனாக இருந்தார்?
3. இவர் யாரைக் கொன்றதாக வரலாறு கூறுகிறது?
4. இவரது ஆட்சிக் காலத்தில் எந்நகர் தீப்பிடித்தது?

03. இத்தாலிய இணைவின் போர்வீரன் என அழைக்கப்படும்நபர்
1. பீஸ்மார்க் 2. கரிபாஸ்டி 3. கவூண்கவுர் 4. ஜோசப் மஸினி

04. அலைச் செயற்பாடு காரணமாக குளக்கட்டின் அரிப்பைத் தடுக்கும் குளத்தின் பகுதி
1. கலிங்கற்தொட்டி 2. சுருங்கை 3. அலைதாங்கி 4. கலிங்கல்

05. பிரான்ஸிய புரட்சியை முன்னெடுத்த எழுத்தாளர்
1. வோல்டயர் 2. கரிபால்டி 3. இராஸ்மஸ் 4. தாந்தே

06. இலங்கையில் அமைக்கப்பட்ட மிகப் பெரிய தூபி
1. ருவன்வெலிசாய 2. மிரிஸவட்டிய 3. அபயகிரி 4. ஜேத்தவனராமய

ஆசிரியர் : திரு.த.ராஜ்குமார்
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## Grammar

**Complete the dialogue by selecting the most suitable word.**

Salesman : Good morning madam. Can I help you?
Customer : I'm looking for a (1) .............................. to take to my country.
Salesman : Is there (2) .................................. you like especially?
Customer : Yes, I want something different and natural.
Salesman : (3) ........................... these items you see here are made from coconut trees.
Customer : M....m.. very (4) ......................... How about that monkey?
Salesman : Oh! It's made of dry coconut husk.
Customer : I like that very much. How (5) ........................................... is it?
Salesman : It's two hundred rupees.
Customer : (6) ............................ is the money.
Salesman : Thank you very much. Come again.

1) a) souvenir b) present
2) a) anything b). something
3) a) whole b) all
4) a) beautiful b) fantastic
5) a) many b) much
5) a) There b) Here

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### பதவியல்

**பகுபத உறுப்புக்கள்**

**பகுதி** - ஒரு பகுபதத்தின் அடிச்சொல்லே பகுதியாகும். இது சொல்லின் தொடக்கத்தில் அமையும்.

**விகுதி** - சொல்லின் இறுதியில் நிற்கும் உறுப்பு திணை, பால், எண், இடம் உணர்த்துவது. சில விகுதிகள் காலத்தையும் உணர்த்துவன.

**இடைநிலை** - சொல்லின் இடையே நிற்கும் உறுப்பு. தெரிநிலை வினைச்சொற்களில் காலத்தை இது உணர்த்தும். பெயர் இடைநிலைகளும் உள. இவை காலம் உணர்த்தா.

**சந்தி** - பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும் உறுப்பு. பகுதியோடு இடைநிலை புணரும்போது, அவற்றிற்கிடையில் தோன்றுவது சந்தி.

**சாரியை** - இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே வருவது சாரியை எனும் உறுப்பு. இடைநிலையோடு விகுதி பொருத்தமாகச் சார்ந்து இயைய வருவது சாரியை எனப்படுகிறது.

**விகாரம்** - பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே வந்த சந்தி திரிந்து விகாரப்படுவது விகாரம் எனப்படும். சில சந்தர்ப்பங்களில் பகுதியும் விகாரம் அடையும்.

**பகுதி (முதனிலை)**

தெரிநிலைப் பகுபதங்களுக்குப் பெரும்பாலும் நட வா முதலிய வினைச்சொற்களும் சிறுபான்மை பெயர்ச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாக வரும். தேரிநிலை வினைப்பகுதிகள் எப்போதும் ஏவல் வடிவிலேயே வரும்.



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : விஞ்ஞானம்

01. மனிதனின் நரம்புத் தொகுதியுடன் தொடர்பு படும் இரு நிகழ்ச்சிகள் அ, ஆ ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ளன.
அ - எப்போதும் கண் இமை மூடி திறத்தல்
ஆ - மாம்பழத்தைக் காணும் போது உமிழ்நீர் சுரத்தல்

இவ்விரு நிகழ்ச்சிகள் பற்றிய சரியான கூற்றுக்கள் யாது?
1. அ, ஆ ஆகிய இரண்டும் தெரிவினைகள்
2. அ, ஆ ஆகிய இரண்டும் இச்சையின்றிய செயல்கள்
3. அ, ஆ ஆகிய இரண்டும் இச்சைவழி இயங்கும் செயல்கள்
4. அ தெரிவினையாக இருக்கும் அதேவேளை ஆ இச்சையின்றிய செயலாகும்.

02. பின்வருவனவற்றுள் எக்கட்டமைப்பு ஊத்தேக்கியாவின் குழாயினால் தொண்டையுடன் தொகுக்கப்பட்டுள்ளது?
1. நடுச்செவி 2. நுரையீரல்கள் 3. மூக்கு 4. இரப்பை

03. தெசுத்தொசுத்தெரோன் ஓமோனின் தொழில் யாது?
1. உடலில் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்
2. குருதிக் குளுக்கோசு மட்டத்தை மாறாது பேணுதல்
3. பெண்களின் துணைப்பால் இயல்புகளைக் கட்டுப்படுத்துதல்
4. ஆண்களின் துணைப்பால் இயல்புகளைக் கட்டுப்படுத்துதல்

04. ஒட்டுண்ணியைப் பின்வரும் எந்தக் கூற்று நன்கு எடுத்துரைக்கின்றது?
1. ஓர் அங்கியின் மூலம் வேறோர் அங்கிக்கு நோயைத் தோற்றுவிக்கும் தொடர்புடமை
2. இரு அங்கிகளுக்கிடையே நிலவும் இரண்டுக்கும் பயன்தரும் தொடர்புடமை
3. இரு அங்கிகளும் ஒன்றாக வாழ்ந்து கொண்டு ஓர் அங்கி மற்ற அங்கிக்கு தீங்கு பயக்கும் தொடர்புடமை
4. ஓர் அங்கி வேவோர் அங்கியை இரையாக்கிக் கொண்டு தனது சக்தித் தேவையை நிறைவேற்றிக் கொள்ளல்.

05. பின்வருவனவற்றில் எது தனியெண்களின் பாரம்பரிய இயல்பாக அமைவதில்லை?
1. உயரம் 2. நுண்மதி 3. தோலின் நிறம் 4. தசை வளர்ச்சி

06. ஓடிகள் மூலம் பதியமுறை இனப்பெருக்கம் நடைபெறும் தாவரம் எது?
1. அன்னாசி 2. சதைக்கரைச்சான் 3. வல்லாரை 4. வெங்காயம்

07. ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்கு கள்ளித் தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கம்
1. இலைகள் சதைப்பிடிப்புள்ளதாக இருத்தல்
2. இலைகள் அருகில் இருத்தல்
3. தண்டுகள் முட்களைக் கொண்டிருத்தல்
4. பரந்த வேர்த் தொகுதிகள் இருத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியத் தமிழினத்தின்...

தமிழினதின் கனவான தமிழீழ அரசைத் தற்போதைய அரசாங்கம் தாரைவார்த்துக் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டி -ருப்பதாகத் தேசிய விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற .உறுப்பினருமாகிய விமல்வீரவன்ச திருகோணமலை, நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது தெரிவித்துள்ளார்.

யுத்தக்குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டின் அனுசரணையுடனோ நடைபெற்று குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் இராணுவத்தினர் உட்பட் முன்னாள் சனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் தண்டனைக்குள்ளாவர் எனவும் அவர் அனுமானித்துள்ளார்.

"நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செய்த் அல் "ஹசைன் நாட்டிற்கு வருகை தந்து பல விசாரணைகளை மேர்கொண்டிருக்கின்றார்.

அவற்றுள் இலங்கையில் மனித உரிமை மீறல் நடைபெற்றுள்ளன, இலங்கை இராணுவத்தினரால் யுத்தக் குற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதை நிரூபிப்பதற்கான சாட்சிகள் தம்மிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இவை தொடர்பில் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் நாட்டைக் காப்பாற்றிய இராணுவத்தினர் மற்றும் முன்னைநாள் ஜனாதிபதி மகிந்த ராசபக்ச காலத்தில் அவரது பாதுகாப்பு செயலாளராக இருந்த்த கோடாபே ராசபக்ச உள்ளிட்ட பலர் தண்டிக்கப்படுவர்.

அதுமட்டுமல்லாது ஏதேனும் ஒரு நாட்டில் அந் நாட்டு ராணுவத்தின -ரால் அந் நாட்டுப் பிரசைகள் கொல்லப்பட்டிருப்பின், அதனைச் சர்வதேச விசாரணைகள் மூலம் நிரூபித்தால், குறித்த நாட்டில் தாம் வாழ்வதற்கான பாதுகாப்பு இல்லை எனக்கருதி அவ்வாறு கொல்லப்-பட்டவர்கள் தனிநாடு கோர முடியும்.

அன்று எதற்காக போராட்டம் நடைபெற்றதோ அதை இவ் அரசு நிறைவேற்றப் போகின்றது என தெரிவித்தார்

## கிழக்கு முத..

இதனையடுத்து வண.பிரபாகரன் அடிகள் மற்றும் இரா.ஸ்ரீஞானேஸ்-வரன் ஆகியோர் குச்சவெளிப் பிரதேச மீனவர் சங்கத்தினைச் சேர்ந்தவர்களைச் சந்தித்து உரையாடிய போது பல விடயங்கள் வெளித் தெரியவந்துள்ளது என அவர்கள் இருவரும் தெரிவித்தனர்.

கடந்த வருடம் பல வெளி மாவட்ட மீனவர்கள் குச்சவெளி கடற்பிரதேசத்தில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது மக்கள் போராட்டங்களில் குதித்ததுடன் அடையாம் தெரியாத சிலரால் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட படகொன்றும் எரியூட்டப்பட்டது.

அதனையடுத்து சந்தேகத்தின் பேரில் காவல்துறையால் பல தமிழ் மீனவர்கள் கைதாகித் தற்போதும் வழக்கு விசாரணையை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு கடந்த வருடம் கடுமையான போராட்டத்தை மீனவர்கள் முன்னெடுத்த போது கிழக்கு மாகாண முதலமைச்சரால் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் அவரால் 11.03.2015ல் எழுத்து மூல வாக்குறுதியொன்று வழங்கப் -பட்டுள்ளது.

அவ்வாக்குறுதியின் படி அக்காலத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வெளி மாவட்ட மீனவர்களின் 48 படகுகளும் 2015ம் வருடம் மட்டும் மீன்பிடியில் ஈடுபட அனுமதிக்கப்படும் என்றும் அதன் பின்னர் அவர்களுக்கு மீன்பிடிக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்றும் எழுதப்பட்டுள்ளது.

ஆனால் 2016ம் ஆண்டின் ஆரம்பம் முதலே நூற்றுக்கணக்கான வெளி மாவட்ட மீனவர்களின் படகுகள் மீன்பிடியில் ஈடுபடுவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போது அந்த மீன்பிடி நடவடிக்கைகளை உத்தியோக -பூர்வமாக்கும் செயற்பாடுகள் நடைபெறுவ-தாகவும் அறிய முடிகின்றது.

வெளி மாவட்ட மீனவர்களைக் கொண்டு வரும் வியாபாரிகள் சிலர் உள்ளூரில் வாழும் தமிழர்கள் சிலரின் ஒத்துழைப்புடன் அவர்களது பெயரில் படகுகளை வாங்கி உள்ளூர்ப் படகுகளாக அவற்றைப் பதிவு செய்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக்வும் தெரிய வருகின்றது என வண.பிரபாகரன் மற்றும் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் ஆகியோர் தெரிவித்தனர்.

## திருகோணமலை...

குடியேற்றங்களை மேற்கொள்ள இத்திட்டத் -தின் ஊடாக வழிசமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஊடாக திருகோணமலையை முற்றுமுழதாகத் தமிழர் தாயகத்திலிருந்து பிரித்துவிடும் சூழ்ச்சியை அரசு மேற்கொள்கின்றது. அதற்கமையவே சம்பூர் பொருளாததார வலயத்தில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கி அதற்கான ஆளணியினரைக் கிழக்கிற்கு இடம் நகர்த்தும் திட்டமும் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டது.

அவற்றினைக் கூர்ந்து அவதானித்தால் கிழக்கில் தமிழ மக்களைக் கூடுதலாகக் கொண்டுள்ள மட்டக்களப்பைத் தனிமைப்படுத்தி அம்பாறையூடாகவும் திருகோணமலையூடாகவும் குடிம்பரம்பலை நகர்த்தி கிழக்கு முழுவதையும் தமிழரிடமிருந்த பிரிக்கும் திட்டமிடலே நடைபெறுவதாக சுரேஸ் தெரிவித்தார்.

எனவே திருகோணமலையைப் பாதுகாக்க வேண்டுமானால் வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டு அப்பிரதேசம் தமிழர் தாயகமாக அங்கீகரிக்கப்பட்டு அங்கு சமஸ்டி ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதனையே தமிழ மக்கள் பேரவை வரைந்துள்ள அரசியல் அமைப்புத் தீர்வுத் திட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சரேஸ் மேலும் தெரிவித்தார்.

## சனாதிபதி தீங்கு....

...... மக்கள் முன்வைத்தனர்..

சம்பூர் நாகதம்பிரான் ஆலய முன்றலில் நடந்த இந்தச்சந்திப்புக்கு முன்னர் சம்பூர் அனல் மின்நிலையம் அமையவுள்ள இடங்களையும் அமைச்சர் பார்வையிட்டுள்ளார்.

இந்த வருகையின் போது அமைச்சரைச் சந்தித்த மீள்குடி-யேற்றப்பட்ட மக்கள் குறித்த அனல் மின்நிலையத்தை வேறிடத்திற்கு மாற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பூர் அனல் மின் நிலையத்தின் கழிவுநீரைக் கடல் வளங்களுக்கு பாதிப்பு இல்லாமல் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் இங்கு பதிலளித்தார். அதனை மக்கள் ஏற்கவில்லை.

மேலும் இங்கு கருத்து வெளியிட்ட மக்கள் " ஊர்மக்கள் வாழும் பகுதியில் இவ்வனல் மின்நிலையம் அமைவதனைத் நாம் விரும்ப வில்லை. மீன்பிடி மற்றும் விவசாய வளமுள்ள இப்பகுதியில் வேறேதாவது அபிவிருத்தி முயற்சிகளைச் செய்யுங்கள். நாம் எதிர்க்கவில்லை. காணிபற்றிய பிரச்சனைகளையும் நாம் முன்-வைக்க வில்லை.

ஆனால் நீண்டகால நோக்கில் இந்தப் பிரதேசத்திற்கே பாதிப்பை உண்டுபண்ணக் கூடிய இத்திட்டத்தை வேறெங்காவது மாற்றுங்கள். நாங்கள் அபிவிருத்தி திட்டங்களை தடுக்கவில்லை.

நாங்கள் தற்போதைய ஜனாதிபதியை ஆதரிக்கின்றோம். அவரது செயற்பாட்டில் நம்பிக்கை வைத்துள்ளோம். அனல் மின்நிலையத் திட்டத்தினை இந்த வளமுள்ள பகுதியில் ஏற்படுத்தி எமது எதிர்காலச் சந்ததியின் வாழ்வை சீரழிக்காதீர்கள். எழுபத்தியிரண்டிற்கும் அதிகமான குளங்கள் இங்கு உள்ளன. இவற்றுள் அறுபத்திநான்கு குளங்கள் ஊடாக வழங்கப்படும் நீரைக்கொண்டு ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் வயல் செய்கை பண்ணப்படுகின்றன.

இவ்வாறான நெல் வளம் கொழிக்கும் இவ்விடத்தில் அழிவைத் தரக்கூடிய இத்திட்ட -த்தை ஏன் திணிக்கின்றீர்கள்?"

இந்தச் சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப், மாகாண சபை உறுப்பினர் கு.நாகேஸ்வரன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கே.நாகேஸ்வரன் மற்றும் ஊர்த் தலைவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## விடுதலையானோர்...

"கடந்த இரண்டு மாதங்களாக பயங்கரவாத்தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பான எந்தவொரு கலந்துரையாடலும் நீதி அமைச்சில் நடைபெறவில்லை. அவ்வாறே அப்பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுப்பிலுள்ளவர்களை விடுதலை செய்வது தொடர்பாகவும் எவ்வித நடவடிக்கைகளும் முன் நகர்த்தப்படவில்லை. இவை தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையையும் சட்டமா அதிபர் திணைக்களமும் மேற்கொள்ளவில்லை" என்றார் அவர்.

சனாதிபதியும், பிரதம மந்திரியும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை மாற்றியமைப்பதில் அக்களையுடையவர்களாக இருக்கிள்ற போதிலும் நீதி அமைச்சர் அவ்விடயத்தில் அலட்டிக்கொள்ளாத மனநிலையுடன் இருப்பதாக தென்னக்கோன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

"நம்பத்தகு ஆதாரங்களின் அடிப்படையில் சுமார் இருபத்திநான்கு தொடக்கம் இருபத்தியேடு தடுப்பில் உள்ளவர்கள் விடுவிக்கப்படக்கூடிய வாய்ப்புக்களை" அதிகமாகக் கொண்டிருப்பதாகவும் தென்னக்கோன் தெரிவித்தார்.

அனைவரும் தொடர்ந்து முயற்சித்தால் மட்டுமே பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை மாற்றியமைக்க முடியும். அதனூடாகவே தடுப்பிலுள்ளவர்களை விடுவிக்க முடியும். அதனை அனைவரும் அனைத்துத் தளங்களிலும் முயற்சிக்க வேண்டும் என்றார் அவர்.

## நுரைச்சோலை...

இன்று காலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்

மேலும் சம்பூர் பகுதியில் அமைக்கப்படவிருக்கின்ற அனல் மின் நிலையம் தொடர்பில் அவற்றின் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். குறிப்பாக மின் நிலையத்தின் கழிவு நீரை கடற்கரையில் வெளியிடாமல் சற்றுத் தொலைவில் கடலினுள் அனுப்புவதற்கும், கழிவுப் புகையினை வெளியேற்ற பயன்படும் குழாய்களின் நீளத்தினை அதிகரித்து அவை வெளியேறும் பரப்பினை மாற்றி அமைக்கப்படும். மேலும் கழிவு சாம்பல்களை பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கும் உத்தேசித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## சுதேச மருத்துவத் துறையில் வேலை வாய்ப்பு

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழுள்ள ஆரம்பமட்ட பகுதி தேர்ச்சிபெற்ற சேவையைச் சேர்ந்த ஊழியர்கள் பதவிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுடனான சந்திப்பின் போது, நுரைச்சோலை அனல் மின் நிலையத்திற்கு நடைபெற்ற விடயம் தொடர்பில் கவனத்தில் கொண்டு அவதானத்துடன் செயற்படுமாறு ஜனாதிபதி தெரிவித்ததாகவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

## அரசியல்....

ஈடுபட்டனர்.

இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரசாங்கத்தின் உறுதிமொழிக்கு அமைய அவர்கள் உண்ணாவிரத போராட்டத்தை கைவிட்டனர்.

எனினும் அரசாங்கம் தமக்கு வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்ற தவறியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வழக்கு தாக்கல் செய்யாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் வழக்குகளை துரிதப்படுத்துமாறு கோரியுமே இவர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டவுள்ளனர்.

## மகளிர் சமாசம் அறிக்கை

"உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான வட்டாரமுறை எல்லை நிர்ணயத்தில் திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச சபையின் எல்லைகள் வரும். சிறாஜ் நகர் கிராம சேவகர் பிரிவில் உள்ள ஒரு கிராமமான மயில்தீவு கிராமம் பிரிக்கப்பட்டு அல்ஹ்சா நகர் மற்றும் தங்க நகர் கிராமங்களுடன் இணைத்து முள்ளிப் பொத்தானை கிழக்கு வட்டாரத்துக்குள் உள்வாங்கப்படுவதனால், மயில்தீவு கிராமம் தமது பிரதிநிதித்துவத்தை இழப்பதுடன், தமது அபிவிருத்தியிலும் பின்னிற்க வேண்டிய நிலை ஏற்படும் என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, இந்த நிலையை மாற்றுமாறு திருகோணமலை மாவட்ட பெண்கள் சமாசம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமையல் சமையல்

## நாட்டுக் கோழி பாசுமதி பிறியாணி

**தேவையான பொருட்கள்**

பாசுமதி அரிசி – 600 கிராம், நாட்டுக்கோழி - அரை கிலோ, வெங்காயம் – கால் கிலோ, எண்ணெய் – 100 கிராம், தக்காளி – 150 கிராம், ஏலக்காய், பட்டை, கிராம்பு – தலா 5, பச்சைமிளகாய் – 12, எலுமிச்சைச்சாறு – 1 கரண்டி, இஞ்சி பூண்டு விழுது – தலா 75 கிராம், தயிர் – 50 மில்லி, நெய், முந்திரிப்பருப்பு – தலா 50 கிராம், புதினா, கொத்தமல்லி, உப்பு – சிறிதளவு

### செய்முறை



அகலமான பாத்திரத்தில் சிறிதளவு எண்ணெய், ஏலக்காய், பட்டை, கிராம்பு, முந்திரிப் பருப்பு, வெங்காயம், பச்சைமிளகாய், போட்டு வதக்கவும். வெங்காயம் நன்றாக வதங்கி கபில நிறத்திற்கு மாறிய பிறகு இஞ்சி பூண்டு விழுது, தயிர், தக்காளி, உப்பு, துப்புரவு செய்யப்பட்ட கோழி இறைச்சி, 4 கப் தண்ணீர் என்பவற்றை சேர்த்து நன்றாக கிளறி விட்டு மூடி வேக விடவும். இறைச்சி நன்றாக வெந்ததும் அதனுள் புதினா, கொத்தமல்லி, எலுமிச்சைச்சாறு இட்டு மீண்டும் கிளறி மூடி வைக்கவும்.

பின் ஒரு கொதி வந்ததும் ஊற வைத்து வடித்த அரிசியைச் சேர்த்து பாதியளவு வெந்ததும் நெய் சேர்த்து கிளறி 20 நிமிடம் மெல்லிய தணலில் வைத்து இறக்கவும்.

## பல நோய்களை கட்டுப்படுத்தும் கொய்யா இலை

பல்வேறு வகையான நோய்களுக்கு இலகுவான மருந்தாக காணப்படுகிறது கொய்யா இலை.

கொய்யா இலைகளை கொதி நீரில் போட்டு கஷாயமாக்கிக் குடித்தால், உதிரப் போக்கு தடைபடும். மேலும் கொய்யா இலை கஷாயத்தை தினமும் வெறும் வயிற்றில் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் தைராய்டு சுரப்பு சமநிலைக்கு வரும்.

கொய்யாப் பழம் மலச்சிக்கலைப் போக்கும். கொய்யா இலை கஷாயம் வாந்தி பேதியைத் தடுக்கும். ஈறுகளில் வீக்கம் ஏற்பட்டால் கொய்யா இலையைக் காய்ச்சி கொப்பளிக்கலாம்.

கொய்யா இலைகள் மூலம் தயாரிக்கப்படும் கஷாயம் இருமல், தொண்டை மற்றும் இதய சம்பந்தமான நோய்களுக்குத் தீர்வு தருகின்றன.

கொய்யா மரத்தின் இளம், புதுக் கிளைகளின் இலைகள் மூலம் தயாரிக்கப்படும் கஷாயம் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும்.

கொய்யா இலைகளை வாயில் போட்டு மென்றால், வயிற்றுப் புண், பல் வலி நீங்கும்.

## தற்கொலை என்பது மன நோயா??!!

தற்கொலைகள் தொன்றுதொட்டு நிகழ்பவை - மனிதன் தோன்றிய நாளிலிருந்து, தானே தன்னுயிரை மாய்த்துக் கொள்ளுவதும் நடந்தே வந்திருக்கிறது.

மாணவப் பருவத்தினர் உயிரை மாய்த்துக் கொள்ளுவது மனத்தை இறுக்குவது. தற்கொலை என்பது ஒரு வியாதி என்பதையும், அதுகுறித்த தவறான எண்ணங்கள் மக்களிடையே நிலவுகின்றது.

சின்ன வயதில், எங்கள் தெருவில் நிகழ்ந்த ஒரு தற்கொலை பற்றி என் பாட்டியும், மாமியும் ரகசியமாகக் கிசுகிசுத்தவை (குழந்தைகளுக்குத் தெரியக் கூடாதாம்!) அவ்வளவு தெளிவாக நினைவில் இல்லை. கணவன் மீது சந்தேகம் என்ற தொனியில் ஒரு கருத்து மங்கலாக நினைவில் நிழலாடுகிறது!

லாட்ஜ் ஒன்றில் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்ட ஒரு டாக்டரை நான் அறிவேன். எப்போதும் அமைதியாக, எல்லோருடனும் நட்புடன் எங்களுடன் வலம் வந்தவர்- ஒருவார இறுதியில் இப்படி வாழ்வை முடித்துக் கொண்டார். நிதி நிலையால் ஏற்பட்ட மன அழுத்தம்?

டாக்டர் இந்தப் பேஷண்டுக்கு ஊசி வேணாமாம் - பயமாம் சார் என்று முதல் நாள் பேசியவள், பயமின்றி மறுநாள் தற்கொலை! இந்தக் காதல் வேண்டாம், சரியா வராதுன்னு அப்பவே சொன்னேன் சார் அவகிட்ட என்றாள் அவள் தோழியான இன்னொரு நர்ஸ். கல்யாண மாலை விழ வேண்டிய கழுத்துக்கு சுருக்குக் கயிறை தேர்ந்தெடுத்துக் கொண்டாள் அவள்.

கலை உணர்வு உடையவர்கள் - ஓவியர்கள், ஆர்கிடெக்ட்ஸ், இசைக் கலைஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆகியோர் அதிக அளவில் தற்கொலை செய்து கொள்வதாக ஒரு புள்ளிவிபரம் சொல்கிறது.

பிரபல நடிகர், நடிகைகள் தற்கொலை செய்து கொள்வது சினிமா ஆரம்பித்த காலம் தொட்டே தொடர்ந்து வருவது! எல்லாம் வாழ்வின் சோகங்களினால் வந்த மன இறுக்கங்கள்.......

தொடரும்...

## அழகாய்த் திகழ சில டிப்ஸ்



**செயற்கை பொருட்களை விடுத்து வீட்டில் காணப்படும் பொருட்களை வைத்தே சிக்கனமான முறையில் அழகைப் பெற்றுக் கொள்ள சில டிப்ஸ்:**

**அழகு குறிப்பு**



- சர்க்கரையை தேன், ஆலிவ் ஆயில் அல்லது தேங்காய் எண்ணெய் சேர்த்து கலந்து, சருமத்தில் தடவி மென்மையாக 10 நிமிடம் மசாஜ் செய்து கழுவினால் சருமம் பொலிவடையும்,
- முட்டையின் வெள்ளை கருவில் ஆலிவ் ஆயில் சேர்த்து மசாஜ் செய்தால் பளிச்சென்று மாறும்.
- தினமும் இரவில் ஆலிவ் ஆயிலுடன் ரோஸ் வாட்டர் கலந்து மசாஜ் செய்து வந்தால் பொலிவாக இருக்கும்.
- தக்காளியை கொண்டு மசாஜ் செய்யும் போது அழுக்குகள், அதிகப்படியான எண்ணெய் பசை முற்றிலுமாக நீங்கிவிடும்.
- பாலுடன் ஓட்ஸை சேர்த்து முகத்தில் மசாஜ் செய்துவர நல்ல பலன் கிடைக்கும்.
- வெள்ளரிக்காயை கண்களில் சிறிது நேரம் வைத்து அமைதியாக உட்கார்ந்தால், கண்களில் இருக்கும் சோர்வு நீங்கி, கரு வளையங்களும் நீங்கிவிடும்.
- வாரத்திற்கு இருமுறையேனும் ஆவி பிடித்து வந்தால் முகம் பொலிவாக இருக்கும்.
- சத்துக்கள் நிறைந்த பழங்களான மாம்பழம், பப்பாளி, எலுமிச்சை, திராட்சை, ஸ்ட்ரா பெர்ரி போன்றவற்றை கொண்டு மாஸ்க் போட்டால் முகத்தில் உள்ள அழுக்குகள், கருமை நீங்கிவிடும்.
- தினமும் காலையில் எழுந்ததும், கைகள் மற்றும் கால்களுக்கு கடுகு எண்ணெய் கொண்டு, மசாஜ் செய்து பின் குளிக்க வேண்டும். இதனை தொடர்ந்து தினமும் செய்து வந்தால், கைகள் மென்மையாக, முடியின்றி இருக்கும்.






**டாக்டர், எனக்கு என்ன செய்யுதென்று சொல்லத் தெரியல்ல பயப்படாதே எனக்கும் தான் எப்பிடி ஒபரேஷன் செய்யப் போறன் என்றே தெரியல்ல. நானும் உன்னை மாதிரி பயந்து கொண்டா இருக்கிறன்?**

புழுவிற்கு மீன் ஆசைப்பட்டது



மீனிற்கு மனிதன் ஆசைப்பட்டான்



மீனிற்கு புழு கிடைத்தது



மனிதனுக்கு மீன் கிடைத்தது





புழுவிற்கு ... ?

காத்திருந்தது புழு கடைசியில் மனிதன் வரும் வரை




## இடது கையில் அணிவதேன்???



திருமண பந்தத்தில் இணைய விருக்கும் ஆண், பெண் இருபாலரும் தங்கள் விரல்களில் ஒருவருக்கொருவர் மோதிரத்துடன் இதயங்களையும் மாற்றிக் கொள்கின்றனர். ஆனால், காலங்காலமாக இடது கையில் உள்ள மோதிர விரலில் தான் திருமண மோதிரத்தை அணிய வேண்டும் என்ற கருத்து நிலவிவருவதோடு மட்டுமல்லாமல் அனைவரும் இதனை பின்பற்றியும் வருகிறார்கள்.

ஆனால் அறிவியல் ரீதியாக பார்த்தால், இரத்த ஓட்ட அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்து நடாத்தப்பட்ட ஆராய்ச்சியில், இடதுகை மோதிர விரலில் உள்ள நரம்பு நேரடியாக இதயத்துடன் இணைகிறது. இதனை "காதல் நரம்பு" என்று அழைக்கின்றனர், அதாவது இந்த நரம்பின் மூலம் பரிமாறப்படும் அன்பு நேரடியாக இதயத்திற்கு சென்று சேர்கிறது என்று நம்பப்படுகிறது.

ஆனால், திருமண மோதிரத்தை இடது கையில் தான் அணிய வேண்டும் என்று எவ்வித சட்டமும் இல்லை,

வடக்கு ஐரோப்பிய நாடுகளில், திருமண ஜோடிகள், வலது கையில் மோதிரம் அணிகின்றனர்.

ஆஸ்திரியா, டென்மார்க், போலந்து, ஜேர்மன் போன்ற நாடுகள் இந்த வலது கை கலாசாரத்தையே பின்பற்றுகின்றனர். ஜேர்மனிய ஜோடிகள், திருமணத்திற்கு முன்னர் இடது கையிலும், திருமணத்தின் பின்னர் வலதுகையிலும் மாற்றிக் கொள்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி

### – ஸ்ரீ வாணி வித்தியாலயம்

சேனையூர் நிருபர்

திருகோணமலை **பாலையூற்று ஸ்ரீ வாணி வித்தியாலய** வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி கடந்த 12ம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. இப்போட்டிக்கு விருந்தினரான கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் மற்றும் பாடசாலை அதிபர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பல்வேறு போட்டிகளை தாங்கிச் சென்ற இவ்விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு விருந்தினர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன.





# விளையாட்டு முரசு

## சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி

### சம்பியனானது சுகாதார திணைக்கள கழகம்

**அம்பாறை** மாவட்ட அரச திணைக் களங்களுக்கிடையான 2016ம் ஆண்டுக்கான சிநேகபூர்வ மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் கடந்த வியாழக்கிழமை நடாத்தப்பட்டது. திருக்கோவில் உதயசூரியன் விளையாட்டு திடலில், பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியில், 08 அரச திணைக்களங் களைச் சேர்ந்த கழகங்கள் பங்கு பற்றின.

இக்கிரிக்கட் சுற்றுப்போட்டியில் இறுதி போட்டிக்கு சுகாதார திணைக்களமும், திருக்கோவில் பிரதேச செயலகமும் தெரிவாகியிருந்தனன. இதன்போது சுகாதார திணைக்கள அணி முதலில் துடுப்பெடுத்தாடி பத்து ஓவர்களில் எட்டு விக்கெட் இழப்புக்கு 57 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய திருக்கோவில் பிரதேச செயலக அணி, எட்டு விக்கெட்டுக்களை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றதுடன் சுகாதார திணைக்கள அணி ஏழு ஓட்டங்களால் 2016ஆம் ஆண்டுக்கான அரச திணைக்களங்களுக்கிடையிலான சிநேகபூரவ கிண்ணத்தை வெற்றி கொண்டு சம்பியனானது.

## 90 மில்லி. கைமாற்றம்

உதைப்பந்து

**2011** முதல் 2013 ஆம் ஆண்டு வரை நெய்மர் மற்றும் அவரது குடும்பத்தினர் சார்ந்த வர்த்தகம் தொடர்பாக 16 மில்லியன் டொலர்கள் வரி ஏய்ப்பு செய்ததாக முறைப்பாடு முன்வைக்கப்பட்டது.




இதனையடுத்து, பிரேசில் நீதிமன்றம் சுமார் 50 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள அவரது சொத்துக்களை முடக்க உத்தரவிட்டுள்ளது. முடக்கப்பட்ட நெய்மரின் சொத்துக்களில் அவருக்குச் சொந்தமான ஒரு படகும் விமானமும் அடங்கும்.

கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி மேட்ரிட் நீதிமன்றத்தில் நெய்மர் மற்றும் அவரது தந்தை ஆகியோரிடம் நெய்மர் பார்சிலோனா அணிக்கு மாறியதற்குக் கைமாறிய தொகை குறித்து கடும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. நெய்மரை ஒப்பந்தம் செய்ய பார்சிலோனா கிளப் சுமார் 90 மில்லியன் டொலர்கள் செலவிட்டுள்ளது.

## நடுவர் சுட்டுக் கொலை

கால்பந்து

**அ**ர்ஜென்டினாவில் உள்ள கோர்டோபா மாகாணத்தில் உள்ளூர் அணிகளுக்கிடையில் நடந்த கால்பந்து போட்டியில் ஒரு வீரர் எதிர் அணி வீரரரிடம் முரட்டுத் தனமாக நடந்து கொண்டதால் அவருக்கு நடுவர் சிவப்பு அட்டை காட்டி அவரை மைதானத்தை விட்டு வெளியேற்றினார். இதனால் ஆத்திரம் அடைந்த அந்த வீரர், தனது காரில் இருந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டு மைதானத்தில் இருந்த நடுவரை சரமாரியாக சுட்டுள்ளார்.

இதில் நடுவரின் தலை, கழுத்து, மார்பு பகுதியில் குண்டு பாய்ந்தது. மேலும், வீரர் ஒருவரின் மீதும் குண்டு பாய்ந்துள்ளது. நடுவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். மற்றொரு வீரர் காயத்துடன் உயிர்தப்பினார்.

## டி 20 உலகக் கிண்ண போட்டிகளை தவறுமாயின் அபராதம் விதிக்கப்படும்

கிரிக்கட்

**இ**ந்தியாவில் அடுத்த மாதம் டி20 உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பாகிஸ்தான் அணி பங்கேற்காவிட்டால் ஐசிசி அபராதம் விதிக்கும் என பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர் 'கார்யார் கான் தெரிவித்துள்ளார். இந்நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வாரியத் தலைவர் "கார்யார் கான் கூறுகையில், டி20 தொடரில் பங்கேற்பது தொடர்பாக பிரதமர் அலுவலகத்துடன் பேசினேன். இதுவரையிலும் அனுமதி தரவில்லை, மேலும் இந்தியாவில் உள்ள நிலையை மீளாய்வு செய்து வருவதாகவும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஒருவேளை போட்டியில் பங்கேற்காவிட்டால் ஐசிசி அபராதம் விதிக்கும் என்பதை தெரிவித்துள்ளோம், அனுமதி வழங்கினால் மட்டுமே அணி போட்டிகளில் பங்கேற்கும்" என்று தெரிவித்துள்ளார்.




## உலகின் முதல்நிலை வீரர் மெஸ்ஸி

உதைப்பந்து

**பா**ர்சிலோனாவின் லியனொல் மெஸ்ஸி, லா லிகா தொடரின் 300 கோல்களைப் பெற்ற முதலாவது வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். ஸ்போர்ட்டிங் கிஜோன் அணிக்கெதிராக இடம்பெற்ற போட்டியில், 299 கோல்களுடன் களமிறங்கிய மெஸ்ஸி, 25ஆவது நிமிடத்தில் பெற்ற கோலின் உதவியுடன், 300ஆவது கோலைப் பெற்றார். அப்போட்டியின் 31ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலையும் பெற, 301 அவர், கோல்களை அவர் மொத்தமாகப் பெற்றுள்ளார்.

இதன்படி, லா லிகா வரலாற்றில், அதிக கோல்களைப் பெற்றவர்கள் பட்டியலில் தனது முதலிடத்தை, லியனல் மெஸ்ஸி, ஸ்திரப்படுத்திக் கொண்டார். 334 போட்டிகளில் விளையாடியுள்ள லியனல் மெஸ்ஸி, 301 கோல்களைப் பெற்றுள்ளார். இரண்டாவது இடத்தில், அத்லெட்டி பில்பாவோ அணியின் பிரபல முன்னாள் நட்சத்திரம் தெல்மோ ஸர்றா காணப்படுகிறார். மூன்றாவது இடத்தில், கிறிஸ்டியானோ ரொனால்டோ (224) காணப்படுகிறார்.

## "பழி தீர்த்தே ஆகுவேன்"

### ஒலிம்பிக்கில் 100 மீற்றர் ஓட்டத்தில்

தடகளம்

**உ**லகின் அதிவேக மனிதர் என்றழைக்கப்படுபவர் ஜமேக்கா ஓட்டப்பந்தய வீரர், 29 வயதான உசேன் போல்ட். 100 மீற்றர் ஓட்டத்தில் ஒலிம்பிக் மற்றும் உலக தடகளத்தில் அசைக்க முடியாத சக்தியாக விளங்கி வருகிறார். கடந்த ஆண்டு சீனாவில் நடந்த உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியின் போது 100 மீற்றர் ஓட்டத்தில் உசேன் போல்ட்டுக்கு, அமெரிக்க முன்னணி வீரர் ஜஸ்ரின் கெட்லின் கடும் நெருக்கடி கொடுத்த போதிலும் அவரது ஆதிக்கத்தைத் தடுக்க முடியவில்லை. போல்ட் 9.79 வினாடியிலும் கெட்லின் 9.80 வினாடியிலும் இலக்கை கடந்தனர்.

இந்நிலையில் ஆகஸ்ட் மாதம் பிரேசிலில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் உசேன் போல்ட்டைப் பழிதீர்ப்பேன் என்று 34 வயதான ஜஸ்ரின் கெட்லின் சபதம் எடுத்துள்ளார். கெட்லின் அளித்த பேட்டியில் 'ஒலிம்பிக்கில் முக்கிய பந்தயமான 100 மீற்றர் ஓட்டத்தில் மிகப்பெரிய எதிரியைத் தோற்க டிப்பது என் கடமை. கடந்த ஆண்டு உலக தடகளத்தில் நூலிழை வித்தியாசத்தில் உசேன் போல்ட்டிடம் தோற்றேன். நூலிழை யில் தோற்றதால் இன்னும் சிறப்பாக செயல்படுவதற்கு கடினமாக உழைத்துவருகிறேன்' என்றார்.

## எங்கே நடக்கும்

ஒலிம்பிக்

**நா**ன்கு ஆண்டுகளுக்கொரு முறை நடைபெறும் ஒலிம்பிக் போட்டி இந்த ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டி பிரேஸிலில் நடக்க வுள்ளது. 2020ம் ஆண்டு ஜப்பானில் நடக்கிறது. 2024 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக்கை நடத்த பாரிஸ், இத்தாலி) (அமெரிக்கா, ஹங்கேரி ஆகிய நகரங்கள் போட்டி போட்ட வண்ணமுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையைக் காப்பற்ற வேண்டும்


சுரேஸ் பிரேமச்சந்திரன்

திருகோணமலையைத் தக்கவைக்க வேண்டுமாயின் தமிழ் மக்கள் பேரவையால் முன்மொழியப்பட்டுள்ள அரசியல் அமைப்புத் திருத்தங்களுக்கான வரைபை அரசை ஏற்றுக்கொள்ளச் செய்வதன் ஊடாகவே சாத்தியமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈபிஆர்எல்எவ் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை நகரில் குளக்கோட்டன் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற தமிழ் மக்கள் பேரவையின் மக்கள் கருத்தறியும் கலந்துரையாடலில் இக்கருத்தை அவர் தெரிவித்தார்.

பெருநகரத் திட்டம் என்னும் திட்டத்தின் ஊடாக திருகோணமலை மாவட்டத்தைக் கிழக்கில் இருந்து பிரித்து ஆனராதபுரம், தம்புள்ளை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களுடன் இணைத்து வட மத்திய பாரிய பிராந்தியம் என்னும் அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்க அரசு முடிவெடுத்துள்ளது.

அம்முடிவின் படி அடுத்துவரும் 15 ஆண்டுகளுக்குள் திருகோணமலை மாவட்டத்தின் சனத்தொகையை ஒரு மில்லியனாக உயர்த்தும் வகையில் பக் 17

# சம்பூரில் மக்களை வெளியேற்ற வழக்கு

திருகோணமலை - சம்பூர் அனல்மின் நிலையத்திற்காக ஒதுக்கப்பட்ட காணிகளிலிருந்து மீளக்குடியேறிய மக்களை வெளியேற்றும் சட்ட நடவடிக்கையை மூதூர் பிரதேசச் செயலகம் முன்னெடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

அதற்கமைய எதிர்வரும் மார்ச் மாதம் 3ம் திகதி தமது காணிகளில் இருந்து வெளியேறும் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள நீதிமன்றுக்கு வருமாறு மூன்று குடும்பங்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலேய காலத்திலிருந்து வழங்கப்பட்ட உறுதிக் காணியிலிருந்து தன்னை வெளியேற்றுவதற்காகவே தனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக சம்பூரில் மீள் குடியேறிய வைரமுத்து அருமைத்துரை தெரிவித்தார்.

மூதூர் நீதிமன்றத்திலிருந்து மார்ச் மாதம் 3ஆம் திகதி 9 மணிக்கு நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு தனக்கு அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

சம்பூர் அனல் மின் நிலையம் காரணமாக 25இற்கும் மேற்பட்ட குடியிருப்பு காணிகளிலிருந்து மக்கள் வெளியேறவேண்டிய நிலையிலுள்ளதாகவும், எனினும் தனது காணியை முற்றுமுழுதாக இழக்கும் நிலையுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அனல் மின்நிலையத்திற்கான நீர் செல்லும் குழாய் தனது காணியூடாக செல்வதாகவும் தம்மை உடனடியாக காணியிலிருந்து வெளியேறுமாறு தெரிவித்ததாகவும், எனினும் தான் மாற்றுக்காணியைக் கோரியதாகவும் அதனைக் கூட தரமுடியாது என அரச அதிகாரிகள் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமக்கு எந்தவொரு கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது என தெரிவித்ததாகவும் தற்போது கூட சமுர்த்தி நிவாரணத்தை தவிர தமக்கு வேறு கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லை எனவும் அவர் கூறினார்.

# விடுதலையானோர் அடையாள அட்டையைப் பெறத் தடை...?

வடக்குகிழக்கில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதாகிப் பல ஆண்டுகள் சிறையிலடைக்கப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்டுவரும் தமிழர்கள் தமது அடையாள அட்டையினைப் பெற்றுக்கொள்ளக் கடும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆய்வகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான ரஞ்சித் தென்னக்கோன் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

''சமூகத்துடன் மீள இணைந்துகொள்ளும் ஆர்வத்துடன் தமது வாழ்விடங்களுக்கு வருகை தந்துள்ள இவர்களுக்கு வழங்கவேண்டிய அடையாள ஆவணங்களை வழங்க பிராந்திய அலுவலர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளமையானது அவர்களைச் சமூகத்துடன் இணைக்கும் செயற்பாட்டைப் பெரிதும் பாதித்துள்ளது'' என தென்னக்கோன் அறிக்கையிட்டுள்ளார். பக் 17

# "நுரைச்சோலை போல் சம்பூரில் நிகழாது" கிழக்கின் ஆளுனர் உறுதி??



சம்பூர் விதுர கடற்படையினர் வசமிருந்து விடுவிக்கப்படாத 237 ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள சம்பூர் மகாவித்தியாலயம், எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னதாக விடுவிக்கப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் அமைந்துள்ள அவரது காரியாலயத்தில் பக் 17


முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்


SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையான ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி, திருகோணமலை. 0777 555 738


# அரசியல் கைதிகள் 22ல் போராட்டத்தை ஆரம்பிப்பர்



பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சிலர் மீண்டும் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். தமக்கான விடுதலையை வலியுறுத்தி இரண்டு தடவைகள் உண்ணாவிரத போராட்டத்தில் அரசியல் கைதிகள்

இவ்வாரஇதழ் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 19.02.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org